# சிரித்திரன்







ஒருவர்: நீங்களும் பெரிய காந்தி பக்தன் போல ..
மற்றவர்: அது சுவரில் உள்ள வெடிப்பை மூடி மறைக்க மாட்டியிருக்கு.

வது ஆண்டு மலர்
ஐப்பசி 1969
விலை ரூபா 1/-

BEST QUALITY DIAMONDS & SOVEREIGN GOLD.

**GEM HOUSE JEWELLERS,**

62, Sea St, Pettah.
PHONE: 23753.

307, Galle Rd, Wellawatte.
PHONE: 82593.

உங்களுக்குத் தேவையான

■ வானெலி உபகரணங்கள், உதிரிப்பாகங்கள்,
■ ஒலிபெருக்கி உபகரணங்கள், உதிரிப்பாகங்கள்,
■ ரான்சிஸ்டர் வானெலிப் பெட்டிகள்

யாவிற்கும் இன்றே விஜயம் செய்யுங்கள்

ரேடியோவிஷன் (எலக்ரோனிக்ஸ்) கம்பனி

145, நொரிஸ் வீதி, கொழும்பு-11.

அத்துடன் உங்கள் பற்றரி வானெலியிப் பெட்டிகளை ரான்சிஸ்டரில் இயங்க புதிய முறையில் மாற்றம் செய்து கொடுக்கப்படும். விபரங்களுக்கு இன்றே தொடர்புகொள்ளுங்கள். ■ ■

மனத்திற்குகந்த எடுப்பான ஆடைகளைப் பெற

இன்றே விஜயம் செய்யுங்கள்

கே. வெங்கடேசன்,

84, இரண்டாம் குறுக்குத் தெரு, கொழும்பு-11

போன்: 22934

எமது நல்வாழ்த்துக்கள்!

□
□
□

# செல்லமுத்தாஸ்,

130, இரண்டாம் குறுக்குத் தெரு, கொழும்பு.

## சமூகதீபம்

கலை இலக்கிய சமூக விஞ்ஞான
மாதாந்த சஞ்சிகை

- அறிவுக்கினிய கருத்துக்கள்,
- இனிமைக்குகந்த கதைகள்,
- கருத்துக்குச் சிறந்த கட்டுரைகள்.

எங்கும் கிடைக்கும்: இன்றே வாங்கிப் படித்து
இன்புறுங்கள்.

விபரங்களுக்கு:

நிர்வாகி, ''சமூகதீபம்''
15, டி, அல்விஸ் பிளேஸ், தெஹிவளை.

கண்ணைக் கவரும் வர்ண ஆடைகளுக்கு

**SAREE EMPORIUM**

**124 K.K.S Rd., JAFFNA.**



*With best Compliments of*

**NAGENDRA TRADING CO.**

Naga Building,

P.O.Box:1623, 81 2/5, Prince Street,

**Colombo-11**


PHONE, *22044*

Cable: **Jeyraj**

# ஆச்சி பயணம் போகிறாள்









செங்கை ஆழியான் எழுதிய 'ஆச்சி பயணம் போகிறாள்' என்னும் தொடர் ஹாஸ்ய நாவல் அடுத்த இதழிலிருந்து ஆரம்பமாகிறது.


# சிரித்திரன்

ஐப்பசி 1969

5-வது ஆண்டு
மலர்

நகை: ~~12~~ 5

சுவை: ~~5~~ 12




சிரித்திரனுக்கு இப்பொழுது ஆறுவது வயது ஆரம்பித்திருக்கிறது. ஐந்து வருடங்கள் நோயின்றிப் பிணியின்றி உயிராபத்து எதுவுமின்றி நிலைத்து வாழ்வது, ஈழத்துப் பத்திரிகை உலகில் ஒரு பெரிய ஆயுசுதான். சிரித்திரன் இந்த வகையில் ஒரு சாதனையை ஈட்டியிருக்கிறன். இதற்குக் காரணம் சிரித்திரனின் சிறப்பியல்பு மட்டுமன்றி, வாசகர்களின் வரவேற்புந்தான்.

புதுமையான, புரட்சிகரமான பாணியில், மக்களின் உள்ளத்தை ஊடுருவும் உள்ளடக்கத்தைக் கொண்டு, சிரித்துக்கொண்டே சிந்திக்கத் தூண்டும் கருத்தோவியங்களுடன் இன்று தமிழுலகில் வெளிவரும் ஒரே ஏடு சிரித்திரன் தான். சிரித்திரனின் வெற்றியின் இரகசியம் இதில்தான் உண்டு. மக்களின் பசியை அறிந்து அதற்கு ஏற்றவகையில் ருசியான, சலிக்காத, புதிசான 'உணவை' அளிப்பதில் சிரித்திரன் சாமர்த்தியசாலி. அதனுல் அவன் என்றும் வாசகர்கள் தேடிப் புசிக்கும் ஓர் அரிய விருந்தாக விளங்குவான் என்பதில் ஐயமில்லை.

சிரித்திரனின் மூச்சு தமிழ் மக்களின் மூச்சு. தமிழனின் ஆன்மாவை ஆயிரம் கோணத்தில் அளந்து காட்டுவதுதான் சிரித்திரனின் இலட்சியம். மக்களுக்காக, மக்களைப் பற்றி, மக்களை மகிழ்விக்க வெளியாகும் சிரித்திரனுக்கும் மக்களிடையே மகத்தான ஆதரவு கிடைக்குமென்பது எமது நம்பிக்கை. இந்த அசையாத நம்பிக்கையின் அத்திவாரத்திலே சிரித்திரனின் தளராத எதிர்காலத்தை கட்டி எழுப்பிவருகிறோம்.

+


கடவுளே என்னைக்
காப்பாற்றவிருக்கும்
கட்சிகளிலிருந்து
என்னைக் காப்பாற்று
தமிழ்த்தாய்
தமிழ்க் கட்சிகள்

அ. விக்கிரமசிசன், அலம்பில்.

கே: ஒருவன் தான் துர் அதிர்ஸ்டசாலி என்று எப்போது கவலைப்படுகிறுன்?

ப: அழகாக உடுத்துப் போகையில் பெண்கள் வீதியில் இல்லாதபோது.

ஃ

ம. அரசலிங்கம், கல்கமுவ.

கே: ஆண்களுக்கும் பெண் களுக்குமுள்ள வித்தியாசம் என்ன?

ஆர். பரமு, கல்லடி.

கே: மனிதன் கையில் கடி காரம் கட்டுவதன் நோக்கம் என்ன?

ப: வயது போவதைப் பார்ப்பதற்கு.

ஃ

வ பஞ்சலிங்கம், வங்காலை.

கே: மகாவலி கங்கையை யாழ்ப்பாணம் திருப்பினுல்?

ப: காணி வளக்கு வலுப் பெறும்.

ப: கைநிறைந்த கணவன்.

ஃ

லலீதா நாகலிங்கம், கண்டி.

கே: நாகரீகம் என்பது என்ன? அனுகரீகம் என்பது என்ன?

ப: நாயைக் காரில் ஏற்றிச் செல்வது நாகரீகம். மனிதனைக் காரில் ஏற்றிச்செல்வது அனுக ரீகம்.

ஃ

க. அப்புசாமி, றத்தோட்ட.

கே: மேல் நாட்டவரின் அறிவு சந்திரனைத் தொடுமளவில் வளர்ந்துள்ளது. நம்மவரில் ஏன் அறிவு வளரவில்லை.

ப: மேல் நாட்டவர்கள் அறிவை வளர்ப்பதில் ஆர்வம். நம்மவர்கள் வட்டியை வளர்ப் பதில் ஆர்வம்.

ஃ

ஆர். பிரான்சிஸ், கந்தானை.

கே: அமெரிக்கருக்கும் தமி ழருக்கும் உள்ள வித்தியாசம் என்ன?


ப: அமெரிக்கர் கிரகங்க ளைப் பந்தாடுகிறுர்கள். தமிழ ரைக் கிரகங்கள் பந்தாடுகின் றன.

ஃ

ஆர். டி. சிறில், மயிலிட்டி.

கே: அறிவை வளர்க்க வேண்டிய பத்திரிகைகள் கவற்சி நடிகைகளின் படங்களைப் பிரசு ரிப்பதன் நோக்கம் என்ன?

ப: அவர்கள் அங்கமெல்லாம் அறிவு சுரக்கிறது என்று நினைக்கிறுர்கள் போலும்.




ப: ஆண்கள் குறைய ஆடை களை வாங்கி நிறைய மூடுகிறுர் கள். பெண்கள் நிறைய ஆடை களை வாங்கிக் குறைய மூடுகிறுர் கள்.

ஃ

இ. கீதம், கொட்டாஞ்சேனை.

கே: மந்திரியே ஆலயம் தோறும் ஆறுகாலப் பூசை தின மும் நடைபெறுகிறதா?

ப: ஆம் அரசே... பூட்டி வைத்த கதவுக்குள்.

ஏ. பரிபூரணம், வவுனியா.

கே; வடிகட்டிய முட்டாள் யார்?

ப: பெற்றேர் நம்பாத மக னிடம் தன் பெண்ணைத் திரும ணம் செய்து கொடுப்பவன்.

ஃ

ந. ஹரிகரன், மன்னம்பிட்டி.

கே: உழைக்கும் பணத்தை அப்படியே கொண்டுபோய் மனை வியிடம் கொடுப்பவனைப் பற்றி உங்கள் கருத்து என்ன?

வ. சந்திரராஜா, கல்முனை.

கே: ஏழையாக இருக்கும் போது அண்ணன், தம்பி ஒற்றுமையாக இருக்கிறார்கள். இவர்களில் ஒருவருக்குச் சுவீப் அதிர்ஸ்டம் கிடைத்தால்?

ப: ஆராரோ... ஆர் இவரோ.

ஃ

கு. வரதன், மட்டுநகர்.

கே: மேதை சாதனை செய்துவிட்டு இறக்கிறான். மற்றோர்?

ப: சந்ததியைச் செய்துவிட்டு இறக்கிறார்கள்.

ஃ

செல்வி. எஸ். கல்யாணி, பலாலி.

கே: காந்திக்கு நூற்றாண்டு விழாக் கொண்டாடுவதைப் பற்றி உமது கருத்து என்ன?

ப: சாந்தி நிலவா உலகிலா காந்தி விழா!?






எம். முத்து, பசறை.

கே: காதல் கடிதம் என்பது என்ன?

ப: அது கள்ளக் கடத்தல் இலக்கியம்.

ஃ

வி. உதயன், கண்டி

கே: இலட்சியம் இல்லாதவனுக்கும், இலட்சணம் இல்லாதவனுக்கும் உள்ள வித்தியாசம் என்ன?

ப: முன்னவர் தேர்தலில் தோல்வி அடைவர். பின்னவர் காதலில் தோல்வி அடைவர்.

ஃ

வ. கருணா, கரம்பன்.

கே: வாழ்க்கை என்பது என்ன, மரணம் என்பது என்ன?

ப: வாழ்க்கை என்பது நீண்ட துக்கம். மரணம் என்பது நீண்ட தூக்கம்.

ஃ

க. அச்சுதன், சங்கானை.

கே: களங்கம் இல்லாத சிரிப்பு எது?

ப: குழந்தை நித்திரையில் சிரிக்கும் சிரிப்பு.


ஃ

ம. சங்கரன், கொக்கிளாய்.

கே: மனைவியுடன் ஒற்றுமையாக வாழ்வது எப்படி?

ப: மனைவி ரசிக்கும் நடிகனை கணவன் கண்டிப்பாக ரசித்தாக வேண்டும்.

## Mrs. டாமோடிரன்



Mr. டா: டார்லிங்...

Mrs. டா: யேஸ் மை டியர்.

Mr. டா; நாங் டமில் கலா மந்தம் அமைக்கப் போறன்.

Mrs. டா: நீங்க ஒரு டமில் பிக்சர் கூடப் பார்க்கிற இல்லை...வட் கலா மந்தம்?

Mr டா: பைத்தியங்காறி... நாங்க 'செம்மீன்' படம் பாத்தது மறந்து போனதா...

Mrs. டா: ஐ ஆம் சொறி டார்லிங்.

ஆர். கந்தப்பு, மோதரை.

கே: ஜனநாயகம் என்றால் என்ன, வகுப்பு வெறி என்றால் என்ன?

ப: பெரும்பான்மையினம் தமது கலாச்சாரத்தைச் சிறுபான்மை இனத்தில் திணிப்பது ஜனநாயகம், சிறுபான்மையினம் தமது கலாச்சாரத்தைப் பாதுகாக்க முயல்வது வகுப்பு வெறி.

ஃ

பாக்கியம் ஆனந்தன், கடுவலை.

கே: தமிழனின் காதல் எப்படிப்பட்டது?

ப: காதலிக்கும் வரை பின்னால் செல்வான். திருமணமான பின் முன்னால் செல்வான்.

## நீங்களும் பகிடி விடலாம்



மேலுள்ள படத்திற்கு ஏற்ப திறம் பகிடி எழுதுவோருக்கு சிரித்திரன் ஒரு வருஷம் இனாமாக அனுப்பிவைக்கப்படும்.

க. ஸ்ரீதரன், ஓமந்தை.

கே: கலைஞனை நம்மவர்கள் எப்படி மதிக்கிறார்கள்?

ப: உயிரோடு இருக்கும் போது ஓராட்டுகிறார்கள்; இறந்தபின் பாராட்டுகிறார்கள்.

ஃ

வி. இராமசாமி, காவலூர்.

கே: பட்டதாரிகளின் நிலை எப்படிப்பட்டது?

ப: 'அப்பிளை அப்பிளை நோ றிப்பிளை'

ஃ

க. மகேஷ்வரன், கல்லடி.

கே: இலங்கையில் கலைஞர்கள் இல்லை' என்று எனது நண்பன் கூறுகிறான் இது உண்மையா?

ப: வீணைக் கொடி வேந்தன் இராவணனின் பூமியிலா கலைஞன் இல்லை.

ஃ

ம. குணசிங்கம், மருதானை.

கே: அடுப்புப் புகைக்கும் சிகரெட் புகைக்கும் உள்ள வித்தியாசம் என்ன?

ப: அடுப்புப் புகை உணவைச் சமைக்கிறது. சிகரெட் புகை உடலைச் சமைக்கிறது.

ஃ

சித்தி பரீடா, கொழும்பு-6

கே: நீர் விரும்பாதது எது, விரும்புவது எது?

ப: விரும்பாதது பந்தம், விரும்புவது ஒப்பந்தம்.

முதலாம் நாள் இரண்டாம் நாள்




மூன்றும் நாள் நான்காம் நாள்

---

சென்ற இதழ் பரிசு பெற்ற கேள்வி பதில்:

எப்படிப்பட்டவள் வீராங்கனை?

உழைப்பில்லாத கணவனுக்கு அரை டசின் பிள்ளைகளைப் பெற்றெடுப்பவள்.

பரிசு பெறுபவர்: வி. கணேசலிங்கம், முருங்கன்.

வாக்காளர்: ஆர். டி. சிறில், மைலிட்டி.

மேற்படி பரிசுகளைப் பெறுபவர்கள் தங்கள் முழு விலாசத்தை அனுப்பிவைத்தால் செல்வி. எஸ். மாலா அவர்கள் பரிசுத் தொகைகளை அனுப்பிவைப்பார்கள். பரிசு பெற்றவர்களுக்கு எமது பாராட்டுக்கள்.

## நவ நொடி

மழையும் இல்லை. வெயிலும் இல்லை. ஆனாலும் ஒருத்தி குடை பிடித்து நடக்கிறாள். இவளைப் பற்றி என்ன நினைக்கிறீர்கள்?




**திருமணம்:** கொடுக்கும் பணத்தைத் திருப்பி வாங்கும் திரு நாள்.

**சுகாதார மகாநாடு:** சாவதத்குப் பயப்பிடுவோர் கூடும் கூட்டம்.

**தேர்தல்:** திட்டு விழா.

**விவாக ரத்து:** ஒற்றுமையாகக் கோவிப்பது.


**கலைஞன்:** அழகைப் படைக்கத் தெரிந்தும் அழகாக வாழத்தெரியாதவன்.

தகப்பன்: நீ பரீட்சையில் எடுத்த பாடங்களுக்கெல்லாம் நான் உன்னைப் பாஸா என்று கேட்டபொழுது எல்லாவற் றிற்கும் 'சீ' என்று சொன்னுயே... இப்ப எல்லாப் பாடங்களும் பெயில் என்கிருயே!

மகன்! இல்லை என்று சொல்வதற்காகத்தான் நான் அப்படி 'சீ' என்று சொன்னேன் அப்பா.

தகப்பன்: ?...?...?

—கைடி




ஒருவர்: ஏனப்பா இன்றைக்கு இடியப்பம் பெரிதாக இருக் கிறது... யாராவது புதிய ஆளா!

சர்வர்: இல்லை சார், முதலாளிக் கும் இடியப்பம் போடுகிற வனுக்கும் ஏதோ சண்டை.

—இரா. சோமசுந்தர்.

+

ஆசிரியர்: ராமு! இப்பொழுது நான் சொல்வதை ஒருமுறை திருப்பிச் சொல்: 'நான் நேற்று அதிகாலை யாழ்தேவி யில் கொழும்புக்குச் சென் றேன்'

ராமு: 'சென்றேன் கொழும் புக்கு யாழ்தேவியில் அதி காலை நேற்று நான்'

ஆசிரியர்: ?.. ?...?

—கைடி.

+

## சிரித்திரு

திருவாளர் பஞ்சரட்ணம் எட்டுப் பிள்ளைகளின் தந்தை:

அன்பரசன்;
ஆனந்தராஜா;
இளையதம்பி;
ஈஸ்வரி,
உலகநாயகி;
ஊர்வசி,
எல்லாளன்;
ஏகாம்பரம்

என்று எட்டுப் பிள்ளைகளுக்கும் பெயர் வைத்துவிட்டார். ஒனு வில் பெயர் அகப்படாததால் அத்துடன் நிறுத்திவிட்டாராம்.

# V.S.T. பிலிம்ஸ் லிமிடெட்

தமிழ் திரைப்படமொன்றில் பங்குபற்ற ஆர்வமும் திறமையும் உள்ள நடிக, நடிகையர், பின்னணிப் பாடகர்கள் தேவை.

நடிகர்கள்: வயது, நிறம், உயரம், கல்வித் தராதரம், திரைப்பட நாடக அனுபவம், தற்பொழுது செய்யும் தொழில் முதலிய விபரங்களுடன் சமீபத்தில் எடுக்கப்பட்ட தபால் அட்டை அழவுடைய புகைப்படத்துடன் விண்ணப்பிக்கவும்.

நடிகைகள்: வயது, நிறம், உயரம், கல்வித் தராதரம், திரைப்பட நாடக அனுபவம், 18 வயதுக் குட்பட்டவரானுல் பெற்ரோர் அல்லது பாதுகாப்பாளரின் சம்மதக் கடிதம் முதலிய விபரங்களுடன் சமீபத்தில் எடுக்கப்பட்ட தபால் அட்டை அளவுடைய புகைப் படத்துடன் விண்ணப்பிக்கவும்.

பின்னணிப் பாடகர்கள்: திரைப்படங்களில், நாடகங்களில் பின்னணி பாடியிருந்தால் அதுபற்றி விபரங்கள் தரவும். சங்கீத தராதரம்.

முக்கிய குறிப்பு: தயவுசெய்து நேரில் அழைக்கப்படும் வரை கடித மூலம் மட்டுமே தொடர்பு கொள்ளவும்.

விபரங்களுக்கு:—>

**V.S.T. FILMS LTD**
**V.S.T. Building**
75 Ward Place Colombo - 7

,'சித்திரமும் சிறுகதையும்'' பகுதியில் பரிசுபெற்ற கதை



# "ஹோ...!"

— ஸவ்யஸாசி —

''நான்தான் பெற்றேன்...! அதைச் சொல்ல நானேன் வெட்கப்படவேண்டும்...? மானம் போய்விட்டதாம் மானம். நாலு பேர் பார்த்துச் சிரிப்பார்களாம். சிரித்துவிட்டுப் போகட்டுமே நாய்கள்! குழந்தை பெற்றவள் தாலியற்றவளா என்று வியப்போடு கேட்கிறார்களாம். உலகில் நடக்கும் ஆயிரமாயிரம் ஆச்சரியத்தையும், அதிர்ச்சியையும் கண்டு அசையாமல் நிற்கும் இந்தப் பேடிகளுக்கு தாலியில்லாதவள் குழந்தை பெற்றதுதான் ஆச்சரியமாகப் போய்விட்டது.'

'குலப் பெருமையை கொன்றுவிட்டாயே' என்று அலறித் துடித்த அப்பா...!

தலைமுறை தலைமுறையாகக் காக்கப்பட்டு வந்த குலப் பெருமையை நான் குழந்தை ஒன்றை பெற்றுவிட்டதினால் அழியுமென்றால்...! வலுவற்ற அந்த பெருமை அழிந்துவிட்டுப் போகட்டுமே...!

'வயிற்றில் கல்லைப் போட்டுவிட்டாயே பாவி...!' என்று கதறினாளே அம்மா...!

இருந்தாலும்- இல்லாவிட்டாலும், கொடுத்தாலும்- கொடுக்காவிட்டாலும், அளித்தாலும்- அழித்தாலும் அன்பின் உருவாக அருகிலே நிற்கும் அம்மாகூட காறி துப்பிவிட்டாளென்றால் நான் கண்ணனை பெற்றது தவறா...?

இல்லை... இல்லை... நான் அப்படி நினைக்கவேயில்லை. அம்மாவும், அப்பாவும் அவர்களோடு சேர்ந்து இந்த சமுதாயமும் அழட்டும்... அழுதழுது இந்த உலகத்தையே கண்ணீரால் நிரப்பி எல்லாவற்றையும் அதில் மூழ்கடிக்கட்டும். நான் என் கண்ணனோடு அதிலும் நீந்தத்தான் செய்வேன், நீந்தத்தான் செய்வேன்! நாலு பேர் சிரிப்பார்களாம்...சிரிக்கட்டுமே! எவ்வளவு நேரத்துக்கு... எத்தனை நாட்களுக்கு அவர்களால் சிரிக்க முடியும்...? சிரித்துச் சிரித்து வாயைக் கிழித்துக்கொள்ளட்டுமே... அதற்குப் பிறகாவது அந்தச் சிரிப்பு அடங்கத்தானே செய்யும்...? அழியத்தானே செய்யும்...?

அந்த நாள்... மழையும் புயலும் சேர்ந்து ஆட, பிரளயம்தான் ஏற்பட்டுவிட்டதோ என்ற பயம் எங்குமே தாண்டவமாடியது. பேய்க் காற்று... பயங்கரப் புயல்... இணைப்புகள் யாவும் துண்டிக்கப்பட்டு எங்குமே மின்சாரமற்ற ஓரே இருள்.!இருள்..!

அசைந்து வந்த அந்த உருவத்தை நான் என் அருகில் வரும்வரை காணவேயில்லை. என் உடல் சிலிர்த்தது... பயத்தால் முகமெல்லாம் வியர்த்து- கை

**சிரித்திரு**

கலிபோர்ணியாவில் கணவன் ஒருவர் தன் மனைவி மினி ஆடைகள் அணிந்துகொள்வதில்லையென்று குற்றம் சாட்டி விவாகரத்து வழக்குப் போட்டாராம்.

கால் எல்லாமே நடுங்க ஆரம்பித்தன...!

'கமலம்... பயப்படாதே! நான்தான்...'

எங்கோ கேட்ட ஒரு குரல்.! யார் குரல்...? அது யார் குரல்..? சிந்தனைக்கு எட்டவேயில்லை...

அந்த ஸ்பரிசம் புதியது தான்...

மென்மையான அவசரமில்லாத அணைப்பு...!

'யார் நீங்கள்...?'

'கமலம், நான்தான் பயப்படாதே!'

இதழ்கள் இனிக்க இனிக்க... இதயம் இனிக்க...

இனிமை... இனிமை... இனிமை...!

இடிமுழக்கம் எங்கெல்லாமோ கேட்டது. மின்னல் வெட்டி வெட்டி மின்னியது... மழையின் பேயலரல் ஓயவேயில்லை... இனிமையின் எல்லையிலே- என்னுல் இப்போதும் நினைத்துப் பார்க்க முடிகின்றது. அந்தக் குரல் ரீங்காரம் செய்து கொண்டுதானிருக்கிறது.

'கமலா... போய்வருகிறேன்...!'

கதைப்பதன் மூலம் காவிக் கொண்டிருந்த அந்த இனிய துடிப்புகளை நான் இழந்துவிட விரும்பவில்லை...

'ம்...'

அவர் போய்விட்டார்... அவ்வளவுதான்!

'அப்பன் யாரடி சண்டாளி...? இந்தக் குழந்தையை எப்படியடி பெற்ருய்...?' அப்பாவும், அம்மாவும் கேட்ட கேள்விகளுக்கு என்னுல் பதில் சொல்ல முடியுமா...? அதற்குப் பதில் எனக்குத் தெரியுமா...?

ஓர் இரவில்... அமைதியற்ற அந்த இரவில் நான் என்னை இழந்துவிட்டேன்... ஏனோ...எப்படியோ... தெரிந்தோ தெரியாமலோ... ஒரே ஒரு முறை... ஆமாம்; அன்றுதான்... அதற்காக நான் சாகத்தான் வேண்டுமா..? கண்ணனை கொல்லத்தான் வேண்டுமா?

முடியாது... நான் சாகவும்


உங்கள் கட்டட வேலைகளுக்கு

தொடர்பு கொள்ளுங்கள்

**SOMAWANSA CONSTRUCTION CO,**

286, Baseline Road, Colombo-9

PHONE: 92955

மாட்டேன்- சாகவிடவும் மாட்டேன்...! அந்தஸ்து போய்விட்டதாம்; அந்தஸ்து...! அந்தஸ்து யாருக்கு வேண்டும்? அந்தஸ்து என்னை வாழவைத்துவிடாது... அதை பாராட்டவுமில்லை...! நான் தவறிவிட்டவளாக இருக்கட்டுமே... அதற்காக நான் வாழக்கூடாதென்றால்... உலகில் யாருமே வாழக்கூடாதே...!

பிறப்பு எத்தனை இயற்கையோ- அத்தனை இயற்கையாக இறப்பும் எனக்கு அமையட்டும்..! இந்த சமுதாயத்தின் சட்டதிட்டங்களுக்கும்- சம்பிரதாயப் பிடிகளுக்கும் என்னை பலியாக்கி அதன் மூலம் கண்ணனையும் நான் இழக்கமாட்டேன்!

சமுதாயம்...!

அது சிரிக்கட்டும்...! முகத்தைச் சுளிக்கட்டும்...! ஆனாலும் எனக்கொரு நம்பிக்கை... அழியாத நம்பிக்கை...! அந்தக் குரல் 'கமலா... போய்வருகிறேன்...!' நான் கேட்ட அந்தக் குரல்... அவர் வருவார்... ஒருநாள் வரத்தான் செய்வார்... எனக்கு நிறைய நம்பிக்கை... அந்தக் குரலின் கனிவு... கருணை... அதில் ஏமாற்றும் நோக்கமேயில்லை...! வருவார்... அவர் வருவார்... என்றாவது ஒருநாள் என் கண்ணனுக்கு உயிர் கொடுத்தவர்... வரத்தான் வேண்டும்...! இவன் அவர் உயிரின் ஒரு பங்குதானே... இந்த உயிரின் துடிப்பு- அந்த உயிரில் துடிப்பை ஏற்படுத்தாதா? இந்த இரத்தத்தின் கொதிப்பு அந்த இரத்தத்தில் கொதிப்பை ஏற்படுத்தாதா? அப்படியென்றால் அவர் வரத்தான் வேண்டும்... வருவார்...! வருவார்...!

'வராவிட்டா...!?'

சித்திரமும் சிறுகதையும் பகுதி சிரித்திரன் வாசகர் மத்தியில் கற்பனை வளத்தை விருத்திசெய்துள்ளது என்பதை அவர்களிடமிருந்து வந்த கதைகள் எடுத்துரைக்கின்றன. கதைத் தேர்வு எம்மைத் திணறடித்துவிட்டது என்றே கூறவேண்டும். அவ்வளவிற்கு கதைகள் எல்லாம் ஒவ்வொரு கோணத்தில் தரமாகக் காணப்பட்டது. (ஒருசிலவற்றைத் தவிர)

இம்முறை பரிசு பெறும் கதை:

பதுளை ஸவ்யஸாசியின் 'ஹோ...!'

மற்றும் கீழ் உள்ள தகுதி பெற்ற கதைகளை இனிவரும் சிரித்திரனில் பிரசுரிப்போம்.

1. இதயம்-நீ-கமலம்—க. கீதபொன்கலன்
2. மொட்டை மரம்—நெல்லை. க. பேரன்.
3. நிராசை—கண. மகேஸ்வரன்.
4. நெருப்பு—செல்வி. எஸ். பிரியா.
5. பழி—கடலூர் சாந்தன்.

இம்முறை பரிசு பெறுபவருக்கு எமது பாராட்டுக்கள். அத்துடன் கதைகளை எமக்கு ஆர்வத்துடன் எழுதியனுப்பிய அன்பர்களுக்கு எமது நன்றி.


போட்டோ றெக்ஸ்
நீர்: 101/15, மெசஞ்சர் வீதி,
கொழும்பு-12.
போன்: 5686

அவசரகால பாஸ்போட் முதல் அலங்கார கல்யாணப் போட்டோ வரை அதிவிரைவில் அழகாகப் படம் பிடித்துக்கொள்வதற்கு எம்மிடம் விஜயம் செய்யுங்கள்.

புத்தகங்கள்,

சிறப்பு மலர்கள்,

வார, திங்கள்

செய்தி இதழ்கள்,

திருமண அழைப்

புகள், பல நிற

வேலைகள்

இன்னும் பல

சிறிய

வேலைகளுக்கும்

சிறந்த அச்சகம்

# இரஞ்சன அச்சகம்

98, விவேகானந்தா மேடு, கொழும்பு- 13.

தொலைபேசி: 2221 தொடுப்பு: 4

அப்படி நான் சிந்திக்கவே மாட்டேன். எனக்குப் பைத்திய மென்று எல்லோரும் சொல்லட் டுமே...

உணர்வுகள்... தியானங்கள்- எல்லாம் உயிரற்றவையா?

என் நம்பிக்கை ஒரு வேள்வி... தவம்...! சமூதாயச் சிரிப்பையும் சிறுமையும் மறந்து... காறித் துப் பும் எச்சிலை பொருட்படுத்தாது இரு உயிர்களுக்காகச் செய்யும் தவம்...

உயிர்வாய்ந்தது... உணர் வுள்ளது... ஆழமானது...!

அதன் வெற்றி ஒரு பெண் ணின் வெற்றியல்ல- சக்தியின் வெற்றி!

'வேள்வி...!'

உணர்வினால் எழுந்த இந்தத் தீ அணையாது- அழியாது!

ஆராதனையின் முடிவு சாத னையாகட்டும்...!

'இல்லாவிட்டால்...?'

அப்படி நான் நினைக்கமாட் டேன்... இருந்தாலும் ஓர் இடை வெளி... உணர்வில் உருவான வேள்வித் தீயே...!

என்னை எரித்துவிடு!- அழித் துவிடு!

என் பிணத்தின் சாம்பல் இந்த உலகத்தையே மூடட் டும்...! மூடிவிடட்டும்...!!

(யாவும் கற்பனை)

காதலன்: (டெலிபோனில்) டெலிபோன் கட்டணமும் கூடிப்போய்ச்சு: ஆபீஸில் இனி 'ஒசிக் கோல்கள்' எடுக்க முடியாது. இனிமேல் எப்படித்தான் உன்னோடு பேசப்போகிறேன் கண்ணே!

பணக்காரக் காதலி: உங்க வீட் டிலேயே ஒரு டெலிபோன் போட்டுக் கொள்ளுங்க ளேன் டியர்!

— — —

மாணவன்: ஐயா... கடன் வாங் கிக் கார் வாங்குபவனைப் பற்றி என்ன நினைக்கிறீர் கள்?

பண்டிதர்: நினைப்பதற்கு என்ன இருக்கிறது தம்பி? கடன் + கார் + அன் = கடன் காரன்.


தேவையான கட்டிடச் சாமான்க ளுடன் கட்டிடங்கள் கட்டவோ அல்லது தொழிலாளர்களை மட் டும் வைத்து வேலை செய்யவோ எதற்கும் எம்மிடம் தொடர்புகொள்ளுங்கள்.

I. D. L. PERERA

CONTRACTOR

Weraluanduwa, Maha Edanda.

இலங்கையிலும் இந்தியா
விலும் கடந்த 40 வருடங்
களாக வெற்றிக் கொடி
நாட்டி வருவது.

குறைந்த செலவு, நிறைந்த
புகையின்பம், காரம்,
மணம், குணம் நிறைந்த

# கமலா பீடி

எல்லோரும் எங்கும் விரும்பிப் புகைப்பது


கமலா பீடி கம்பனி,
பொன்னம்பலம் பில்டிங்,
176, சென்ட்ரல் வீதி, கொழும்பு.
தொலைபேசி: 26522.

## உருவாக்கியவர்களை உருவாக்கியவர்...

பிரம்மாவுக்குப் படைக்கிறவன் என்று புராணத்தில் பெருமை பிரம்மாவையே படைத்த இன்னொருவன் இருப்பானானால் அவன் எவ்வளவு பெருமைக் குரியவனாக இருப்பான், உலகில் இப்படி ஒரு பெருமைக்குரியவர்தான் வாசன்.

படைப்பவர்களைப் படைத்தவர் வாசன். இலக்கியம், ஓவியம் இசை, நடனம், திரைப்படம்... இப்படிச் சகல கலைத் துறைகளிலும் அவர் உருவாக்கியவர்கள்தான் இன்றுவரை மங்காத சிருஷ்டி கர்த்தாக்களாக ஒளி வீசிக் கொண்டிருக்கிறார்கள். தேவன் முதல் சாவி வரை, கல்கி முதல் கொத்தமங்கலம் சுப்பு வரை, மாலி முதல் கோபுலு வரை... பல ஜீவ நதிகளை உருவாக்கித் தந்த மாமலை அவர்,

வாசன் அவர்களின் மறைவு வாசன் அவர்களுக்கு இழப்பு அல்ல. ஏனென்றால் அவர் நிறையச் செய்து விட்டார். திருப்தியான தொண்டாற்றி விட்டார். ஆனால்? அவர் மறைவு நம்மைப் பொறுத்தவரை இழப்பே தான்!



அம்மா:- டேய் கோபு...ஏண்டா அழுதிட்டு வாறே!

மகன்:- ம்...ம்...ம்... அப்பா காந்தி எழுதிய அகிம்சைப் புத்தகத்தால் தலையில் அடித்துவிட்டார்...ம்...ம்...

## அரைப் போத்தல்

எதிலும் நன்மையே காணும் மனவளம் உள்ளவன் அரைவாசி நிறைந்திருக்கும் புட்டியைக் கண்டபோதும் அரைவாசி நிறைந்திருக்கே என்று மனநிறைவுற்று பெருமகிழ்ச்சி அடைகின்றான்.

ஆனால் எதிலும் குறையே காணும் மனக்குறையுள்ளவன் அதே புட்டியைக் கண்டும் அரைவாசி குறைந்திருக்கே' என்று மனக்குறைவுற்றுப் பெரும் துன்பத்திற்கு ஆளாகின்றான்.

## SIT உண்டிச் சாலை

ஒரு விசித்திரமான சிற்றுண்டிச் சாலை. அங்கு ருசியான பலகாரங்கள், இனிப்பான தேனீர் எல்லாம் உண்டு. ஆனால் உட்கார்ந்து குடிக்க மேசையோ, நாற்காலியோ கிடையாது. ஏன் தெரியுமா?

தேனீர் அருந்த வரும் காதல் சிட்டுகளை எழுப்ப முடியாதென்றுதான்.

இது பொது நூல் நிலையச் சிற்றுண்டிச் சாலை என்பது இன்னுமா தெரியவில்லை.

---

ஒருவர்:- ஏனப்பா அந்தக் கஷ்டப்படுகிறவனைப் பார்த்துப் பொறாமைப்படறே...?

மற்றவர்:- சும்மா போங்கண்ணாச்சி... அவன் நல்லா வந்திருவானென்று பயமாயிருக்கு.

ஈழத்தின் தரமிக்க தமிழ் ஓவியம்

கீதாலயம் பிலிம்ஸ்

அளிக்கும்

# மஞ்சள் குங்குமம்


ஸ்ரீ சங்கர், உதயகுமார், ஹெலன்குமாரி, மஞ்சுளா- லீலா நாராயணன்

டைரக்ஷன்
எம். வி. பாலன்

சங்கீதம்
ஆர். முத்துசாமி

தயாரிப்பு
ஏ. சுந்தரம்
எம். ஏ. வி. பத்ருதீன்
ஏ. வைத்திலிங்கம்

பெண் குலத்தின் பெருமையைச் சித்தரிக்கும் தீந்தமிழ்த் திரை ஓவியம்.




சி. கே. சிவா

(8)

அந்தச் சிறிய 'லாக்கப்' அறையின் ஒரு மூலையில் தலையில் கையை வைத்தபடி சோர்ந்து போயிருந்தார் கருணாகரன். பழைய தெம்பு, தைரியம், உற்சாகம் எல்லாவற்றையுமே பறிகொடுத்துவிட்ட ஒரு நித்திய நோயாளிபோல் இருந்தது அவர் தோற்றம்.

சிவானந்தன் மட்டும் அதன் ஒவ்வொரு சுவரையும், ராட்சதக் கம்பிகளையும் மாறி மாறி ஆராய்ந்துகொண்டே வந்தார். சுவரில் அல்லது தரையில் ஏதாவது சுரங்க வழி இருக்குமோ வென்று அவற்றைத் தட்டித் தட்டிப் பார்த்தார். தப்பிப் போவதற்கு எந்த வழியும் இருப்பதாகத் தெரியவில்லை. யன்னல் கம்பிகளைக் கையால் பற்றியவாறே நின்று வெளிப் பக்கத்தை நோக்கினார். அங்கே...

அந்த முரடன் அரைத் தூக்கத்தில் ஆட்டம் போட்டுக்கொண்டிருந்தான். திடீரென ஒருமுறை கண்களை விழித்து சுற்றிலும் ஒரு நோட்டம் விட்டான். 'லாக்கப்' அறைக்குள் அந்த இருவரையும் கண்டதும், திருப்தியுடன் தன் கும்பகர்ண சேவையை மீண்டும் தொடர ஆரம்பித்தான். அப்போது...

சிவானந்தன் 'நாச்' என்று ஒரு தும்மல் தும்மினார்.

'என்ன தலைவலிடா இது!' என்றவாறே நிமிர்ந்தான் அவன். காதுக்குள் செருகியிருந்த ஒரு பீடியை எடுத்தான். 'கொட்டாவி' ஒன்றை விட்டவாறே மேசையிலிருந்த தீப்பெட்டியை எடுத்து அதை மூட்டிக்கொண்டான்.

இதைக் கண்ட சிவானந்தனுக்கு, மின் வெட்டும் நேரத்தில் மூளையில் ஒரு யோசனை பளிச்சிட்டது. தன் 'ட்ரவுஸர் பாக்கட்'டுக்குள் கையைவிட்டு ஒரு 'கப்ஸ்டன்' 'பக்கற்'றை வெளியே எடுத்தார். அதிலிருந்து ஒரு சிகரெட்டை எடுத்து தன் உதடுகளுக்கிடையில் செருகிக்கொண்டார்.

'அண்ணே ஒரே டல்லா இருக்கண்ணே அந்தத் தீப்பெட்டியைக் கொஞ்சம் இப்படித் தர்றியா ஒரு சிகரெட் பத்துவோம்' என்றவாறே கம்பிகளுக்கூடாகக் கைகளை வெளியே நீட்டினார்.

'ஒகோன்னும்! மகாராஜாவுக்கு சிகரெட்டும் ஒரு கேடா!' என்றவாறே தீப்பெட்டியுடன் எழுந்தான் அவன்.


என்ன நினைத்தாரோ திடீரென்று தன் கையை உள்ளே இழுத்துக்கொண்டார் சிவானந்தன். எழுந்து வந்த முரடன் கம்பிகளுக்கூடாகத் தீப்பெட்டியை உள்ளே நீட்டினான்.

மறுகணம் சிவானந்தனின் வலுவான கரங்கள், தீப்பெட்டியோடு சேர்த்து அந்த முரட்டுக் கரத்தையும் பற்றிக்கொண்டன.

ஒரு காலை சுவரில் ஊன்றியவாறே அந்த முரடனின் கையை நன்றாக உள்ளே இழுத்து, கீழ்ப் பக்கமாக இருந்த இரும்புச் சட்டத்தோடு சேர்த்து அழுத்தினார்.

'ஆ... ஆ... ஊ... ஊ... ஏய்... ஏய்...கையை விடு' என்று அலறினான் அவன்.

மேலும் மேலும் அழுத்தினார் சிவானந்தன். வலி தாங்காது துடித்தான் அவன்;



ஒரு 'மாடர்ன் ஆர்ட்' நிபுணரின் வீட்டுக்கு அவருடைய நண்பர் போயிருந்தார். அங்கே ஒரு திரையில் ஏதோ சில கோடுகளும் பலவகை வண்ணங்களும் காட்சியளித்தன. ஓவிய நிபுணரைப் பார்த்து நண்பர் 'இது என்ன?' என்று கேட்டார்; 'இதுதான் மாடர்ன் ஆர்ட்' என்றார் ஓவியர். 'அது சரி ஐயா இங்கே நீங்கள் எதை வரைந்திருக்கிறீர்கள்?' என்று திரும்பவும் கேட்டார் நண்பர்: 'ஓ... அதைக் கேட்கிறீர்களா? நான் வரைந்திருப்பது ஒரு பெண்ணுடைய ஓவியம்' என்றார் மாடர்ன் ஓவியர். நண்பரின் தலை சுழன்றது. 'என்ன ஐயா இது? இந்த ஓவியத்தை என்னால் ஒன்றுமே புரிந்துகொள்ள முடியவில்லையே?' என்றார் நண்பர். ஓவியர் சொன்னார்:- 'பெண்ணை மட்டும் யாருக்குத்தான் புரிகிறதாம்?'

'மரியாதையாக இந்த அறையின் திறப்பைத் தா இல்லாவிட்டால்...' மேலும் ஒரு முறை அவன் கையைக் கீழாக அழுத்தினார்.

'ஆ... ஊ... அது என்னிடம் இல்லை' அலறினான் அவன்;

'இல்லையா- உன்னை நான் நம்பவேண்டுமா?' மேலும் ஒரு அழுத்தல் அழுத்தினார் பணிந்து விட்டான்.

'தாறேன்- தாறேன் 'பாக்கட்'டுக்குள் இருக்கிறது கையை விடு எடுத்துத் தாறேன்'

'எங்கே முதல் மற்றக் கையால் அதை எடுத்து இப்படிக் கொடு- பிறகு விடுகிறேன்.'

அவசரமாகத் தன் 'ட்றவுஸர்' பக்கட்டுக்குள் கையை விட்டு ஒரு திறப்புக் கோர்வையை எடுத்து நீட்டினான் அவன். மறுகணம்...

அவன் அடுத்த கையையும் பிடித்துக்கொண்டார் சிவானந்தன். இரண்டையும் சேர்த்துக் கீழே அழுத்தினார்.

'ஆ... ஆ...உயிர் போகுதே! விடு! விடு! திறப்புத்தான் தந்து விட்டேனே; மேலும் என்ன' குளறினான் அவன்.

சிவானந்தன் கைப்பிடியை விடவில்லை. கருணாகரனை நோக்கி 'இவனைக் கட்டுவதற்கு ஏதாவது கயிறு இருக்கிறதா என்று பாருங்கள்' என்றார்.

அவர் அவசரமாகத் தன் இடையிலிருந்த தோல் பெல்ட்டை உருவினார்.

சிவானந்தன் பிடித்தபடியே இருக்க, கம்பிக்கு உள் பக்கமாக அவன் கைகளிரண்டையும் சேர்த்துத் தோல் பெல்ட்டினால் கட்டினார் கருணாகரன்.

இப்போது திருப்தியுடன் கைப்பிடியை விட்டார் சிவானந்தன்.

கைகளை இழுக்க முயன்றான் அவன்- முடியவில்லை; கண்களில் கோபக் கனல் தெறிக்க அவர்களிருவரையும் பார்த்தான்.

இருவரும் கதவைத் திறந்து கொண்டு வெளியே வந்துகொண்டிருந்தார்கள்.

வெளியே வந்த சிவானந்தன் அவ்விடம் முழுவதிலும் தேடி ஒரு கயிறு எடுத்துக்கொண்டார்.

அந்தக் கயிற்றினால், நின்றுகொண்டிருந்த அவன் கால்களிரண்டையும் சேர்த்து ஒன்றாகக் கட்டினார். பின் கைக் கட்டை அவிழ்த்துவிட்டுத் தள்ளிவிட்டார்.

தடாலென்று நிலத்தில் விழுந்தான் அவன். மறுபடியும் அவன் கைகளிரண்டையும் பிடித்து கயிற்றின் மறுமுனையால் இறுகக் கட்டினார். கையும் காலும் கட்டப்பட்ட நிலையில் செயலற்றுப் போய், தரையில்

## சிரித்திரு

லுட்னிக் என்னும் பிரம்மச்சாரி ஒருவரை, விவாகம் நடக்கும் தினங்களில் தேவாலயத்துப் பக்கம் போகக் கூடாது என்று தடை விதித்தார்களாம்.

''நீங்கள் செய்வது தவறு'' என்ற தலைப்புடன் புது மணத் தம்பதிகளுக்கு அவர் துண்டு பிரசுரம் விநியோகித்ததே காரணம்.

---

மல்லாக்காகக் கிடந்தான் அவன்.

மறுகணம் பக்கத்திலிருந்த தோல் 'பெல்ட்'டை எடுத்து, சவுக்குப் போல கையில் பிடித்துக் கொண்டார் சிவானந்தன்.

'சரி இப்போ நான் கேட்கிற கேள்விகளுக்கு ஒழுங்காய் பதில் சொல்லு. எங்கே ரேணுகா?''

''எனக்குத் தெரியாது''

''தெரியாது?''

கையிலிருந்த 'பெல்ட்'டை ஒரு முறை வீசினார். 'ஆ' வென்று அலறிய வாறே உருண்டான் அவன்.

''சரி இனியாவது என் வழிக்கு வரப் போகிறாயா இல்லை...!''

''வருகிறேன்... வருகிறேன் அடிக்காதீர்கள்''

''சரி இப்போ சொல்லு. எங்கே ரேணுகா?''

''அவள் இன்னும் இங்கு வந்து சேரவில்லை இன்னும் கொஞ்ச நேரத்தில்தான் கொண்டு வருவார்கள்.''

'நம்பலாமா?'

'சத்தியமாக நம்பலாம்'

'சரி இப்போ போன ஐந்து பேரும் எங்கே போகிறார்கள்?'

'ரேணுகாவை இங்கு கொண்டு வரத்தான் அவர்கள் போகிறார்கள்'

'எங்கே இருந்து எப்படிக் கொண்டு வரப் போகிறார்கள்? விபரமாய்ச் சொல்லு?'

'இன்றிரவு சரியாக இரண்டரை மணிக்கு, அவளை 'மட்ராஸ்'சிலிருந்து கடத்திக் கொண்டு வரும் இயந்திரப் படகு பருத்தித்துறைக்குக் கிழக்கே மூன்று மைல் தூரத்தில் கரை சேரும். பின் அங்கிருந்து கார் மூலம் இங்கு கொண்டு வந்து சேர்ப்பார்கள்,'

'நிச்சயமாக இங்குதான் கொண்டு வருவார்களா? வேறு எங்கும் கடத்திச் செல்ல மாட்டார்களா?'

'இங்கு கொண்டு வருவதாகத்தான் ஏற்பாடு ஆனால்...'

'ஆனால்... என்ன?'

'எதிர் பாராத விதமாக உங்களை எல்லாம் இங்கு அடைத்து வைத்திருப்பதால், சில வேளை அவளை வேறு எங்காவது கடத்திச் செல்லவும் கூடும். மேலும் இன்று இந்தப் பகுதியில் 'பொலிஸ்' நடமாட்டமும் அதிகரித்திருப்பதால் நிச்சயமாகச் சொல்ல முடியாது.'

'ஓஹோ! சரி நிச்சயமாக அந்தப் படகு இரண்டரை மணிக்கு குறிப்பிட்ட இடத்திற்கு வருமல்லவா? அதில் மாற்றம் எதுவும் இல்லையே?'

'இல்லை. நிச்சயமாக வரும். ஒரு நிமிடம் கூடப் பிந்தவும் கூடாது, முந்தவும் கூடாது. என்பது எங்கள் தலைவரின் கண்டிப்பான உத்தரவு.'

'சரி அந்தக் கட்டிலில் படுத்திருக்கிற குழந்தை ரகுநாதனுடையது தானே?'

'ஆமாம்'

'சரி கருணாகரனை ஏன் இங்கு கடத்தி வந்தீர்கள்? அவர்தான் உங்கள் கோரிக்கைப் படி நடந்தாரே.'

'எனக்குத் தெரியாது ஆனால் அவர் 'பொலிஸ்' உதவியை நாடியதும், தோல் பைக்குள் வெறும் காகிதக் குப்பைகளை அடைத்ததும் எப்படியோ தலைவருக்குத் தெரிந்துவிட்டது. அதனால் இவரை உடனே கடத்தி வரும் படி கட்டளை இட்டார்''

'தலைவன்—தலைவன் என்கிறாயே! உங்கள் தலைவன் யார்?'

'...........'

அவனிடமிருந்து பதில் ஏதும் வராமல் போகவே 'பெல்ட்'டை மேலே உயர்த்தினார் சிவானந்தன்! ஆனால் அடி விழுவதற்கு முன்பே அவன் பதில் கூறி விட்டான்.

அந்தப் பதிலைக் கேட்டதும் சிவானந்தன் ஒருகணம் திகைத்து விட்டார்.

'அடப் பாவி! அவரா உங்கள் தலைவர்'

என்று அவர் வாய் முணு முணுத்தது.

தன் கைக் கடிகாரத்தை ஒரு முறை பார்த்தார். நேரம் 1-20 இன்னும் ஒரு மணி நேரத்தில் அவர் பருத்தித் துறையில் இருந்தாக வேண்டும்.

அந்தக் குழந்தையைத் தூக்கிக் கொள்ளும் படி கருணாகரனிடம் கூறிவிட்டு, அவசரமாக அந்த முரடனை இழுத்து அந்தக் கம்பிக் கூட்டுக்குள் போட்டுப் பூட்டினார்.

---



பிடில்காரர்:— பாலில் சீனியைப் போட்டு விட்டு ஏன் கலக்காமல் பாடகரிடம் கொடுக்கிறாய்?

பையன்:— அவர் கையில் பிடித்துக் கொண்டு ஆலாபனை பண்ணும் போது தானாக சீனி கரைந்து விடும் அதுதான்.

பிடில்காரர்:— ?......?......?

—பா. சுபாஷிணி, கிராண்பாஸ்.

வாசல் கதவைத்திறந்து கொண்டு வெளியே வந்தார் சிவானந்தன். கருணாகரனும் குழந்தையுடன் அவரைத் தொடர்ந்து வந்து சொண்டிருந்தார். வெளியே...

கருணாகரனின் கார் விட்ட இடத்திலேயே நின்று கொண்டிருந்தது. அதன் 'சுவிச்' சாவியும் கருணாகரனிடம் தான் இருந்தது. அந்த முரடனோடு வரும் போதே அதை அவர் எடுத்து வந்திருந்தார்.

அப்போது அந்த அகால நேரத்திலும் அவ்வழியால் ஒரு 'டாக்சி' அவர்களை நோக்கி வந்து கொண்டிருந்தது.

யாரோ 'செக்கன்ட் சோ' பார்க்க வந்தவர்களை வீடு சேர்த்து விட்டு 'றிற்றேணில்' வருகிறது என்று நினைத்துக் கொண்டார் சிவானந்தன். கையைக் காட்டினார். 'டாக்சி' அவரருகில் வந்து நின்றது.

'மிஸ்டர் கருணாகரன், நீங்கள் இப்போதே நேராக 'பொலிஸ் ஸ்டேசனுக்குப் போங்கள் 'இன்ஸ்பெக்டர்' சில்வா நமக்காகவே அங்கு இப்போது காத்துக் கொண்டிருப்பார். இங்கு நடந்ததெல்லாவற்றையும் அவரிடம் கூறி, உடனடியாக எல்லோரும் பருத்தித் துறைக்கு—அவன் குறிப்பிட்ட இடத்திற்கு வாருங்கள் அந்த இடத்திற்கு வரும்போது 'ஜீப்பில் வராது நடந்தே மிக எச்சரிக்கையாக வர வேண்டும்.

நான் இந்த டாக்சியிலேயே அங்கு போகிறேன். நீங்கள் எதற்கும் யோசிக்க வேண்டாம். உங்கள் மகளை உங்களிடம் சேர்ப்பது என் பொறுப்பு ஆனால் நீங்கள் எவ்வளவுக் கெவ்வளவு விரைவாக வருகிறீர்களோ— அவ்வளவுக் கவ்வளவு சுலபம்'

ஆ...ஆ... அந்தக் குழந்தை — அதையும் உங்களுடனேயே கொண்டு சென்று 'ஸ்டேசனில்' விடுங்கள்.

'ஆல்ரைட், நேரத்தை வீணாக்க வேண்டாம். உடனே உங்கள் காரிலேயே புறப்படுங்கள்.'

சிவானந்தன் ஒரு நிமிடத்தைக் கூட வீணாக்க விரும்பவில்லை — டாக்சியின் முன் சீட்டில் ஏறினார். 'ட்ரைவர்' மீட்டரை'க் தட்டி விட்டவாறே 'கியரை' மாற்றினான் பின்னால் நின்ற கருணாகரனின் காரும் புறப்பட்டது.

'டாக்சி' பருத்தித்துறையை நோக்கி அசுர வேகத்தில் போய்க் கொண்டிருந்தது. 'ட்ரைவரு'க்குப் பக்கத்திலேயே அமர்ந்திருந்த சிவானந்தன் அடிக்கடி கைக் கடிகாரத்தைப் பார்த்தவாறே, 'ட்ரைவரை'த் தூண்டிக் கொண்டிருந்தார்.

அச்சுவேலியைக் கடந்து சென்று வல்லைப் பாலத்தை நெருங்கிக் கொண்டிருந்தது 'டாக்சி'. ஒரே விநாடி—பாலமும் பின்னோக்கி ஓடியது—வல்லைச் சந்தி தெரிந்தது.

சந்தியில் வந்ததும், வலது புறமாகத் திரும்பாமல் இடது புறமாகத் 'தொண்டமானாறு' பாதையை நோக்கித் திரும்பியது அந்த 'டாக்சி',


திடுக்கிட்டுப் போன சிவானந்தன் 'பருத்தித் துறைக்கு அப்படியல்லவா போக வேண்டும்' என்றார்.

'எப்படிப் போக வேண்டும் என்று எனக்குத் தெரியும்; நீ பேசாமலிரு'

'ட்ரைவரின்' அதிகார வார்த்தையைக் கேட்டதும், தூக்கி வாரிப் போட்டது சிவானந்தனுக்கு.

அவசரமாக தன் 'ட்ரவுஸர்' 'பாக்கட்டு'க்குள் கையை விடப் போனார் மறுகணம்...

'மிஸ்டர் சிவானந்தன், 'பக்கட்'டுக்குள் கையை விடா



ஆசிரியர்:— எக்ஸ்பிரஸ் டிரைனுக்கும், 'ஸ்லோ' டிரைனுக்கும் உள்ள வித்தியாசம் என்ன?

மாணவன்:— 'ஸ்லோ' டிரையின் எல்லா ஸ்டேஷனிலும் நிற்கும், 'எக்ஸ்பிரஸ்' டிரையின் இரு ஸ்டேஷன்களுக்கும் இடையில் நிற்கும்.

## சிரித்திரு

சர்க்கஸில் சிங்கம், புலிகளை ஆட்டி வைக்கும் வீரர் ஒருவரை போலீஸார் வீதியோரமாக இருந்த மரத்திலிருந்து பத்திரமாக இறக்கி அழைத்துக் கொண்டு வர வேண்டியிருந்ததாம். காரணம் அவரை நாய் விரட்டியபோது, ஓடிப்போய் மரத்தில் ஏறிக்கொண்டதுதான்'

தீர்கள்! உங்கள் 'றிவால்வர்' பத்திரமாக உள்ளேயே இருக்கட்டும்' என்றவனின் கையிலிருந்த 'றிவால்வர்' சிவானந்தனின் நெஞ்சை நோக்கித் திரும்பியது.

மறு பேச்சுப் பேசாமல் கையை வெளியே எடுத்தார். சிவானந்தன். தான் வெகு சுலபமாக ஏமாற்றப் பட்டது புரிந்தது அவருக்கு.

ஆயினும் அவரது இடதுகை காரின் முன் கதவைத் திறப்பதற்காக, உள் பக்கமாகப் போடப்பட்டிருந்த விசையைப் பிடித்துக் கொண்டது.

கார் ஓடிக் கொண்டே இருந்தது. அந்த விசையை ஒரு முறை கீழ் நோக்கித் தள்ளினார் சிவானந்தன். மறுகணம்...!

கதவு திறந்து கொண்டது! அதன் வழியாக ஓடும் காரிலிருந்து வெளியே பாய்ந்தார்;

## சிரித்திரு

ஒருவர் 1948 ஜூன் மாதம் தொடங்கி, 1956 மே மாதம் வரையில் தொடர்ந்து 'விக்கி:க் கொண்டிருந்தாராம் அவர் மொத்தமாக எத்தனை தடவை விக்கினர் தெரியுமா.

160, கோடி தடவைகள்.

எதிர் பாராத இச் சம்பவத்தினால் அதிர்ச்சி அடைந்த 'ட்ரைவர்', 'பிரேக்' போட்டுக் காரை நிறுத்தினன்.

அதன் 'என்ஜினை' நிற்பாட்டாமலேயே ஒரு கையில் 'றிவால்வருடனும் மறு கையில் 'டார்ச்' உடனும் கீழே இறங்கி, சிவானந்தன் குதித்த இடத்தை நோக்கி ஓடினன், அங்கே...!

அவர் இல்லை. நாற்புறமும் 'டார்ச்' ஒளியை சிதற விட்டான். எங்கும் அவர் இல்லை அதற்குள் எங்கே போய்விட முடியும்?

அவர் குதித்த இடம் முழுவதும் ஒரே பற்றைக் காடாக இருந்தது. பெரிய மரங்கள் அவ்விடத்தில் இல்லாவிடினும் சிறிய பற்றைகள் அடர்த்தியாக வளர்ந்திருந்தன.

காரிலிருந்து குதித்து அந்தப் பற்றைக் காட்டுக்குள் தான் ஓடியிருக்க வேண்டுமென்று நினைத்து, அந்தப் பக்கத்துக்கு 'டார்ச்'சை திருப்பினன்' மறு விநாடி...!

அந்த 'டாக்சி' யின் 'கியர்' மாற்றப் படும் ஓசை அவன் காதில் விழுந்தது. அவசரமாக அந்தப் பக்கம் திரு'பிய போது, டாக்சி நகரத் தொடங்கி விட்டது. மறுகணம்...

தன் கையிலிருந்த துப்பாக்கியை இயக்கினன். 'டுமீல்—டுமீல்—டுமீல்' என்று மூன்று குண்டுகள் வெடித்தன ஆனல் 'டாக்சி' நிற்க வில்லை—வளைந்து வளைந்து பாம்பு போல ஓடிக் கொண்டிருந்தது.

பிரமை பிடித்தவன் போல தெருவில் நின்று அந்த 'டாக்சி' போவதையே பார்த்துக் கொண்டு நின்ருன். அவன் அது கண்ணிலிருந்து மறையும் வரை அசையக் கூட வில்லை. அப்பாவி 'ட்ரைவர்'

சிவானந்தன் தன் கோபம் முழுவதையும் அந்த 'டாக்சி' யின் 'ஆக்சிலேட்டரில்' தீர்த்துக் கொண்டிருந்தார்' அது பறந்தது'

இப்போது சிவானந்தனின் கார் பருத்தித் துறையைக் கடந்து வல்லிபுரக் கோயிலை நெருங்கிக் கொண்டிருந்தது.

தெருவோரமாக இருந்த சவுக்கம் தோப்பு ஒன்றுக்குள் காரை ஓட்டிச் சென்ருர் சிவானந்தன். தோப்பின் மத்தியில் போனதும் நிறுத்தி விட்டு இறங்கினர்.

மீண்டும் தெருவுக்கு வந்து நடக்கத் தொடங்கினர். தன் 'ரேடியம் டயல்' பொருத்தப் பட்ட கைக் கடிகாரத்தை ஒரு முறை பார்த்துக் கொண்டார்.

மறு விநாடி தெருவை விட்டு இறங்கி, பக்கத்திலிருந்த மணல் வெளிக்கு ஊடாக நடந்தார்- இல்லை ஓடினர்.

(தொடரும்)

பொம்மை



கலையுலகின்
பெருமைப்
பெட்டகம்


இலங்கை முழுவதும்
சப் ஏஜண்டுகள் தேவை...

சோல் ஏஜண்ட்
த. தம்பித்துரை அன் சன்ஸ்
226, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

# கழுதைப் பரிசோதகர்

( பரிசு ரூபா: 5/- )

ஒரு நாள் திடீரென்று எங்கள் தலைமை ஆசிரியர் எல்லா வகுப்புகளுக்கும் சென்று 'நாளை சற்று அழகாக உடுத்து வாருங்கள்' என்று கட்டளையிட்டார். எங்களுக்கு ஒன்றுமே புரியவில்லை. ஆனாலும் மறுநாள் நாம் நல்லபடியாக உடுத்துப் படுத்துச் சென்றோம். பாடசாலை வாசலில் வைக்கப்பட்டிருந்த கரும்பலகையில் 'இன்று கல்வியதிகாரி வகுப்புகளைப் பார்வையிடுவார்' என்பதை



Education Officer will inspect all the Classes to-day. என்று ஆங்கிலத்தில் எழுதப்பட்டிருந்தது. உடனே என்னுடன் வந்த சோமு என்ற குறும்புக்கார நண்பன் கரும்பலகையில் எழுதப்பட்டிருந்த Classes என்ற வார்த்தையிலுள்ள C என்ற எழுத்தை அழித்துவிட்டான். மீதியிருக்கும் Lasses என்னும் வார்த்தைக்கோ பெண்கள் என்று அர்த்தம்.

எனவே இப்போ கரும்பலகையில், கல்வியதிகாரி பெண் பிள்ளைகளைப் பார்வையிடுவார் என்ற கருத்துப்பட இருந்தது.

பாடசாலை தொடங்கிச் சில நிமிடங்களில் கல்வியதிகாரி வந்தார். கரும்பலகையில் எழுதியிருப்பதில் அவர் பார்வை சென்றது. சில நிமிடங்கள் அதையே பார்த்துக்கொண்டு நின்றுவிட்டு, பின் மாணவர்களான எங்களைச் சுட்டுவிடுவதுபோல் பார்த்தார். பொங்கிவந்த சிரிப்பை அடக்கிக் கொண்டு, ஒருபாவமும் அறியாதவர்களாக நாம் நின்றுகொண்டிருந்தோம். குறும்புக்காரச் சோமுவும் கூடத்தான்.

பின் கல்வியதிகாரி கரும்பலகையை நோக்கி நடந்தார். 'Lasses' என்ற வார்த்தையிலுள்ள 'L' ஐ அழித்துவிட்டு எங்களைப் புன்முறுவலுடன் பார்த்தார். எங்களுக்கு அசடு வழிந்தது. ஏனெனில் இப்போ அந்த வார்த்தையில் மீதியாக இருப்பது 'Asses' என்பதாகும். அதன்படி பார்த்தால் கரும்பலகையில் எழுதியிருப்பது!

'இன்று கல்வியதிகாரி கழுதைகளைப் பார்வையிடுவார்'

இது ஒரு மறக்கமுடியாத நிகழ்ச்சி.

—அ. விமலதாசன், சங்கானை மேற்கு, பண்டத்தரிப்பு.



# அப்பா ஒழிக!

( பரிசு ரூபா: 5/- )

அன்று நானும், குமாரும் வகுப்பறைக்குள் தயங்கியபடி நுழைந்தபோது வகுப்பு ஆரம்பமாகிவிட்டிருந்தது. நேரங் கழித்து வந்ததிற்கு ஆளுக்கொரு தோப்புக்கரணம் போடச் சொன்னார் ஆசிரியர். போட்டோம்.

பின்பு முதல் நாள் பாடசாலைக்கு வராததிற்குக் காரணம் கேட்டார். நானும் நண்பனும் உல்லாசமாகக் கிரிமலைக்குச் சென்றிருந்தோம். குமார் அதை ஆசிரியரிடம் கூறாது, வேறு ஏதோ காரணம் சொல்லித் தன் ஆசனத்தில் அமர்ந்துகொண்டான். ஆசிரியர் என் பக்கம் திரும்பியதுதான் தாமதம், நான் என் தகப்பனாரிடம் மன்றாடி வாங்கிவந்த விடுமுறைக் கடிதத்தை நீட்டினேன். கடிதத்தை வாங்கிப் படித்த ஆசிரியர் கைப் பிரம்பினால் என்னைக் கண்மண் தெரியாமல் விளாசு விளாசென்று விளாசினார்.

# மாத்திரைக் கதை

## ஏமாற்றம்

ஓங்கி வளர்ந்த மலையின் தோள்களைத் தடவிக் கொடுத்துக் கொண்டே ஆறு ஓடியது: 'இந்த ஆறு எனக்கு எவ்வளவு மரியாதை செய்கிறது' என்று மகிழ்ந்த மலையின் உள்ளமெல்லாம் பெருமித உணர்வுகள் நிறைந்தன.

ஒரு நாள் தன் அடியிலே இருந்த விலையுயர்ந்த இரத்தினக் கற்கள், தங்க மணிகளையெல்லாம் ஆறு அரித்தெடுத்து அலைகளால் உருட்டிக்கொண்டோடுவதை மலை கண்டுகொண்டது. 'இது என்ன அநியாயம்?' என்று மலை கத்தியது.

பரிதாபத்திற்குரிய மலையைப் பார்த்து அங்கே சிறகடித்துப் பறந்த பறவைகளெல்லாம் 'மலையே! உனக்கு இன்னும் உலகத்தைப் பற்றிச் சரியாகத் தெரியவில்லையே!' என்று அனுதாபப் பட்டுக்கொண்டன. ஒரு பறவை சத்தியது'- 'தோளைத் தடவிக் கொடுக்கிறவன் ஆளைத் தழுவிக் கெடுக்கிறவன்!'

—காசி ஆனந்தன்.

அப்பா எழுதிக் கொடுத்த கடிதத்தினுல் கேள்விகள் எதுவும் இருக்காது என்று இறுமாந்திருந்த எனக்கு, அடி விழுந்த வேகத்தில் திகைத்துவிட்டேன். மறுகணம் சமாளித்துக்கொண்டு ஆசிரியரை நோக்கினேன். என் கையில் கடிதத்தைக் கொடுத்த ஆசிரியர், உரத்துப் படிக்கும்படி கட்டளையிட்டார். நானும் விக்கி விக்கிக் கடிதத்தை வாசித்தேன்.

கனம் ஆசிரியர் அவர்கட்கு,

ஐயா எனது மகன் நவரெத்தினம் நேற்று பாடசாலைக்கு என்று என்னிடம் கூறிவிட்டுக் கீரிமலைக்கு உல்லாசமாகச் சென்றுவிட்டான். எனவே தக்க தண்டனை கொடுக்கும்படி தாழ்மையுடன் கேட்டுக்கொள்கிறேன்.

இப்படிக்கு
வி. நாகராஜா

கடிதத்தை என்னிடம் கொடுக்கும்போது அப்பா சிரித்த புன்சிரிப்புக்குக் காரணம் அப்போதுதான் எனக்குப் புரிந்தது.

—நா. நவரத்தினம், கோண்டாவில்.

—

## யார் அந்தப் புதுமுகம்?

அன்றொரு நாள் எமது வகுப்பிற்குப் புது மாணவனொருவன் வந்து சேர்ந்தான். அவனை எப்படியாவது ஏமாற்றவேண்டுமென்று எண்ணினோம். அப்போது பாரூக் என்ற வளர்ந்த மாணவன் தான் ஆசிரியர் போல் வருவதாகவும் அப்போது எல்லோரும் எழுந்திருக்க வேண்டுமென்றும் கூறினான்: அப்படியே செய்வோம் என்று எல்லோரும் ஏற்றுக்கொண்டோம்.

பாரூக் ஆசிரியர் போலவே வகுப்பறைக்கு வந்தான். உடனே எல்லோரும் எழுந்து மரியாதை செய்தோம். 'சிட்டவுன்' என்று கூறிவிட்டு ஆசிரியரும் அமர்ந்தார். ஒருமுறை வகுப்பை நோட்டமிட்டுவிட்டு 'அது யார் அந்தப் புதுமுகம்' என்றார். உடனே அந்தப் புதிய மாணவன் எழுந்து நின்றான். அவனிடம் ஊர், பெயர் போன்றவற்றைக் கேட்டுவிட்டு 'பாட முடியுமா என்று கேட்டார். 'முடியும்' என்று நாணத்துடன் தலையசைத்தான் அவன். அப்படியாயின் ஒரு பாட்டுப் பாடு என்றார் ஆசிரியர். அப் புது மாணவன் பாட ஆரம்பித்ததுதான் தாமதம் வகுப்பு முழுவதும் சிரிப்பொலி முழங்கியது. சிரிப்பொலி கேட்டு அதிபர் வரவும், பாரூக் உட்பட அனைவரும் மௌனமாக வகுப்பில் அமர்ந்துவிட்டோம். இதைக் கண்டு அப் புது மாணவன் மிரள, மிரள விழித்தான். பாரூக் ஆசிரியரல்ல என்பதையறிந்த அப் புது மாணவனின் முகத்தில் அசடு வழிந்தது.

—எச். எம். எம். கலீல், மாவத்தப்பொல, அலவத்துகொடை.

### தேவை ஒரு பாவை

25 வயதான மணமாகாத படித்த வாலிபர் ஒருவருக்கு 20 வயதுக்கு மேற்படாத மணமாகாத ஒரு வேலைக்காரி தேவை. விரும்புபவர்கள் தங்கள் ஜாதகத்தை அனுப்பிவைக்கவும்

# அரிச்சந்திரனுக்கு ஜே!

அருமையான வாக்காளப் பெருமக்களே! உங்கள் அனைவருக்கும் எனது வணக்கங்கள் உரித்தாகுக. நான் கள்ளம் கபடம் இல்லாத அரசியல்வாதி. இம்முறை உங்கள் தொகுதிக்கு வேட்பாளனாக வந்திருக்கிறேன். என்னையே ஆதரியுங்கள் உண்மை பேசுகிறவன் உங்கள் பிரதிநிதி ஆகவேண்டும் என்பதே எனது ஒரே இலட்சியமாகும்.

குறிப்பிட்ட நேரத்திற்கு நான் கூட்டத்திற்கு வரவில்லை என்று குறை நினைத்திருப்பீர்கள். இதற்கு முன்பு நான்கு கூட்டங்கள் பேசவேண்டியிருந்ததால் இத்தாமதம் ஏற்பட்டதென்று எண்ணுகிறீர்களா? அப்படியொன்றும் இல்லை. எனக்குப் போடுவதற்கு மாலை வாங்கி வருமாறு ஒரு பையனிடம் காசு கொடுத்து அனுப்பியிருந்தேன்- பாருங்கள்...அவன் நான்கு மணி நேரமாகக் கடைத் தெருவெல்லாம் சுற்றிவிட்டு வந்திருக்கிறான்...

சரி... இனி நான் பேசப்போகிறேன்.

தினவெடுத்த தோள்கள் படைத்த தீந்தமிழ் வீரர்களே! கணையெடுத்த மன்னர்களின் வழி வந்த காளையர்காள்! நமது உரிமைகளைப் பறித்து உணர்ச்சிகளைத் தடுத்து உருக்குலைக்கப் பார்க்கும் ஆட்சியாளரை நொறுக்குவதே நமது வேலை. திட்டங்கள் போடுவோம்! சட்டங்கள் மீறுவோம்! கொட்டங்கள் அடக்குவோம்! காட்டை ஊராக்குவோம்! கேட்டைச் சீராக்குவோம்! கோட்டை... கோட்டை... கோட்டை...

மன்னிக்கவேண்டும் அன்பர்களே... வசனம் மறந்துபோய் விட்டது. பாடமாக்கிய வசனங்கள் இன்னும் நிறைய இருக்கின்றன...அடுத்த கூட்டத்தில் முழுதும் பேசிக் காட்டுவேன்.

வாக்காளப் பெருமக்களே... இப்போது நான் உங்களிடம் ஒன்று சொல்லவேண்டும். நானும் உங்களைப் போல் ஒரு மனிதன். உங்களில் ஒருவன். எனக்கும் ஆசைகள் உண்டு. என்னுடைய புகைப்படம்- என்னைப் பற்றி நாலு வசனம் பத்திரிகையில் வரவேண்டும். இந்த ஒரு ஆசையில்தான் தேர்தலில் நிற்கிறேன்! என்னிடம் திட்டங்கள் எதுவுமில்லை. ஒரே ஒரு திட்டம் உண்டு. அதுதான் ஐந்து ஆண்டுகளுக்குப் பிறகு மீண்டும் உங்களை வந்து சந்திப்பது.

ஏன் மகா ஜனங்களே! பிரதிநிதி ஆக எனக்குத் தகுதி இல்லையா? (சோடா குடித்துக்கொள்கிறார்) எனக்கு என்ன தகுதி இல்லை? (மறுபடியும் குடித்துக் கொள்கிறார்) எனக்குச் சவால் விடத் தெரியாதா? பத்திரிகைகளுக்கு அறிக்கை விடத் தெரியாதா? சாவீட்டுக்குப் போகத் தெரியாதா? கலியாண வீட்டுக்குப் போகத் தெரியாதா? நாட்டின் அடுத்த ஜீவாதாரப் பிரச்சனையான ஆசிரியர் இடமாற்றம் விஷயத்திலும் தீர்வு காண எனக்குத் தெரியாதா? என்ன?

வாக்காளப் பெருமக்களே, இதுவரை எனது பேச்சைக் கேட்டீர்கள். என்னை இம்முறை பிரதிநிதியாகத் தெரிந்தெடுக்குமாறு உங்களைப் பணிவன்போடு கேட்டுக்கொள்கிறேன். இங்கே பலர் மேடையில் பேசுவதற்குத் துடித்துக்கொண்டிருக்கிறார்கள். என்னுடைய எதிர் வேட்பாளரை நான் தாக்குவது அவ்வளவு நன்றாக இல்லை. அவர்களே பேசுவார்கள். வணக்கம்.

—பத்மநிதி

ஃ ஃ ஃ



கணவன்:- வீட்டுக்கு வரும் திருடர்களை விரட்டுவதற்கு துப்பாக்கி தேவையில்லை! உனது 'போட்டோ'வே போதும்.

—தாமாஷ்ர்

# அவளுக்காக...

''இந்த வீட்டை விட்டுப் போய் விடுவதனுல் மட்டும் நான் புரிந்துவிட்ட தவறு—தவருகாமல் போய்விடுமா? கௌரியின் மென்மையான இதயத்தில் நான் உருவாக்கிவிட்ட காயம் அதனுல் ஆறி விடுமா? சே...எவ்வளவு அறிவீனமாக நடந்து கொண்டு விட்டேன்''

தன்னைத் தானே நொந்து கொண்டவனுகத் தன் பெட்டியினுள் உடைகளை அடுக்கிக் கொண்டிருந்தான். சுகுமார் அவனது அறைக்கதவை யாரோதிறக்கும் ஒலி கேட்கவே திரும்பிப் பார்த்தான். அங்கே கௌரி தான் நின்று கொண்டிருந்தாள். ஒரு கணம் தான்! மறுகணம் தன் பார்வையைப் பெட்டியின் மீது பதித்தவாறே தன் அலுவலைத் தொடர்ந்தான் அவன். கௌரியைப் பார்க்க, அவள் விழிகளைச் சந்திக்கவே வெட்கமாகவும் வேதனையாகவும் இருந்தது அவனுக்கு.

கௌரி எதற்காக இப்போது இங்கே வந்திருப்பாள்...? என் எண்ணத்தைப் புரிந்து கொண்டு—என்னைத் தடுத்து நிறுத்த வந்திருப்பாளோ? இருக்காது! இனியும் நான் இங்கிருந்தால், அவளைப் பார்க்க நேரிடும் ஒவ்வொரு கணமும் நான் அணு அணுவாகச் செத்துக் கொண்டிருப்பேன் என்பது அவளுக்குத் தெரியாதா என்ன?...

'என்னம்மா வேணும்?' தலையை நிமிர்த்தாமலேயே கேட்டான்.

'அம்மா உங்களைக் கூப்பிடுகிறு?' கௌரி சொல்லிவிட்டுப் போய்விட்டாள். 'அம்மா என்னைக் கூப்பிடுகிறுளா? ஏன்? ஒரு வேளை...நடந்ததெல்லாவற்றையும் கௌரி தாயிடம் சொல்லியிருப்பாளோ?' மனம் மீண்டும்-குழப்பத்தில் ஆழ்ந்தது. ஆனுல் அந்தக் குழப்பம் அதிக நேரம் நீடிக்க வில்லை, அவனுக்குத் தெரியும், கௌரியின் இதயம் எப்படிப் பட்டதென்று...!

சி. மகேஸ்வரன்

யோசித்தபடியே, பெட்டியை மூடிவிட்டுத் தன் அறையிலிருந்து வீட்டின் நடுக்கூடத்துக்கு வந்தான்.

வாத நோயுடன் போராடிய படியே படுக்கையில் முடங்கிக் கிடக்கும் கணவனின் அருகே உட்கார்ந்திருந்தாள் செல்லம்மாள்; கௌரியின் அன்னை அவள். 'உட்காரு தம்பி' என்று அங்கிருந்த ஒரு பழைய—நாற்காலியை சுட்டிக் காட்டி விட்டு, அவனுக்கு முன்னுல் கிடந்த துண்டுப் பாயின்மீது உட்கார்ந்தாள் செல்லம்மாள்.

'நீ இந்த வீட்டைவிட்டுப் போகப் போறியா?'

பதில் பேசவில்லை. ஆமென்பதுபோலத் தலையை மேலும் கீழுமாக அசைத்தான் அவன் 'நீ இங்கை வந்து இப்ப எவ்வளவு காலமாச்சுது?' செல்லம்மாள் இப்போது எதற்காக இந்தக் கேள்வியைக் கேட்கிருள் என்பது புரியவில்லை. ஆனுலும் அவள் கேட்பதற்குப் பதில் சொல்ல வேண்டுமே என்பதற்காக—'இரண்டு வருடங்களுக்கு மேல் இருக்கும்' என்ருன் அவன்.

'இரண்டு வருஷங்களில் வீடுதான் வெறுக்கும் சரி... ஆனுல் மனிசரையும் வெறுத்திருகிறதா?' செல்லம்மாளின் இந்த வார்த்தைகள் பட்டென்று தாக்கின. அவன் யாரை வெறுத்தான்? உறவென்று எவருமே இல்லையென்று இருந்தவனுக்கு, வேலை தேடிப் பட்டணம் வந்தபோது உண்ண உணவும், தங்க அறையும் தந்தவர்களையே தன் உறவாக நினைத்துக்கொண்டிருப்பவனுக்கு அவர்களை வெறுக்க மனம் வருமா? என்ன கேள்வி இது?

'வெறுப்பதா? யாரையம்மா...?'

'பின்னை...? நீ இந்த வீட்டை விட்டுப் போறதுக்கு என்ன காரணம்?' செல்லம்மாளின் இந்த வினு சற்றுத் திடுக்கடச் செய்தது. செல்லம்மாளுக்கு என்ன காரணத்தைக் காட்டிப் போவதென்று அவன் இதுவரையில் தீர்மானிக்கவேயில்லை.

ஒருவர்:- (புத்தகக் கடையில்) 'கணவன், மனைவியின் எஜமான் என்ற புத்தகம் இருக்கிறதா?

விற்பனையாளர்:- கதை, கற்பனை புத்தகங்களுக்கு மாடிக்குப் போங்க சார்.

விளம்பரத்துக்கு...

சுவரொட்டிகள், சினிமா விளம்பரக் கண்ணா டிகள், பெயர்ப் பலகைகள், புரோசஸ் புளொக்கு கள், டிசைன்கள், சில்க் ஸ்கிரீன் பிரின்டிங்.

அலங்காரத்துக்கு...

வண்ணமுறைகள், ஒளியலங்காரம், கடைகளை திருப்பி அழகுற அமைத்தல், ஜன்னல் அலங்காரம்

இவை அனைத்திற்கும் இங்கே தொடர்பு கொள்ளுங்கள்

## "விஸ்யுவல் பப்பிளிசிட்டி"

உள் அலங்காரச் சேவைகள்

இல: 46, முதலாவதுமாடி, பிரிஸ்டல் கட்டிடம், யோக் வீதி, கொழும்பு.

ஒப்புவமையற்ற உடலழகை மேலும்
மிகைப்படுத்திக் காட்டவல்ல கவர்ச்சிமிகு
நகைகள் பெற விஜயம் செய்யுங்கள்



## ரஞ்சனா நகை மாளிகை

வெள்ளவத்தைப் பிள்ளையார் கோவில் அருகில்

377-379, காலி வீதி, பம்பலப்பிட்டி.

கொழும்பு-4. போன்- 85580



பேச்சாளர்:- (குடிப்பழக்கத்தைக் கண்டித்துப் பேசுகையில்) இந்த மேடையில் நான் ஒரு வாளியில் தண்ணீரையும், மற்ற வாளியில் பீரையும் வைத்து ஒரு கழுதையையும் கொண்டு வந்து விட்டால், அது எதைக் குடிக்கும் என்று சொல்ல முடியுமா?

ஒருவர்:- தண்ணீரைத்தான் குடிக்கும்.

பேச்சாளர்:- எதனுல் என்று சொல்ல முடியுமா?

குரல்:- அது கழுதையாக இருப்பதால்.

'எனக்கு வேலை மாற்றலாயிருக்கு அம்மா' எதையாவது சொல்லிச் சமாளிக்க வேண்டும் என்பதற்காக இப்படிச் சொன்னுன். தான் அந்த வீட்டை விட்டுப் போவதற்குச் சரியான காரணம் கௌரிக்குத் தெரிந்திருக்கும் என்ற வகையில் அவனுக்கு ஒரு ஆறுதல்.

'என்னமோ தம்பி... உன்னை வேறை இடத்துப் புள்ளையைப் போலை நினைக்க என்னுலை முடியேல்லை. எனக்கு ஆம்பிளைப் பிள்ளை இல்லையே எண்ட குறையை இல்லாமல் செய்ய வந்தவன் மாதிரி வந்து இன்டைக்கு வந்த வழியிலையே போகத் துணிஞ்சிட்டே... உன்னைத் தடுக்கிற உரிமை கூட எனக்கில்லை.. ஆனு.. ஒன்று மட்டும் சொல்வேன். இஞ்சை பார்.. தம்பி நானும் இவரும் இண்டைக்கோ நாளைக்கோ எண்டிருக்கிறம். ஆனு... கௌரி இருக்கிருளே... தாலி கட்டினவனையும் ஒரு வருஷத்திலை பறி கொடுத்திட்டு அறுதாலியா இருக்கிருளே... அவளுக்கு ஒரு அண்ணனுக நீ இருக்கப் படாதா? கட்டாயமாக எங்களை விட்டுப் பிரிஞ்சு நீ... போகத்தான் வேணுமா?'

செல்லம்மாளின் குரல் தழுதழுத்தது. தாயன்பையே இன்னதென்று அறியாத மனமும் அவளது நிலை கண்டு உருகத்தான் செய்தது. ஆனுல்... கௌரிக்குதான் அண்ணனுக இருக்க வேண்டுமாமே... அந்த உரிமைக்குரியவனுக இருக்கும் தகுதியை நான் இழந்து விட்டேனே... அந்தத் தங்க விக்கிரகம் எங்கே? இந்தச் சபலபுத்திக் காரன் எங்கே?

சில நிமிடங்கள் அமைதியாகக் கழிந்தன. 'என்ன தம்பி பேசாமல் இருக்கிறை...?'

'என்னை மன்னிச்சிருங்க அம்மா நான் கட்டாயம் போகத்தான் வேணும்' இருக்கையைவிட்டு எழுந்து கொண்டான். செல்லம்மாள் ஏதோ சொல்ல நினைத்தவள் என்ன நினைத்துக் கொண்டாளோ, எதுவும் பேசவில்லை.

தன்னுடைய பதிலால் அந்தத் தாயுள்ளம் என்ன பாடு படும் என்பது புரிந்தது. ஆனுல் அதற்காக அவன் தன்னுடைய முடிவை மாற்றிக் கொள்ளத் தயாராக இல்லை. தன் அறையினுள் சென்று உட்கார்ந்து கொண்டவன் சிந்தனையில் ஆழ்ந்தான். அவன் அந்த வீட்டில் வந்து தங்கியிருந்த இரண்டு வருடங்களிலும் நிகழ்ந்துமறைந்து விட்ட சம்பவங்கள் யாவும் அவனது மனக்கண்முன் நிழற்படம் காட்டின.

ஒவ்வொருவர் வாழ்க்கையிலும் எதிர்பாராத நிகழ்ச்சிகள் சந்திப்புக்கள் எத்தனையெத்தனையோ நிகழத் தானே செய்கின்றன. அவனுக்கு மட்டும் அவை விதிவிலக்காகிவிட முடியுமா? வாடகைக்குக் குடியிருக்க வந்தவன் என்ற நிலைமாறி செல்லம்மாளின் குடும்பத்திலேயே ஒருவனே என்று எண்ணுமளவுக்கு அவர்களோடு ஒன்றிப் போய் விட்டவன் அவன்.

கௌரியைக் காணும் தோறும் அவனது இதயம் அவளுக்காக இரங்கும். அவளது வயதொத்த எத்தனையோ பெண்கள் இன்னும் கன்னிகளாகவும், நல்ல இல்லத்தரசிகளாகவும் வாழ்ந்து கொண்டிருக்கும்போது—பொட்டிழந்து பூவிழந்து, குடும்பத்



அம்புலிமாமா

சிறுவர் சிறுமியர் விரும்பிப் படிக்கும் மாதப் பத்திரிகை

இலங்கை முழுவதும் சப் ஏஜண்டுகள் தேவை.

சோல் ஏஜண்ட்

த. தம்பித்துரை அன் சன்ஸ்

226, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

காரியாலயம்:- 84, லோறிஸ் றேட், கொழும்பு-4.

தலைவி என்ற புனிதமான பதவியையும் இழந்து சோர்ந்து கிடக்கும் கௌரியை எண்ணி மனவேதனையடைந்த நாட்கள் பல. ஆனால் அவளுக்காகத் தன் இதயம்வேதனைப்படுவதைஅவன் வெளிக் காட்டிக் கொள்ளவே இல்லை.

ஒருநாள்...

செல்லம்மாளுடன் பேசிக் கொண்டிருந்த போது அவளிடம் கேட்டான். 'ஏனம்மா! கௌரியை நீங்க இப்பிடியே வைச்சுக் கொண்டிருந்தா எப்பிடி...?' 'வேறை என்ன தம்பி செய்யச் சொல்கிறை?' செல்லம்மாள் புரியாமல்தான் கேட்டிருக்க வேண்டும்;

'கௌரிக்கு யாரையாவது கல்யாணம் செய்து வைச்சா...?'

## சிரித்திரு

பிரிஸ்பேனில் 92 வயதான ஒரு மாது 92 வயதான தன் கணவரை விவாக ரத்துச் செய்துவிட்டாள். காரணம் அவர் இளம் பெண்களின் கவர்ச்சிப் படங்களைச் சேகரித்துக் கொண்டு திரிகிறாராம்.

அவன் வார்த்தைகளை முடிக்க வில்லை. நீண்டதோர் ஏக்கப் பெருமூச்சு எழுந்தது செல்லம்மாளிடமிருந்து'

'பொம்பிளைக்கு ஒரு துணை வேணும்' என்டதுக்காக அவளை ஒருத்தனுக்குக் கட்டி வைச்சம் தம்பி... ஆனா... அவன் நல்லா இருக்கிறது அந்த ஆண்டவனுக்கே பொறுக்கவில்லைப் போலை... அவளின்ரை தாலி அறுந்து போச்சு... அவள் குடுத்து வைச்சது அவ்வளவுதான்... இனி அவளை ஒருத்தனுக்குக் கட்டி வைக்கிறதென்டா ஆர் சம்மதிக்கப் போறான்? குமரியாயிருக்கிற பொம்பிளையளுக்கே சீதனத்தை அள்ளிக் குடுக்கிற காலம் தம்பி.. இந்த விதவைக்கு நான் என்னத்தைக் குடுக்க...'






அந்தத் தாயின் புலம்பலில் நியாயம் இருப்பதாகவே பட்டது. அன்றிரவு முழுவதும் அவன் உறங்கவே இல்லை' மறுநாள் காலை அவன் விழித்தெழுந்த போது அவன் ஒரு முடிவுக்கு வந்திருந்தான்.

'கௌரிக்கு நானே வாழ்வளித்தால் என்ன? கௌரி அதை மனம் விரும்பி ஏற்றுக் கொள்ளாமலா போய்விடுவாள்.. இருண்டு கிடக்கும் அந்தப் பேதையின் வாழ்க்கையில் ஒழியேற்றி வைக்க வேண்டியது என் கடமை...!' இப்படியெல்லாம் நினைத்தான். இளமை மெருகில், மனித மனதில் எழுகின்ற வெறும் சபலத்திற்கு அவன் ஆளாகி விட்டதாகச் சொல்லி விட முடியாது. அப்படிப்பட்டவனே அல்ல. தன் எண்ணத்தைக் கௌரி ஏற்றுக் கொள்வாளா?... அவனுக்குப் புரியவில்லை. கௌரியிடம் நேரடியாகவே கேட்டுவிடுவது என்று தீர்மானித்தான் அவன்.

அன்று மாலை... செல்லம்மாள் வெளியே எங்கோ சென்றிருந்தாள். வீட்டின் பின்புறமுள்ள தோட்டத்தில் நின்றபடியே எதையோ வெறித்துப் பார்த்தவாறிருந்தாள் கௌரி..

'கௌரி...!' குரல் கேட்டுத் திரும்பியவளின் விழிகள் வியப்பில் விரிந்தன 'நீங்களா?' அதற்கு மேல் அவள் பேசவில்லை. 'உன்னுடன் கொஞ்சம் பேச வேணும்.'

கௌரி அவனையே பார்த்தாள்.

'எதைப்பற்றி...'

'உன் வாழ்க்கையைப் பற்றி கௌரியின் இதழ்களில் விரக்தி கலந்த புன்னகை தோன்றி மறைந்தது. 'அது... எப்போதோ முடிந்து போய்விட்டதே!' அவள் குரல் கரகரத்தது

'அப்படி நாம் நினைப்பது தான் தவறு' நாம் உயிரோடு இருக்கும் போது வாழ்க்கை

முடிந்து விட்டதாக நினைப்பானேன்? ... நாம் நினைத்தால் வாழ முடியும் கௌரி.. !'

'நினைத்தபடியெல்லாம் வாழ முடிந்தால் அது வாழ்க்கையே இல்லையே' அவன் வியப்புடன் அவளை நோக்கினான் அவளது துன்பத்திலேயே முளைத்த வேதாந்தமா அது? யோசனையில் ஆழ்ந்தான். அங்கே அமைதி நிலவியது. கௌரிக்குப் பிடிக்கவில்லைப்போலும் 'எதுவோ சொல்ல வந்தீர்களே!'

'ஆ... ஆமாம்... கௌரி. கேட்கிறேனே யென்று வேதனைப் படாதே. எத்தனை நாட்களுக்குத்தான் நீ இப்படியே வாழ்ந்து கொண்டிருக்கப் போகிறாய்?'

'சாகும் வரைக்கும்...' பட்டென்று வந்தது பதில். அதை எதிர்பார்க்கவே இல்லை... கௌரி தொடர்ந்தாள்...' நீங்க எந்த எண்ணத்தோடு என்னிடம் கதைக்க வந்திருப்பீர்கள் என்பது எனக்குப் புரிகிறது... தயவு செய்து என்னை மன்னிச்சிருங்க... பெண்ணொருத்தி சுமங்கலியா இருக்கிறதுதான் பெருமை... அது இழந்து விட்ட மங்கலப் பொருள்களை இன்னொருவர் கையால் ஏற்றுக் கொள்வதால் தான் வரவேணுமென்றால்... அந்தப் பெருமை எனக்கு வேணும்... உங்களை என் உடன் பிறந்தவராக நினைச்சுச் சொல்கிறேன். என்னைக் கல்யாணம் பண்ணிக் கொள்கிற எண்ணத்தை மறந்திருங்க... மன்னிச்சிருங்க...'

எந்த விதமான பதட்டமுமின்றி மளமளவென்று பேசி விட்டு வீட்டினுள் நுழைந்து கொண்டாள் கௌரி. மென்மையென்று வர்ணிக்கப்படும் பெண் மனதில் இத்தனை வைரமா? சிலையாகி நின்றான்... இந்தச் சம்பவத்திற்குப் பின் கௌரியை மீண்டும் சந்திக்கவே அவன் மனம் விரும்பவில்லை. புனிதமான அவ



ளுடைய கால்கள் நடமாடும் அந்த வீட்டில் தான் குடியிருப்பதே தவறு என்று நினைத்தான் அவன். அடங்கிக் கிடந்த அவள் உள்ளத்து உணர்ச்சிகளை... முடங்கிக் கிடக்கும் அவள் மனவேதனையை. என் அறியாமையால் நான் பெருகச் செய்து விட்டேனோ?

உடலால் வாழ்ந்து வெறும் உணர்ச்சிகளுக்குப் பலியாகிக் கொண்டிருப்பதையே வாழ்வெனக் கொள்ளும் மனிதச் சந்தையிலே, உள்ளத்தால் வாழும் கௌரியை எண்ணி மெய்சிலிர்த்தான். களங்கமற்ற அவள் மனதை நான் புண்படுத்தி விட்டேனோ?

'நான் இனி இங்கிருப்பதே கூடாது. போய்விட வேண்டும்.' அந்த முடிவுக்குத்தான் வர முடிந்தது..! தன்னலத்தை மறந்து மற்றவர்களுக்காக வாழ்வதில்தான் வாழ்க்கை நிறைவு பெறுகிறது என்ற உண்மையைச் சுமந்து கொண்டு அவன் புறப் பட்டு விடுவான்.

'வருகிறேன் அம்மா!' புறப் பட்டு விட்டான். செல்லம்மாள் அவனைப்பார்த்தபோது அவள் விழிகள் சற்றுக் கலங்கின... 'எங்களை மறந்திடாதே தம்பி... எங்கை இருந்தாலும் கடிதம் போடு' சரியென்று தலையசைத்தான் சுகுமார். அவன் விழிகள் கௌரியைச் சந்தித்தன. வாசற் கதவைப் பிடித்தப்படி நின்றிருந்தாள் அவள். அவள் விழிகளிலும் நீர்த்துளிகள்..! 'வருகிறேன் தங்கச்சி' சொல்லிவிட்டு விரைந்து நடந்தான்.

## இதற்கு என்ன தலைப்பு?

கதையையோ, நாவலையோ எழுதிவிட்டு அவற்றிற்கு என்ன பெயர் கொடுப்பதென்று தலையைப் பிய்த்துக் கொண்டிருக்கின்றீர்களா? வேண்டாம். கீழே இருக்கும் கதைத் தலைப்புகளில் பொருத்தமாக எதையேனும் எடுத்துப் போட்டு விடுங்கள்.

துப்பறியும் கதைத் தலைப்புகள்: குருதிசிந்தும் கொள்ளிக் கண்கள், கதவு திறந்தது கத்தி தெரிந்தது, நேற்றுச் செத்தவன் இன்று வந்தான், பிணம் பேசியது

காதல் கதைத் தலைப்புகள்: மொட்டவிழ்ந்த முல்லைமலர், நினைவுண்டா நெஞ்சமே? விழிகள் தந்த வேதனை.

தத்துவக் கதைத் தலைப்புகள் ஜீவதோபதேசம், பிரபஞ்சப் பிரகிருதி, மானசீக மனோதாபம், பிரமானுகூலம்!

பீடி புகைப்போருக்கு ஓர் அரிய வாய்ப்பு!

# யானை பீடி ஸ்பெஷல்

குணம் மணம் நிறைந்தது

**ஸ்பெஷல் யானை பீடி ஒன்றே.**

இலங்கையில் தரம் குறையாமல் தயாரிக்கப்படுவதும், தனக்கென ஒரு தனியிடத்தை வகுத்துக்கொண்டதும்

**ஸ்பெஷல் யானை பீடி ஒன்றே.**

எல்லோரும் விரும்பிப் புகைப்பதும், எங்கும் சுலபமாகக் கிடைக்கக்கூடியதும்

**ஸ்பெஷல் யானை பீடி ஒன்றே.**

உள்நாட்டுக் கைத்தொழிலுக்கு ஊக்கமும், ஆக்கமும் அளியுங்கள்!

தயாரிப்பாளரும் விநியோகத்தர்களும்:

**யானை பீடி கம்பெனி,**


130, ஆட்டுப்பட்டித் தெரு, கொழும்பு- 13

தொலைபேசி: 31651.

# காந்திஜியின்

# நகைச்சுவை உணர்வு

எஸ். எம். ஜே. பைஸ்தீன்





காந்திஜியை மகாத்மாவாக, அஹிம்சா வழியில் இந்தியப் போராட்ட வீரராக, வழக்கறிஞராக, சீர்திருத்தவாதியாக நாம் அறிந்துள்ளோம். ஆனால் நகைச்சுவையைப் பொறுத்தவரையில் அவர் எப்படிப்பட்டவர்? ‘காந்திஜிக்கு நகைச்சுவை உணர்வு இருக்கிறதா?’ இதே கேள்வியை பத்திரிகை நிருபரொருவர் நேரிலேயே காந்தியிடம் கேட்டும்விட்டார். ‘எனக்கு மட்டும் நகைச்சுவை உணர்வு இல்லையென்றால், உங்களைப் போன்ற கோபக்கார ஆசாமிகளோடு பழக என்னால் முடியாமல் போயிருக்குமே’ என்று அவருக்குத் தெளிவாகப் பதில் தந்தார் காந்திஜி. பண்பட்ட சிறந்ததொரு நகைச்சுவையாளராக விளங்கியவர் அவர்.

‘காந்திஜி நகைச்சுவையின் சிறப்பை நன்றாக உணர்ந்திருந்தார். தமக்கு நகைச்சுவை உணர்வு இருந்திராவிட்டால், தம்மை எதிர்நோக்கிய தாக்குதல்கள் வெகு காலத்துக்கு முன்பே தம்மைக் கொன்றிருக்குமென்று அவர் ஒருமுறை கூறினார். அவர் ‘இந்தியர்கள் அநேகமாகச் சிரிப்புக் கலையையே மறந்துவிட்டார்கள்’ என்று அடிக்கடி குறைப்படுவதுண்டு.

பெரும்பாலோருக்கு, மற்றவர்களது பலவீனங்களை, குறைகளை, தவறுகளை நகைச் சுவைப் பொருளாகக் கொண்டு சிரிப்பதென்றால் கொள்ளை இன்பம். ஆனால் அதே முறையில் தம்மை யாரும் கேலி பண்ணுவதைப் பொறுக்க முடியாது. இந்த வகையில் நேருஜிக்கும், காந்திஜிக்கும் மலையத்தனை வேறுபாடு காணப்படுகிறது. ‘நேரு ஒரு சிறு பையனைப் போலச் சிரிப்பார்தான்; அவர் கேலிகளை நன்றாக ரசிக்கவும் செய்வார்தான்; ஆனால் நிச்சயமாக அக் கேலிகள் அவரையே குறிவைத்தனவாக மட்டும் இருந்துவிடக் கூடாது’ என்று கிருபாளனி தெரிவிக்கிறார். இதன் காரணமாகவே எவரும் நேருவைக் கேலிக்குரிய பொருளாகக் கொள்ள முன் வருவதில்லை. ஆனால் காந்திஜியோ, கேலிகள் தம்மைக் குறை கூறுவனவாக இருந்துவிட்டாலும் கூட மகிழ்வுடன் அவற்றை ஏற்றுக்கொண்டு, தானும் சேர்ந்து சிரிப்பார்.

காந்திஜி சிரிக்கும்போது, கௌரவத்தையோ, பெரிய மனுஷத் தன்மையையோ கருதி நாசூக்கைக் கையாள முயல மாட்டார். நன்றாக வாயைத் திறந்து மனம் விட்டுச் சிரிப்பார்: அவர் தமக்கேற்பட்ட நெருக்கடிகளை நகைச்சுவை உணர்விலேயே சமாளித்தார். 1937 மார்ச் மாதம் காங்கிரஸ் மாகாணங்களில் ஆட்சிப் பொறுப்பை ஏற்குமா மாட்டாதா என்ற கேள்வியே மக்களனைவரையும் எதிர்நோக்கியிருந்தது. அச் சந்தர்ப்பத்தில் நிருபரொருவர் அவரிடம் ‘காங்கிரஸ் ஆட்சிப் பொறுப்பை ஏற்குமா?’ என்று வினவினார். அதற்குக் காந்தி என்ன பதிலைக் கூறியிருந்தாலும் மிகவும் பிரசித்தப்படுத்தப்பட்டிருக்கும். அவரது மௌனத்துக்குக்கூட ஆயிரம் அர்த்தங்கள்






கற்பிக்கப்பட்டிருக்கும்; ஆனல் அவர், 'ஏன் நீங்களும் ஒரு மந்திரியாக வேண்டும் என்று ஆசையாக இருக்கிறதா?' என்று ஒரு போடு போட்டார். சூழவிருந்தோர் சிரித்துவிட்டார்கள். நிருபரோ சொல்லாமல் கொள்ளாமல் நழுவிவிட்டார்.

நமக்கு இடுக்கண் வரும் வேளையிலும் நகும் ஆற்றல் படைத்தவர் காந்திஜி. 1932 செப்டெம்பர் மாதத்தில், பூனவில் நடந்த உண்ணவிரதங் காரணமாகக் காந்தியுட்படப் பல தலைவர்கள் சிறைப்படுத்தப்பட்டிருந்தனர்; சிறையினுள்ளே மற்றத் தலைவர்கள் சூழவிருக்க, காந்திஜி நடுவில் ஒரு மேசையில் உட்கார்ந்துகொண்டு, 'அவையோரே இக் கூட்டத்திற்கு நான் தலைமை தாங்குகிறேன்' என்று தொடங்கினர். காந்திஜியின் கிண்டலையுணர்ந்து, அவர்கள் தமது வேதனையையும் மறந்து சிரிக்க முடிந்தது.

ஒருமுறை தன் உடைகளைத் தானே துவைக்கவேண்டு என்ற எண்ணத்தினல், துணிகளை வெளுக்கும் விதம்பற்றி ஒரு புத்தகத்தை வாங்கிப் படித்துத் தெரிந்துகொண்டார். அது விதித்த ஆலோசனைகளைத் துணைகொண்டு, தமது வெள்ளை நிறக் கழுத்துப் பட்டியைக் கழுவினர்.

மறுநாள் அதையணிந்து நீதிமன்றத்துக்குச் செல்லும்போது, அளவுக்கதிகமாகக் கஞ்சி போடப்பட்டிருந்ததால் பட்டியிலிருந்து கஞ்சிப் பசை பொலபொலவென உதிர்ந்துகொட்டியது; இதைக் கண்டு அவரது சக வழக்கறிஞர்கள் சிரித்தனர். அப்போது காந்தி 'கழுத்துப் பட்டிகளை நானே சொந்தமாகக் கழுவிக்கொள்வதில் எனது முதற் பரிசோதனைதான் இது. இதனல் எனக்கு எவ்விதச் சிரமமும் உண்டாகவில்லை. மேலும் உங்களையெல்லாம் இவ்வளவு தூரம் சிரித்து மகிழ்ந்து குதூகலப்படுத்தும் சந்தர்ப்பத்தை அது ஏற்படுத்தித் தந்ததே என்பதை நினைக்க நினைக்கப் பெருமையாக இருக்கிறது' என்று கூறினர். இத்தகைய வேளைகளில், ஆரம்பத்தில் காந்திஜியைக் கண்டு எள்ளி நகையாடியோர் அவரது சாமர்த்தியமான விளக்கவுரைகளைக் கேட்ட பின்பும் அப்படிச் சிரித்திருப்பாரா, மனவேதனையுண்டாக்குமாறு கேள்விகளைக் கேட்டிருப்பாரா என்பதற்குரிய பதிலை நாமே யூகித்துக்கொள்ளலாம்.

இவ்வாறன அரிய பண்புகள் வாய்க்கப்பெற்றிருந்ததால்தான் காந்திஜி ஒரு மகாத்மாவாக உயர முடிந்தது. அவர் எப்போதுமே கலகலப்பாகக் காட்சியளிப்பார். அவரது வெற்றியின் இரகசியமே இதுவென்றாலும் மிகையாகாது.

---

## கணக்கா விடுகிறீர்கள்?

மூன்று நண்பர்கள் ஓட்டல் ஒன்றில் சாப்பிடப் போனர்கள். சாப்பிட்டு முடிந்த பின் சர்வர் 25 ரூபாவுக்கு 'பில்' கொண்டு வந்தான்; மாற்றிய காசு இல்லாதபடியால் ஆளுக்குப் பத்துப் பத்து ரூபாய் வீதம் 30 ரூபா கொடுத்தார்கள்.

சிறிது நேரத்தில் சர்வர் மீதியான 5 ரூபாவைக் கொண்டு வந்தான் (5 ஒரு ரூபாக் குத்திகள்) உடனே நண்பர்கள் ஆளுக்கு ஒவ்வொரு ரூபாவை எடுத்துக்கொண்டு மீதியான 2 ரூபாவைச் சர்வருக்கு 'டிப்'பாகக் கொடுத்தார்கள்.

ஆகவே ஒருவர் தனது சாப்பாட்டுக்கு 9ரூபா வீதம் கொடுத்திருக்கிறர்கள். (ஏனெனில் 10 ரூபா வீதம் கொடுத்து, திருப்பி 1 ரூபா எடுத்தார்கள்) மொத்தமாக 27 ரூபாவை நண்பர்கள் கொடுத்திருக்கிறர்கள். சர்வருக்கு 2ரூபாவை 'டிப்'பாக கொடுத்திருக்கிறர்கள். ஆகையினல் எல்லாமாக 29 ரூபாவைக் கொடுத்திருக்கிறர்கள். மிகுதி ஒரு ரூபாவுக்குக் கணக்கு என்ன?

—சோமசுந்தரம் ராமேஸ்வரன், தெகிவளை தெற்கு.

## சிரித்திரு

விவாகரத்துச் செய்துகொள்ளாவிடில் எங்களை அனுகரிகப் பேர்வழிகள் என நினைத்துவிடக்கூடுமாதலால், ஹொலிவுட் வழக்கத்தையொட்டி விவாகரத்துச் செய்துகொள்கிறோம்.

மற்றும்படி எங்களுக்குள் மன வேற்றுமை எதுவும் இல்லை.

—ஜோன்ஸ் தம்பதிகளின் விவாகரத்துக்குப் பின் அறிக்கை.

# சிலேட்

டி. அருப் ஸ்ரீசிவராம்

முழுசாக இருந்த சிலேட் ஒன்று விழுந்து உடைந்துவிட்டது.

சிதறிய துண்டுக்கள் ஒன்றுக்கொன்று சண்டை போட்டன. 'யாரு சிலேட்' நான்தான் சிலேட்! என்றது ஒன்று.

'மூகறையைப் பார்! சிலேட்டாம் சிலேட்' என்று மற்றது பரிகாசம் பண்ணியது. சிலேட் சட்டத்திலிருந்து விழாது நின்ற ஒரு பெரிய துண்டு மட்டும், 'உஷ், யாரங்கே சிலேட் துண்டுகளுக்குள் என்ன சண்டை?' என்றது.

'சிலேட் துண்டுகளுக்குள்ளா? எல்லோரும் சிலேட் துண்டுதானா? என்ன ஓய்! அந்தச் சுவரையும் சிலேட் என்று சொல்லுமேன். கொஞ்சம் வாட்டசாட்டமாக இருந்தாப் போல் உம்ம உளறலை நம்பவேணுமோ? நான் மட்டுந்தான் இங்கே சிலேட். என் நெஞ்சைப் பார் எழுத்தெல்லாம் இருக்கு.' என்றது முதல் துண்டு.

பெரிய துண்டு, 'உன் நெஞ்சு எழுத்தைத் தானே பார்க்கிறாய். அதை வசனமாகப் பார்த்தாயானால் தானே தெரியும். அதன் தொடர் என் நெஞ்சிலும் இருக்கு, அவன் நெஞ்சிலும் இருக்கே' என்றது.

'நீயும் உன் தத்துவமும்' பாய்ந்தது முதல் துண்டு.

பெரிய அகலமான துண்டு அந்தப் பாய்ச்சலுக்குப் பயந்துவிட்டது. ஏனென்றால் மற்றத் துண்டுகளுக்கு இல்லாத ஒரு கூரான முனை கத்தி மாதிரி அந்த முதல் துண்டுக்கு இருந்தது. 'அந்தக் கூர் முனைகூட விழுந்து உடைந்ததால் ஏற்பட்டதுதானே. அதுவும் நீயும், நானும், அவனும் எல்லாமே ஒன்றாயிருக்கையில் அதுவும் இல்லை; நீ, நான், அவனுமில்லையே. அந்தச் சட்டத்தில் சிலேட் ஒன்றுதானே இருந்தது' என்றது பணிவோடு. கத்தித் துண்டுக்குப் பேசி மினக்கெடப் பொறுமை இல்லை. பெரிய துண்டு ஏமாந்த சமயம் தாக்கும் பாவனையில் பாய்ந்தது. ஆனால் தாக்கினால் அதுதான் உடையும். சட்டத்தில் நின்றிருந்தால் பெரிய துண்டை அந்தப் பாய்ச்சலும் ஒன்றும் செய்திராது.

ஆனால் பயத்தில் பெரிய துண்டு சட்டத்தை விட்டுத் தடுமாறியது- விழுந்தது. உடனே ஒரு கதறலோடு இரண்டாகப் பிளந்தது. இரண்டு புதுத் துண்டுகளும் ஒன்றையொன்று கண்டன. 'என்னடா? யாரென்று பார்க்கிறாய்? நான்தான் இங்கே சிலேட்' என்று துவங்கிவிட்டன.

கத்தித் துண்டு சிரித்தது.

இவ்வளவுக்கும் சிதறின சிலேட் ஒன்றாயிருக்கையில் அதைச் சுற்றித் தழுவியிருந்த சதுரச் சட்டம் தூர நின்றது. அதன் சதுர வெளியில் மௌனம்.

—

## தாடி பணம்

இங்கிலாந்து மன்னனான எட்டாம் ஹென்றி தாடிக்கு வரி வசூலித்தார். வரி வசூலிக்கும் அதிகாரியை அழைத்த மன்னர். 'வரி வசூல் எப்படி?' என்று கேட்டார். 'ஆகா பிரமாதம்! பிரமாதம்!' என்றார் அதிகாரி.

'ஒருவர் கூட விடாமல் வரி வசூலிக்கிறீர்களா?' என்று மன்னர் கேட்டபோது, 'ஓ'. என்று பெரிதாக தலையாட்டினார் அதிகாரி. ஒருவரை மட்டும் விட்டு விட்டீர்கள்!' என்று கூறிய போது, அதிகாரி திடுக்கிட்டு விட்டார். 'என்னை விட்டு விட்டீர்களே! இந்தாருங்கள் எனது தாடிக்குள்ள வரிப்பணம்!' என்று மன்னர் கூறிப் பணத்தையும் கொடுத்தாராம்! அப்போது அதிகாரியின் நிலையைச் சொல்லியா தெரிய வேண்டும்?

## தடையோட்டம்

ராமசாமி பாங்கிலிருந்து 2000 ரூபாவைத் தனது கணக்கில் எடுத்துக்கொண்டான். இவன் இவ்வளவு பணத்தையும் எடுத்தது ஒரு திருடனின் கண்ணில் பட்டுவிட்டது.

பாங்கிலிருந்து புறப்பட்ட இராமசாமி நேரே தன் வீட்டிற்குப் புறப்பட்டான். திருடனும் அவனைப் பின்தொடர்ந்தான். தெருத் திருப்பத்தில் வந்ததும் திருடன் ராமசாமியின் பணத்தைப் பறித்துக்கொண்டு ஓட ஆரம்பித்தான். அந்தக் காலத்திலே உதைபந்தாட்ட வீரனுக இருந்த ராமசாமியும் திருடனைத் துரத்தினுன். திருடன் ஓட, ராமசாமி விட்டுத் துரத்தத் தெருவில் இருந்த மக்கள் எல்லோரும் காரணம் புரியாமல் விழித்தனர்.

பத்து யார் தூரந்தான் இருவருக்கிடையில் இருந்தது. இருவரும் ஓடிக்கொண்டே இருந்தனர். இரண்டாயிரம் ரூபாவை விட்டுக்கொடுக்க இராமசாமியின் மனம் விடவில்லை. திருடனுக்கும் அதை இழக்க மனம் வரவில்லை.

ஆயிற்று, 5 யார் தூரந்தான் இருவருக்கிடையிலும் இருந்தது. இந்நேரம் திருடன் தனது பாக்கெட்டில் கைவிட்டு சிறிது மிளகாய்த் தூளை எடுத்துப் பின்னுக்கு வந்த ராமசாமியின் முகத்தில் எறிந்தான். 'ராமசாமி ஓட்டத்தை நிறுத்தி விடுவான்' என்று நினைத்த திருடனுக்கு ஏமாற்றமே மிஞ்சியது.

மீண்டும், மீண்டும் மிளகாய்த் தூள்களைத் தூவிக்கொண்டே ஓடினுன். ராமசாமியும் திருடனை விடவில்லை.

கடைசியில், இராமசாமி திருடனைப் பிடித்துவிட்டார். அப்போது திருடன் எஞ்சியிருந்த மிளகாய்த் தூளை ராமசாமியின் முகத்தில் எறிந்தான்; மீண்டும் ஏமாற்றம்.

திருடனையும், ராமசாமியையும் கூட்டம் குவிந்துகொண்டது. திகைப்படைந்த திருடன் ராமசாமியை நோக்கி 'ஐயா இவ்வளவு நேரம் நான் மிளகாய்த் தூளை எறிந்தும், எப்படி என்னைப் பிடித்தீர்கள்' என்ருன்.

'டேய் திருட்டுப் பயலே என்னிடமா கேட்கிருய்? நான் முப்பது வருடமாக மிளகாய்த் தூள் அரைக்கும் கடையில் வேலை பார்த்தேன். அதனுல்தான் உன் சாமர்த்தியம் என் மீது பலிக்கவில்லை' என்ருன் ராமசாமி.

வாயடைத்துவிட்டான் திருடன்.

—சோமசுந்தரம், ராமேஸ்வரன்.

தங்க நகைகளும், தரம் மிகுந்த புடவைத் தினிசுகளும் வாங்க விஜயம் செய்யுங்கள்

சிங்காரம்ஸ் - டைமா நகைமாளிகை

47, செட்டியார் தெரு, கொழும்பு-11.

டெலிபோன்: 20875




என்னைப் பொறுத்த வரையில் பேனு நண்பர் தொடர்பானது பலவகையில் முன்னேற்றத்துக்கு இடமளிக்கின்றது. இத்தொடர்பானது காலத்தால் அழியாது. யாரும் பிரிக்கமுடியாத தொடர்பாகும். இந்நாட்டில் மட்டுமல்ல, ஏனைய நாடுகளுடனும் தொடர்பு கொள்ளக்கூடியதாக இருக்கின்றது. நான் இந்தியாவில் பல நண்பர், நண்பித் தொடர்பு வைத்திருந்தேன். இவர்கள் இல்லத்துக்கும் நான் சென்றேன். மதராஜில் செல்வி பிரேமளவதி, மதுரையில் பாலன், திருச்சியில் சந்திரன், கோயம்புத்தூரில் புஷ்பா, ஊட்டியில் நந்தினி, மைசூரில் இராமச்சந்திரன் இவர்கள் யாவரும் எனது பேனு நண்ப நண்பிகளே. இவர்கள் இல்லங்களுக்குச் சென்றபோது இப்பேனு நண்பர் தொடர்பினுல், இவர்கள் என்னைக் கண்டதும் வரவேற்ற காட்சியை என்னுல் மறக்கமுடியாது. இவர்கள் எனக்குப் பல உதவிகளும் செய்தார்கள். உதாரணமாகச் சில விஷயங்களைச் சொல்லுகின்றேன். நான் எனது வாழ்க்கையிலே முதன் முறையாக அந்த முறையே இந்தியாவில் காலடி எடுத்து வைத்தேன். எனக்கோ இடம் வலம் ஒன்றுமே தெரியாது. இப்படியே தத்தளித்துக்கொண்டிருக்கும் பொழுது தான் பேனு நண்பர் உதவியை அறியக்கூடியதாக இருந்தது. என்னை யாவரும் சந்தித்து, நான் எந்த இடங்கள் பார்க்க வேணுமோ அவ்விடங்களை மிகவும் எளிதாகவும், ஆறுதலாகவும், விளக்கியும் என்னைக் கூட்டிக்கொண்டு சென்று காட்டினுர்கள். எனக்கு இப்பொழுது இந்தியாவின் எந்த இடத்தைக் கேட்டாலும் ஓரளவிற்கு மிகவும் சிறந்த முறையில் சொல்லக் கூடியதாக இருக்கிறது. இது எனது பேனு நண்பர்களினுல் ஏற்பட்ட உதவியாகும். இவைகள் யாவும் பேனு நண்பர் தொடர்ச்சியினுல் ஏற்பட்டதே. தவருன எண்ணம் வைக்காமலும், தொடர்பை அழிக்காமலும் இப் பேனு நண்பர் தொடர்பை நீடுழி வாழச் செய்ய பேனு நண்ப நண்பிகள் முன்வரவேண்டும். இது தான் பேனு நண்பர்களில் ஒருவனுன எனது அபிப்பிராயம். வாழ்க பேனு நண்பர் தொடர்பு.

—எஸ். சிவலிங்கம்.

89, புதுச் செட்டித் தெரு,
கொழும்பு-13.

---

பேனு நண்பர் திரு. எஸ். சிவலிங்கம் இங்கு கூறியுள்ளது போலவே பேனு நண்பர் தொடர்பினுல் உங்களுக்கு ஏற்பட்ட சுவையான அனுபவங்களை எழுதி பேனு நண்பர் பகுதிக்கு அனுப்புங்கள். பிரசுரிக்கின்ருேம்.

—ஆ-ர்

---

நண்பர்: அடுத்த வீட்டுக்காரரின் மகளைக் கல்யாணம் செய்தபிறகு நம்ம சந்திரன், மனைவிக்கு ஏன் இப்படி நடுங்குகிருன்?

மற்றவர்: அதுதான் சந்திர நடுக்கம்.

—ச. ரா. பா. சர்மா

---

கா. சா. சாந்தன், கதவு எண்: 3/56ஏ, காஞ்சிக் கோவில் (அ. நி), நசியனூர் (வழி) கோவை மாவட்டம்.

(கதை எழுதல், நண்பர்களுக்குக் கடிதம் எழுதல்)

ஆர். சுகுமாரன், மே/பா ருக்மணி, காஞ்சிக் கோவில் (அ. நி), நசியனூர் (வழி) கோவை மாவட்டம்.

(சித்திரம் வரைதல், கதைகள் படித்தல்)

எம். யு. எம். இக்பால், 2ம் குறிச்சி, அக்கரைப்பற்று.

(முத்திரை சேகரித்தல், வானெலி கேட்டல்)

செல்வி. எஸ். சந்திரா, இல: 2/6 புது வன்னியனூர் ஒழுங்கை, மட்டுநகர்.

(வானெலி கேட்பது, கதை, கட்டுரை படிப்பது)

ந. டேவிற் தேவராஜா, 53/1 ரெம்ளர் வீதி, கல்கிசை.

(அதிக நேரத்தை சித்திரம் வரைவதிலும், ஏனைய நேரத்தில் புத்தகம் வாசிப்பதும்)

ஏ. எம். நஜீமுதீன், இல: 55 கொழும்பு வீதி, புத்தளம்.

(படம் பார்த்தல், உதைபந்

## விண்ணப்பப் பத்திரம்

பெயர்: ———————————————————

முகவரி: ———————————————————

———————————————

வயது: ———

பொழுதுபோக்குகள்: ———————————————

———————————————————————

தயவு செய்து பேனு நண்பர்கள் பகுதியில் எனது பெயரையும் சேர்த்துக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

——————— ——————————

திகதி கையொப்பம்

நாட்டம், கடிதமெழுதல்)

ந. வெள்ளச்சாமி, சஹிரு மகா வித்தியாலயம், புத்தளம்.
(படம், நீந்தல், படிப்பு, பேனு நண்பர் தேர்ந்தெடுத்தல்)

பி. எம். கலந்தர் லெவ்வை, அல்- அஷ்றக்ம வித்தியாலயம், நிந்தாவூர்-4.
(பத்திரிகை படித்தல், கதை, கட்டுரை எழுதல்)

அ. அமரேந்திரன், 92 அரசடி வீதி, யாழ்ப்பாணம்.
(புகைப்படம் பிடித்தல், சினிமா பார்த்தல், நீண்டதூரப் பிரயாணம், பத்திரிகை படித்தல்)

கீழ்கரவைப் பொன்னையன், காளி கோவிலடி, கரவெட்டி கிழக்கு, கரவெட்டி.
(நாடகம் நடிப்பது, பேனு நண்பர்களுடன் தொடர்பு கொள்வது, விவாதிப்பது, படிப்பது, கட்டுரை வரைவது)

வ. சுப்பிரமணியம், 612 ஹவலக் வீதி, கொழும்பு-6
(சினிமா பார்ப்பது, புத்தகம் வாசிப்பது)

ஏ. ஆர். எம். முரளி, இல: 22 ஸ்டேசன் ரோட், பதுளை.
(அறிவு நூல்கள் வாசித்தல், பேனு நண்பர்களின் தொடர்பு)

ந. ஜெயம், தேசிய உப்புக் கூட்டுத்தாபனம், ஆனையிறவு.
(கதைப் புத்தகம் படித்தல், சிறு கதை எழுதல், விளையாட்டில் பங்குபற்றுதல்)

கே. பீ. இராஜன், நாக சேனை குரூப், விந்துல.
(கரப்பந்தாட்டம், புத்தகம் படிப்பது, வானொலி கேட்பது)

கே. அப்துல் அலீம், மொஸ்க் லேன், மருதமுனை, கல்முனை.
(முத்திரை, முதல்நாள் உறை, காட்சிப் படம் சேர்த்தல், வாசித்தல்)

செல்வி. இ. ருஜினி, கடற்கரை வீதி, பி. டபிள்யூ. டி டவுன் ஒவசியர் பங்களா, சிலாபம்.
(போஸ்காட் படங்கள் சேகரிப்பது, வெளிநாட்டு முத்திரைகள் சேகரிப்பது)

ஆ. மோகனராஜா, மே/பா ஆ. இராசதுரை, பொலிஸ் நிலையம், நுவரேலியா.
(மாணவ ஆசிரியர் பரீட்சைக்குப் பாடம் படிப்பதுடன், சஞ்சிகைகளும் படித்தல்)

எஸ். சிவஞானமூர்த்தி, வீ.சி 197 தல்வத்த, கண்டி.
(முத்திரை சேர்ப்பது, கதைப் புத்தகம் படிப்பது)

## சிரித்திரன் சந்தா விண்ணப்பப் பத்திரம்

பெயர்: ———————————————————

விலாசம்: ———————————————————

———————————————————

1 வருட சந்தாப் பணமாக ரூபா 6/-
6 மாதச் சந்தாப் பணமாக ரூபா 3/-

இத்துடன் அனுப்புகிறேன். ஏற்றுக்கொண்டு ———— மாதம் தொடக்கம் சிரித்திரனை அனுப்பிவைக்கவும்.

——————— ——————————

திகதி கையொப்பம்

(பணத்தைப் போஸ்டல் ஓடராக, மனேஜர் சிரித்திரன், 101/4 சென். பெனடிக்ஸ் வீதி, கொட்டாஞ்சேனை என்ற விலாசத்திற்கு அனுப்பிவைக்கவும்.)

# கமலம்ஸ்

சரக்காணைப் பிரதிநிதிகள், உற்பத்தியாளர்கள் பிரதிநிதிகள், இறக்குமதி- ஏற்றுமதியாளர்கள்.

புகழ்பெற்ற கமலா பீடிகள், குட்மோணிங் தேயிலை, கமலம்ஸ் தேயிலை, கமலம்ஸ் சீஸ், கமலம்ஸ் கொக்கோ, கமலம்ஸ் காபி ஆகியவற்றின் வினியோகத்தர்கள்.

சகல உள்ளூர் உற்பத்திகளின் ஏற்றுமதிக்கும் சகல அந்நிய தயாரிப்புக்களின் இறக்குமதிக்கும் உரிய உலகளாவிய விளம்பரத் தொடர்புடையவர்கள்.

உள்ளூர் உற்பத்தியாளர்களே! உங்கள் உற்பத்திப் பொருளின் வினியோகத்திற்கும் விளம்பரத்திற்கும் அவதிப்படுகிறீர்களா! எம்முடன் தொடர்புகொள்ளுங்கள்! நாம் உதவுவோம்!!

எங்கள் கட்டுப்பாட்டில் அனுபவமும், திறமையும் உள்ள விற்பனையாளர்களைக் கொண்ட பெரும் வினியோக வான் சேவை உள்ளது.

# கமலம்ஸ்

180, சென்றல் வீதி, கொழும்பு-12

தந்தி: கமலம்ஸ். போன்: 23597

இலங்கையில் கைதேர்ந்த தொழிலாழர்களைக் கொண்டு சிறந்த புகையிலைத் தூள், இலை கொண்டு தயாரிக்கப்படும் நமது

# ஜி.எஸ்.முத்தையா ஆப்பிள் மார்க் பீடிகளை

புகைத்து, உங்கள் மூளையைச் சுறுசுறுப்பாக்கி விரைவாக முன்னேறுங்கள். புகைக்கப் புகைக்க இன்பம் தருவது

## முத்தையா ஆப்பிள் பீடிகளே!

தயாரிப்பாளர்களும், விற்பனையாளர்களும்:

## ஞானமலர் ஸ்டோர்ஸ்

102/2 எ, ஆட்டுப்பட்டித் தெரு,
கொழும்பு- 13. தொலைபன்னி: 32221

# நிலவைப் பிடித்து...



என்.எஸ்.எம்.ராமையா

ஜூலை 16, 1969

ரேடியோவில் இடை வேளை இசை முடிந்து அடுத்த நிகழ்ச்சிக்கான அறிவிப்பு கூறப் பட்டுக் கொண்டிருந்தது. அடுத்த வீட்டிலிருந்து 'கந்தா!' என்று குரல் கொடுத்தான் முத்து. வாய்ச் சோற்றோடு இருந்த கந்தையா அவசரமாக விழுங்கிவிட்டு வாசலைப் பார்த்து உரத்த தொனியில் 'என்ன' என்றான்:

'நேரம் சரி! சுருக்கா வா'

சாப்பிட்டுக் கொண்டிருந்த சோற்றை அப்படியே வைத்து விட்டு அவன் எழும்புவதைக் கவனித்த கந்தையாவின் தகப்பன் வேலு 'என்னது' என்றான்.

'சந்திரனுக்கு கப்பல்லே மூணுபேரு போகப் போறாங்க அதைப்பத்தி ரேடியோவிலே சொல்றாங்களாம்'

'சந்திரனுக்கா?'

'ம்'

வேலு சிரித்துக் கொண்டான்.

கந்தையா கையைக் கழுவி ஈரத்தை வேஷ்டியில் துடைத்தவாறு டிரங்குப் பெட்டிமீது கிடந்த தினசரி ஒன்றை எடுத்துக் கொண்டு அடுத்த வீட்டுக்குப் போனான்.

'எங்கே போறானும்?' என்றாள் அவனுடைய தாய்.

ஏளனத்தோடு சிரித்தவாறு 'மனுசன் சந்திர லோகத்துக்குப் போறானம் அதை ரேடியோவிலே கேட்க இவன் அடுத்த காம்பிராவுக்குப் போறான்' என்றான் வேலு' அவன் சொன்ன விதத்தை அனுபவித்தோ அன்றி மனிதர்களின் 'அகலக் கால்' நினைத்தோ, அவளும் சிரித்துக் கொண்டாள். தொடர்ந்து 'மலையிலேயும் அப்பிடித்தான் பேச்சாக் கெடந்துச்சு...ஆமா நெசமாப் போகமுடியுமா?' என்றான்.

'நீ ஒண்ணு! மானத்தைப் பொத்துக்கிட்டு மேலே போயி சந்திரலோகத்துலே எறங்கிறதுன்னு என்ன லேசா? பேசுறாங்க பேச்சு'

'அதானே...'

'புராணத்திலேதான் எல்லாம் சொல்லி வச்சுட்டாங்களே? கடுமையான தபசு பண்ணித்தான் இந்திரலோகம், சந்திரலோகம் எல்லாம் போகலாம், இவன் பன்றி எறைச்சி திங்கிற பய... இவனுக்கு எல்லாம் போக முடியுமா?'

'என்னமோ நான் என்ன கண்டேன்? தோட்டம் பூரா 'கொல்'லுன்னு இதான் பேச்சா இருக்கு...'

அடுத்த வீட்டில் ரேடியோவிலிருந்து வித விதமான சப்தங்களோடு 'வாய்ஸ் ஆப் அமெரிக்கா'வின் அஞ்சலும் சமகால மொழி பெயர்ப்பும் ஒலிபரப்பாகத் துவங்கின.


கந்தையாவும், முத்துவும் அன்றைய தினசரி பேப்பரை விரித்து வைத்துக்கொண்டு அதிலிருந்த விண் கலம், சந்திரக் கலம் ஆகியவற்றின் படங்களைப் பார்த்தவாறு கேட்டுக் கொண்டிருந்தனர்.

வானொலி அறிவிப்பாளர் பெருமிதம் கலந்த தொனியில் விளக்கமாகச் சொல்லிக் கொண்டிருந்த விஞ்ஞான விளக்கங்கள் எல்லாம், பரிபூரணமாக புரியாவிட்டாலும் புரிவது போன்ற உணர்வும் அதே சமயத்தில் அதிக ஆர்வத்தையும் தந்து கொண்டிருந்தது. 'சந்திரனுக்கு போய்டுவாங்களா?' என்றான் கந்தையா.

அவனுக்குச் சந்தேகமாக இருந்தது. முத்து சிரித்தான். 'போய்டுவாங்களா இல்லையாங்கிறது இன்னம் நாலு நாளிலே தெரிஞ்சு போகும் ஆனா போகணுங்கிறது என் பிரார்த்தனை. அப்படியே போக முடியாட்டியும் இந்த மூணு பேரும் நல்ல சொகத்தோட பூமிக்குத் திரும்பிடணும் அது போதும்'

'ஆமாப்பா! பாவம்' என்றான் கந்தையா' என்ன துணிச்சல் என்ன சாகசம்! நமக்கு இந்த சவுக்கு மரத்திலே முப்பது நாப்பது அடி ஏறவே கை, காலு ஆடிப்போகுது'...

வாசலில் காலடிச் சத்தம் கேட்டது. இருவரும் திரும்பிப்



பார்த்தார்கள். வேலு நுழைந்து கொண்டிருந்தான். அவனைக் கண்டதும் கையிலிருந்த பீடியை காலுக்குள் போட்டு பாதத்தால் நசுக்கினான் கந்தையா.

'என்ன சொல்லுது ரேடியோ?' என்றவாறு வேலு அங்கு கிடந்த கட்டிலில் அமர்ந்தான்.

'இன்னம் கொஞ்ச நேரத்துலே ரொக்கட்டு பயணம் வச்சுடுமாம் இப்பச் சொன்னாங்க' என்றான் முத்து.

'இன்னைக்கே போயிடுவாங்களா?'

'இல்லே மூணு நாள் புடிக்குமாம்'

'சரி! மூணு நாள் கழிச்சாவது போயிடுவாகளா? என்று வேலு கேட்டபோதுதான் அவனது நையாண்டி 'சுருக்'கென்று பட்டது முத்துவுக்கு. கந்தையாவைப் பார்த்தான். தகப்பன் பக்கம் முதுகைக் காட்டிக் கொண்டிருந்த கந்தையா கண்ணைச் சிமிட்டினான்' கிழடுகள்! விட்டுத் தள்ளு...'

வானொலியில் விண் கலம் புறப்படும் வர்ணனை ஆரம்பமாயிற்று. 'ரொக்கட் பயணம் வச்சுட்டுது...' என்றான் முத்து' 'அந்தா... சத்தம் கேட்குது...' வானிலே கோளாறு காரணமாக எழும்பிய சப்தத்தை அவர்கள் ரசித்துக் கேட்டார்கள்!

பரம ஞானியைப் போல வேலு கண்களை மூடிக்கொண்டு சப்தத்தைக் கேட்டுக் கொண்டிருந்தான். முகத்தில் ஏளனப் புன்னகை மாறாமல் இருந்தது. வானொலி அறிவிப்பாளர் பரபரப்பான குரலில் 'இதோ விண் கலம் புறப்படத் தயாராகிறது எல்லாம் சரியாக இருப்பதாக விண்வெளி வீரர்கள் அறிவிக்கிறார்கள். இன்னும் பத்து வினாடிகளில் விண்கலம் புறப்படும். அதற்கான சமிக்ஞைகள் கட்டளை இடப்படுகின்றன என்று கூறிக்கொண்டிருந்தபோது முத்துவும், கந்தையாவும் ஒருவரை ஒருவர் பார்த்து வெட்கத்துடன் சிரித்துக் கொண்டனர்' 'இன்னம் போகலே இப்பத்தான்

போகப் போகுது' என்முன் கந்தையா.

வானொலியில் ஆங்கிலத்தில் எண்களைத் தலை கீழாக எண்ணப் படும் குரல் கேட்டது 'டென் நைன்... எய்ட் . செவன்...' என்று வந்து 'ஸீரோ' என்று முடித்த போது சிம்ம கர்ஜனையாக உறுமல் ஒலியோடு விண் கலம் புறப்பட்டு விட்டதாக வானொலி அறிவிப்பாளர் அறிவித்தார்.

வேலுவுக்கு இடப் பக்கத்திலிருந்து பல்லி ஒன்று 'கிச் கிச் கிச்' சென்று ஒலி கொடுத்தது, சத்தம் வந்த திக்கைப் பார்த்து விட்டு உதட்டைப் பிதுக்கிக் கொண்டு தலையை ஆட்டிக் கொண்டான் வேலு.

'ரொக்கட்டு கௌம்பிட்டுது' என்முன் முத்து 'அட சும்மா இரு தம்பி! இவனாவது சந்திரலோகம் போறதாவது! என்னமோ ஏரோப் பிளான் மாதிரி ஒரு மிஷினிலே போருன். மேலேபோயி கொஞ்ச நேரம் சுத்திட்டு 'ஆத்தாடி'ன்னு கீழே வந்து விடுவான் பாரு...' என்ற வாறு வேலு எழும்பினுன். வாசலை நோக்கி நடந்தவனின் முதுகுக்குப் பின்னல் கந்தையாவும் முத்துவும் தலையில் அடித்துக் கொண்டனர்.

ஜூலை 21, 1969

வேலு நாட்டுப் பக்கம் போய் விட்டுத் திரும்பியிருந்தான் கண்கள் ஜில்லென்று சிவந்திருந்தன. உடல் காற்றுப்போல லேசாகி அசதி அமுக்கிக் கொண்டிருந்தது. சம்பளத் தினத்தன்று வரவு செலவு பார்க்கும்போது தலைமயிரைப் பிய்த்துக் கொள்ள வேண்டும்போல இருப்பது வழக்கம் என்ருலும் இந்த 'மாமூல்' தவறுவதில்லை; சாப்பிட்டு முடிந்து திண்ணையில் படுக்கையை விரித்து உடலைக் கிடத்திய போது பக்கத்து வீட்டில் பேச்சொலி அதிகமாகக் கேட்டது. இன்று ரேடியோ கேட்பதற்கு நிறையக் கூட்டம் போயிருக்கிறது. வேலுவுக்கு எரிச்சலாக இருந்ததால் 'என்ன பைத்தியாரத் தனம்! நடக்கமுடியாத விசயத்தைப் புடிச்சிக்கிட்டு இது கள்ளாம் கூத்தாடுதுக—' என்று எண்ணியவாறு எழும்பினுன். அடுத்த வீட்டுப்பக்கம் போய் எட்டிப்பார்த்தான். அதே லயத்தைச் சேர்ந்த இரண்டொரு வாலிபர்கள், கீழ் லயத்தைச் சேர்ந்த மூன்று வாலிபர்களுடன் தன்னைப்போல இரண்டு மூன்று கிழட்டுக் கட்டைகளையும் பார்த்தபோது அவனுக்கு ஆச்சரியமாக இருந்தது.

அவனும் உள்ளே நுழைந்தான்.

'வாங்க... வாங்க...' என்று முதியவர்கள் அவனை வரவேற்ருர்கள்'

'என்ன ரேடியோ கேக்கவா?'

'ஆமாங்க என்னமோ ஊரு, ஒலகம் பூரா 'டும்மு டும்முன்று இருக்கே... மனுசன் சந்திர லோகத்துக்கு போருனும்...' என்முன் மாணிக்கம் என்ற கிழவன்.

'ஆங்' கிழிச்சான்!... அவன் சொல்ருன்னு நீங்களும் ரேடியோ கேக்கவந்துட்டீங்க...' என்முன் வேலு. முத்து கந்தையாவைப் பார்த்து 'ஆரம்பிச்சுட்டுது!' என்முன் மெல்லிய குரலில்.

கல்யாண வீடு மாதிரி கீழே பாய் விரிக்கப்பட்டிருந்தது. வேலு உட்கார்ந்து கொண்டான்.

'என் ஆயுசுக்கு இந்த மாதிரி விசயமெல்லாம் இப்பத்தான்' கேள்விப் படறேன்' என்முன் மாணிக்கம் அவனுக்கு புருவங்கள் மீசை எல்லாம் சம்பூர்ணமான நரை.

'இதெல்லாம் நல்லதுக்குன்னு நெனைக்கிறீங்க... ஒலகம் அழியறத்துக்கு' என்முன் வேலு. தொடர்ந்து 'வெளியே போயி கொஞ்சம் எட்டிப் பாருங்க. மோர்ப்பானையிலே கெடக்கிற மெதப்பு மாதிரி இருக்கு நெலா அதுலே போயி இவன் நாத்தம் புடிச்ச காலை வைக்கப் போறேன்'னு சொல்ருனே... இவனுலே முடியுமா... திமிருல்ல இது...'

'அதுவும் நம்ம பூலோகம் மாதிரிதான் இருக்குன்னுல்ல சொல்ருங்க'

'யாரு பார்த்தாகளாம்? அதெல்லாம் சும்மா! ஒரு யூகம்; முப்பத்து முக்கோடி தேவருங்க இருக்கிற எடம் என்ன கல்லும் மண்ணுமாவா இருக்கும்?'

மாணிக்கம் ரொம்பவும் விரசமான நகைச் சுவையைக் கேட்

---

ஒருவர்: அண்ணே! ஒரு 10 ரூபா மாத்தித் தருவியளே.

மற்றவர்: அதுக்கென்ன!

ஒருவர்: உங்களிட்டைக் காசு இருக்கோ என அறியத்தான் இந்தக் கேள்வியைக் கேட்டேன். தயவு செய்து ஒரு இரண்டு ரூபாத் தந்துவிட்டுப்போங்கோ.

மற்றவர்: ? ? ?

—திக்கவயல் தர்மகுலசிங்கம்

---

டது போல கண்களைச் சுருக்கிக் கொண்டு சிரித்தான். தெரியாத ஒன்றைப் பற்றி மிகத் தாராளமாகவும் மதிப்புக் கொடுத்தும் பண்ணிய இம்மாதிரிக் கற்பனைகளை அவனும் நம்பியதுண்டு தன் வீட்டுச் சிறுசுகளுக்குச் சொன்னதுமுண்டு. ஆனால் இப்போது அந்தச் சிறுசுகள் தான் பேப்பரைப் பார்த்து என்னென்னவோ சொல்கின்றன!

முத்து அவசரமாகக் கையை ஆட்டினான் 'கொஞ்சம் பொறுங்க என்னமோ அறிவித்தல் போகுது' என்றான். வானொலி அறிவிப்பாளர் விண் கலத்திலிருந்து 'ஈகிள்' பிரியப் போகும் விஷயத்தை அறிவித்து விட்டு 'இன்னும் சில மணி நேரங்களில் மனிதன் சந்திரனில் இறங்கும் அந்த மகத்தான சம்பவம் நடைபெற இருக்கிறது, எல்லாம் சரியாக நடை பெற்றால் இந்த சாதனை மனிதகுல வரலாற்றில் ஓர் இணையற்ற சாதனையாக இருக்கும்' என்று பிரகடனம் பண்ணிக் கொண்டிருந்தார்.

'ம்க்கும்' என்று முனகிக் கொண்டான் வேலு' எல்லாம் சரியா நடந்தாத்தானே? பய மகன்க ஆடி மாசத்திலேயில்ல புறப்பட்டிருக்கான் நாமல்லாம் அறிஞ்ச தெரிஞ்ச ஆடியிலே ஒரு காரியம் துவங்குவோமா?' என்றான்.

'நாமதான் அதெல்லாம் பார்க்கிறோம் வெள்ளைக் காரனுக்கு ஆடியாவது ஆவணியாவது!'

முத்துவுக்கு ரொம்ப நேரமாகவே எரிச்சல் குறிப்பாக வேலு மீது. 'அது தெரியுதுல்ல! பேசாமே ரேடியோவைக் கேளுங்க அவனெல்லாம் என்ன கொஞ்சப் படிப்பா படிச்சுட்டு இதை யெல்லாம் செய்றான்?' என்றான்.

கிழவர்கள் மௌனமாயினர்

முத்து 'சள்' ளென்று விழுந்தது வேலுவுக்கு என்னபோ போலிருந்தது மெள்ள எழும்பினான்.

'என்ன எழும்பிட்டீங்க... ராவு மூணு மணி வரைக்கும் சொல்றானுகளாம்...' என்றான் மாணிக்கம்.

'இதைப் போயி என்னங்க கேக்கிறது... பாவம் அவன்க மூணு பேரும் அநியாயமா சாகப் போறாங்க அந்த லோகத்துலே போயி எறங்க முடியும்னு நெனைக்கிறீங்க' தீஞ்சு கருகிச் செத்துப் போகப் போறானுங்க' என்றவாறு வேலு வாசலை நோக்கி நடந்தான்.

அவன் தலை மறைந்ததும் 'அமெரிக்கக் காரன் சந்திரனிலே போய் எறங்கினா இவருக்கு என்ன கொறைஞ்சு போகுது? ஏம்ப்பா!... கந்தையா...' என்றான் முத்து. கந்தையா வாசல் புறம் பார்த்து விட்டு 'இவுக பாட்டன் வீட்டு சொத்துல்ல... இருக்காதா பின்னே?' என்றான். எல்லோரும் சிரித்தார்கள்.

நேரம் செல்லச் செல்ல ஒலி பரப்பில் 'சூடு' பிடிக்கத் துவங்கியது. மிகவும் பரபரப்பான குரலில்' கடந்த நான்கு நாட்களாக உலகம் பூராவும் ஆவலோடு எதிர்பார்த்துக் கொண்டிருந்த தருணம் வந்து விட்டது. என்ற ஒலிபரப்பாளர் தொடர்ந்து 'விண்கலத்திலிருந்து பிரிந்த 'ஈகிள்' இப்போது நிலாத் தரையை நோக்கி இறங்கிக் கொண்டிருக்கிறது. உங்கள் வீட்டில் உறங்கிக் கொண்டிருப்பவர்களை எழுப்பிச் சொல்லுங்கள்' என்று உற்சாகமாகக் கூறினார் மாணிக்கம் எழும்பி வாசலருகில்



நண்பர்: பார்த்தீர்களா? சொன்னபடி சொன்ன நேரத்துக்கு அம்புலி வீரர்கள் பசிபிக் சமுத்திரத்தில் அதிசயிக்கும்படி இறங்கி விட்டார்கள்'

மற்றவர்' இதென்ன அதிசயம் நேற்று நான் புறப்பட்டுவந்த யாழ்தேவி சரியான நேரத்துக்கு வந்து சேர்ந்து விட்டதே.

—ச. ரா. பா. சர்மா

வந்து நின்று, அந்த வீட்டுத் திண்ணைக்கும் அடுத்த வீட்டுத் திண்ணைக்கும் மத்தியில் பலகையால் தடுப்பு எழுப்பியிருந்ததால் கூரையைப் பார்த்தவாறு 'அண்ணே... வேலண்ணே...' என்றான்.

'என்னுங்க'

'தூக்கமா?'

'இல்லே முழிச்சிக்கிட்டுதான் இருக்கேன்

'வாங்க கப்பல் எறங்கத் தொவங்கிட்டுதாம்...'

'இல்லே நீங்க கேளுங்க' எனக்குத்தான் இங்கே நல்லா கேக்குதே'

மாணிக்கம் உள்ளே வந்தான்.

ரேடியோவில் இரண்டு மூன்று குரல்கள் பதட்டமும் பரபரப்புமாகக் கேட்கத் துவங்கின:

'இதோ சந்திரத் தரையை நெருங்கிக் கொண்டிருக்கிறார்கள் விண்வெளி வீரர்கள்...'

'நூறு யார் உயரத்தில் இருப்பதாக அறிவிக்கப் படுகிறது'

'சந்திரத் தரை தனக்குத் தெளிவாகத் தெரிவதாக நீல் ஆம்ஸ்டிரோங் கூறுகிறார்...'

முத்து எழும்பி பரன்மீது கையால் துழாவி தயாராய் வாங்கிவைத்திருந்த பட்டாஸ் கட்டு ஒன்றை எடுத்துப் பிரித்தான். விண்வெளி வீரர்கள் இருவரும் நலமாக நிலாத் தரையில் இறங்கிவிட்டார்கள் என்று அறிவிக்கப்பட்டதும் வெளியே பட்டாஸ் சப்தம் படபடத்தது.

அதிகாலைக் கருக்கலும் பட்டாஸ் சப்தமும் தீபாவளியை ஞாபக மூட்டின.

'ரெண்டு பேரும் எறங்கிட்டானுங்களே! என்றான் மாணிக்கம். அடுத்த வீட்டுக்கு அஞ்சல் செய்தான். 'சா, இப்பத்தானே எறங்கி இருக்கானுக! என்ன நடக்கப் போகுதுன்னு பார்த்து விடுவோமே! ஆனா ஒண்ணு மாத்திரம் திட்டம், இவங்க மூணு பேரும் உசுரோட திரும்ப மாட்டானுக, நீங்க வேணுமுன்னு பாருங்க' என்றான்.

உள்ளே நுழைந்து கொண்டிருந்த முத்து நின்று அவன் சொல்வதைக் கேட்டுவிட்டு, ஆமா! போகவே முடியாதுன்னு சொல்லிக்கிட்டு இருந்திங்க இப்ப போய் எறங்கிட்டான் இப்ப வர மாட்டான்னு... சொல்றீங்களாக்கும்?' என்றான்.

'அப்பிடியும் சில விசயம் இருக்கப்பா! வந்தா திரும்ப போகமுடியாது, போனாலும் திரும்ப வரமுடியாது' என்று அழுத்தமாகச் சொல்லி விட்டு என்ன நான் சொல்றது வெளங்குதா?' என்றான்.

மாணிக்கம் 'கெக் கெக் கெக் கென்று சிரித்த போது முத்துவுக்கு அசடு தட்டியது. 'சீ! ஊத்தைப்பேச்சு பேசுறது!' என்று மெல்ல முனகி விட்டு உள்ளே நுழைந்தான்.

முத்து இன்னும் நிற்கிறான் என்ற நினைப்பில் 'என்னமோ போய்ட்டான்னு சொல்றீங்க... எப்பிடி வர்றான்னு பார்ப்பம் வந்துட்டான்னா நான் என் ஒரு பக்கத்து மீசையை வழிச்சிக்கிறேன்' என்று வேலு சூளுரைத்தான்.

மாணிக்கம் அதை உள்ளே சொல்லிக் கொண்டிருந்தான்.

ஜூலை 24, 1969

ரேடியோவில் முடிவுரை கூறிக் கொண்டிருந்தார்கள். 'விண்வெளி யாத்திரை சம்பந்தமான இந்த விசேஷ ஒலிபரப்பு இத்துடன் முடிவடைகின்றது. விண்வெளி வீரர்கள் மூவரும் மனித குலத்தின் பிரதிநிதிகளாக சந்திரயாத்திரை செய்து சுகமாகத் திரும்பி பசுபிக் சமுத்திரத்தில் வந்து இறங்கிவிட்டார்கள் இவர்களது சாதனைக்கு உலகம் பூராவும் வாழ்த்துக்கள் வழங்கும் இவ் வேளையில் நாமும் நமது வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கிறோம்' என்று கூறி அறிவிப்பாளர் ஒலிபரப்பை நிறுத்த. முத்துவும் நீண்ட பெருமூச்சோடு ரேடியோவை நிறுத்தினான்.

சிலைகளைப் போல ரேடியோவுக்கு முன்னால் அமர்ந்திருந்த அனைவரும் கனவிலிருந்து விழிப்பதுபோல உணர்வு பெற்றனர். வேலு பாயில் விரல்களால் தட்டியவாறு முகட்டைப் பார்த்தபடி இருந்தான்;

இன்று மாணிக்கம் வரவில்லை. நல்லதாய்ப் போயிற்று. இல்லாவிடில் 'என்னமோ சொன்னீங்களே...' என்று சிரித்துக் கொண்டே ஏதாவது சொல்லியிருப்பான். இருந்தது அத்தனையும் இளவட்டங்கள். ஒருவரும் ஒன்றுமே சொல்லவில்லை. ஆனால் அதுவே அவனைப்பார்த்து ரகசியமாய் சிரிப்பது போலிருந்தது.

வெளிறிய முகத்தோடு முத்துவைப் பார்த்து 'சாமீ'ங்கிறோம் 'பூதமங்கிறோம் எல்லாம் பொய்யாவுல்ல போச்சு! எங்கே இருக்குது சாமி?' என்றான் தொடர்ந்து குற்றம் சாட்டும் குரலில் 'எங்க ஆயா அப்பனெல்லாம் அப்பிடித்தாம்ப்பா சொல்லிக் குடுத்தாங்க... மேலே தேவலோகம் இருக்குது அங்கே தேவருங்க இருக்காங்கன்னு' என்றான்.

முத்து சிரித்தவாறு 'இங்கேருந்து யாராவது அகம்படியத் தேவமாரு போனாத்தான் உண்டு' என்றான். கீழே கிடந்த அன்றைய பேப்பரை எடுத்து பெரிது பெரிதாகப் போட்டிருந்த விண்வெளி வீரர்களின் படத்தை வியப்போடு பார்த்தான் வேலு

அவர்களது ஆண்மைக்கு வணங்குவது போல அவனது தலை குனிந்திருந்தது.

காதல் வாழ்க...

ஒரு புத்தகத்தின் தலைப்பு

கல்யாணம் ஒழிக...

இப் புத்தகத்தில் ஒரு வாசக அன்பரின் குறிப்பு.

# சொல்லுங்கள் கேட்கிறோம்

பள்ளிப் பகிடிகள் மிகவும் பிரமாதமாக இருந்தன. ஆவல் பொங்க எனது உள்ளத்தைத் தூண்டி, அடுத்த மாதம் என்ன, அடுத்த மாதம் என்ன என்று வழிமேல் விழிவைத்து நீ ஏற்று வரும் புதுப்புது விஷயங்களை வாசித்து மகிழ்ச்சியுறும் நான் உன்னை எப்படி வாழ்த்துவதென்றே புரியவில்லை.

மன்னார், எம். எம்' அபூபக்கர்

''இதென்ன இலக்கிய சர்ச்சை சிரித்திரனில் ஏற்பட்டு விட்டது?'' என்று அவசர அவசரமாக எழுதுகோலாட்டம் என்ற விடயத்தைப் படித்தேன்...

முடிவைக் கண்டவுடன் திகைத்து விட்டேன். பிற கென்ன...விழுந்து, விழுந்து சிரித்தேன். சரியான ஜோக் தானையா...! நீர் எங்களை சிரிக்க வைக்க என்னென்னவோ தந்தி ரங்களை எல்லாம் கையாளுகின்றீரே!

வத்தேகம, செல்வி; செல்வம்பாள் செல்லையா.

செய்திச் சோடி... சும்மா, புதுசா கட்டிகிட்ட ஜோடி மாதிரி ஜமாய்க்குது வாத்தியாரே! உடாத வாத்தியாரே... கொண்டுபோ! ஜோரா கொண்டு போ வாத்தியாரே!

தலவாக்கொல்ல, மாடசாமி.

மகுடியாரின் பதில்கள் சிரிப்பும், சிந்தனையும் கலந்த ஒரு மாத்திரை இந்த மாத்திரையை சாப்பிட்டு சிரிக்கிறோம்... சிந்திக் கிறோம்... ஆனல் ஒரு குறை! 'பதில்களில் முன்புபோல் படம் வரையப்படுவதில்லையே!' இந்த குறையை மகுடியார் தீர்ப்பாரா?

காத்தான்குடி, அப்துல் காதர்

''சமைத்துப் பார்க்காதே!'' என்று போட்டிருந்தும் அதை மீறி நான் சமைத்து விட்டேன். சமைத்தது தயாராக சுடச்சுட இருக்கின்றது. எங்கே இதை எழுதிய புண்ணியவான்? அவரை அனுப்புங்கள் விருந்து வைத்து அனுப்புகின்றேன்!

கரவெட்டி, செல்வி, ரஞ்சிதமலர்.

''முடியாத முடிவு'' செல்வி. எஸ். பிரியா அவர்கள் நல்ல ஓட்டமாக, துடிதுடிப்புடன் ஒவ்வொரு செற்களும் அமைந்திருக் கின்ருர், இவர் இதுபோன்ற கதைகள் ஏராளமாக எழுதவேண் டும். காதல் கதை உரு என் மனதைக் கவர்ந்துவிட்டது. முடியாத முடிவில் வரும் அருணு என் மனதில் ஒரு அழியா இடத்தைப் பிடித்துவிட்டார். அருணுவைப்போல பெண் இந்த உலகில் இருக்க மாட்டார். எஸ். பிரியா அவர்கள் நீடுழி வாழ்க என என் இதயம் கனிந்த அன்பை தெரியப்படுத்துங்கள்.

நாவலப்பிட்டி, கிருஷ்ணு.

நிலவும் நிலமும் (உருவகம்) நெல்லை க. பேரன் அவர்கள் நல்ல கருவுடன் எழுதியுள்ளார். இவரின் கதை போற்றத்தக்க தாகும் வாசகரின் கவனத்தை பெற்றுவிட்ட இவரை மனமார வாழ்த்துகின்றேன்.

பளை, சி. தவத்தரசர்.

புரட்டாதி மாத 'சிரித் திரன்' இதழ் வெகுஜோர். சி. கே. சிவாவின் 'நான் அபாக் கியசாலி' அதை நான் சுவைத் தேன்.

மட்டுநகர் சிங்களவாடிமூர்த்தி

பரிசோதகர்: (இன்டர்வியூவில்) ஏம்பா... உனக்கு 'லோங் ஜம்ப்' 'ஹய் ஜம்ப்' தெரி யுமா?

பரீட்சார்த்தி: இல்லை சார்...

பரிசோதகர்: அப்ப நீர் இந்த வேலைக்கு லாயக்கில்லை. ஆபீ சுக்கு நேரத்துக்கு வரணு மின்ன 'லோங் ஜம்ப்' 'ஹய் ஜம்ப்' தெரிஞ்சாத்தானே பஸ்ஸை ஓடிப்பிடிக்கேலும்.

— — —

ஒருவர்: என்னுங்க... இவ்வளவு புஸ்தகங்களை வைச்சிருக்கி றீங்களே... ஒரு அலமாரி வாங்கின என்ன?

மற்றவர்: அலமாரியை யார் சார் இரவல் தாருங்க.

# விவாகரத்து

—ரேணுகா

“‘டேய் பாபு! எடியே மாலினி!’

வாசலிலே அவனது அட்டகாசமான குரல் கேட்கிறது. காலை பதினொரு மணிதான். அதற்குள்ளாக அவன் மனித நிலையிலிருந்து அரை மனிதன், கால் மனிதன், பின்னர் மனிதத்துவம் மறைய மிருகம்- இப்படி ஆகிவிடுவான். உலகில் பலர் உண்பதற்காக மட்டும் வாழ்கிறார்கள். இவன் வாழ்வது குடிப்பதற்காகவும், சூதாட்டத்திற்காகவும் மட்டுந்தான் என்பதனை அவன் நன்கு அறிந்திருந்தான்.

‘எடேய் பாபு! எடியே மாலினி!’ அவன் மீண்டும் கத்திக்கொண்டே வந்தான். அவள் பதில் பேசவில்லை. அவனுக்குப் பதிலளிக்கப் பாபுவோ, மாலினியோ தானும் அங்கில்லை.

அவன் அருகே நெருங்கி வந்தான். அவள்- அவனது மனைவி நிமிர்ந்து அவனைப் பார்க்கவில்லை. குனிந்தபடியே ஏதோ எழுத முயன்றுகொண்டிருக்கின்ற அந்த விடயம் அவனையும், அவளையும் பற்றியதுதான். அவனுடன் வாழ்ந்ததாக உலகத்துக்குக் ‘கணக்கு’க் காட்டும் இந்தப் பதினான்கு வருட இல்லறத்தின் பயனை விண்டுகாட்டும் ஒரு எழுத்து. ‘தலையெழுத்து’ என்று கூடச் சொல்லலாம். அவள் அதனைத்தான் அதில் பொறிக்க அதிகநேரமாகச் சிந்தித்துக்கொண்டிருக்கிறாள்.

‘ஓ! அம்மா! மகாராணி! உங்களுக்கு ஏதோ பெரிய வேலை போலை! ஹஹ்ஹா!’ என்று அலட்சியமாகச் சிரித்தவன், “‘உன்ரை ‘பிசாசுகள்’ எங்கேடி?” என்று கர்ச்சிக்கிறான். அவனது அந்த ஆவேசம் தனது பிள்ளைகளைப் பார்க்கவேண்டுமே என்ற ஆசையினால் எழுந்ததல்ல வெறியில் தோன்றும் தினவைத் தீர்த்துக்கொள்ள அவர்களை ஓட ஓட அடித்து ஹிம்சிக்கத்தான் என்பதனை அவள் அறிவாள்.

அந்தப் பாலகர்களை அவன் வதைக்கும்போது அவள்- அப்பிள்ளைகளைப் பெற்றவள் பார்த்துக்கொண்டிருக்க மாட்டாள். குறுக்கே வந்து நிச்சயம் விழுவாள். அப்போதுதானே அவளை ஒரு ‘கை’ பார்க்கலாம்!

ஒரு பொத்தான் மட்டும் ஒழுங்கில்லாமல் மேலும் கீழுமாகச் சேர்த்துக் கொழுவப்பட்டு, மற்றவையெல்லாம் பொருத்தப்படாமல் திறந்தே இருக்கும் அலங்கோலமான முழுக்கை ஷேர்ட். ஓ! அதுகூட டெரிலின்தான். அவனது ஒழுங்கற்ற வாழ்க்கையைப் போலவே தாறுமாறாகக் கிடக்கும் கேசம், இடையில் தொடுத்துவிடப்பட்டிருக்கும் சாரம், வெறிச்சென்ற பார்வையும், தள்ளாட்டமுமாக அவன் நிற்கின்றான்.

குலைக்கிற நாய்க்குக் கோல் கொடுப்பது அபாயம். மௌனம் இனி நீடித்தால் அது நஞ்சாகிவிடும். அவள் பேனையை ஸ்ரூலின்மேல் வைத்துவிட்டு, அவனை ஏறிட்டுப் பார்க்கின்றாள். அருமைக் கணவரின் நிலை இப்படியிருக்கிறதே என்று கவலையுமில்லை. ஆத்திரமும் இல்லை. கண்களில் நீருமில்லை. நெஞ்சில் பாரமும் இல்லை. உணர்ச்சிகள் எல்லாமே சூனியமாகிவிட்ட வெறிச்சோடிய பார்வை.

‘அவை பள்ளிக்குப் போயிட்டினம்!’ கேள்விக்குப் பதில் சொல்லியாக வேண்டுமே என்ற நோக்கில் கொடுக்கப்பட்ட பதில்தான். ‘ஒவ்வொரு நாளும் என்னடி பள்ளி? என்னத்தைப் படிச்சுக் கிழிக்கப் போகுதுகள் கழுதையள்!’

அவன் அலட்டிக்கொண்டே சாய்மனைக் கதிரையொன்றில் ‘தொப்’ பென்று விழுகின்றான். ‘இனி என்ன நேருமோ?’ அவள் மனம் வினாவெழுப்ப அந்த

---

திருடன்: (துரத்திவரும் பொலிஸ்காரனிடம்) ஐயோ! நான் கொலை செய்யவில்லை. ஒட்டலில் சர்வர் பீட்ரூட் கறியை என்மேல் கொட்டிவிட்டான்.

—ச. ரா. பா. சர்மா

---

## சிரித்திரு

ஜெர்மனியில் ஒருவர் 20 வருடங்கள் திக்குவாயாக நடித்துக் குடும்பம் நடத்தினாராம். காரணம் மனைவியுடன் சண்டை வரக் கூடாது என்பதற்காக.

இடத்தைவிட்டகன்று, அவன் கண்ணில் படாதிருப்பது நல்லதென்று அவளுக்குப் படுகிறது.

கூடத்திலிருந்து குசினிப் பக்கம் நழுவப் பார்க்கிறாள் அவள். தான் யோசித்து யோசித்துக் குழம்பிக்கொண்டிருக்கும் விடயத்தில் ஒரு முடிவைத் தேடும் நோக்கமுந்தான்.

'எங்கே போகிறாய் அருணா? ஏய்! இங்கே வா!' அவன் கத்துகிறான். பேசாமல் கேட்காத மாதிரி அப்புறம் போய்விடலாந்தான்; ஆனால் இனியும் 'மல்லு'க்கட்ட உடம்பு தாங்கவே தாங்காது. குடி போதையில் வந்து அவன் கொடுத்த அடி உதைகளை வாங்கி உடல் 'பச்சை இறைச்சி'யாகிவிட்டது. அன்று முன்தினம் கூட அடிபட்டதினால் ஏற்பட்ட வலி இன்னமும் தீரவில்லை.

'என்ன?'

'காசிருந்தால் இரண்டு ரூபா கொண்டுவா!'

'காசிருந்தால்' என்றுதான் வழக்கமாக அவன் கேட்பான். காசு இருந்ததோ இல்லையோ அதனைப் பற்றி அவனுக்கு அக்கறையில்லை. எப்படியும் கொடுத்தேயாக வேண்டும். இல்லையென்றால் 'கணவன்' என்ற தன்னுடைய உரிமையினை நிலைநாட்டத் தாக்குதலில் இறங்கிவிடுவான். கைகட்டி நிற்கும் எதிரிதானே, விளாசலாம்.

வீட்டில் குழந்தைகள், மனைவி எல்லாரும் பட்டினி கிடந்தால் என்ன, யாரை எவரைக் கெஞ்சிக் கூத்தாடி அவள் பணம் கொண்டுவந்தாலென்ன சரிதான். அவனுக்கு வேண்டியது பணம். அப்புறந்தான் மனைவி மக்களுடன் சாதாரணமான, சுமூகமான உறவு.

அவனைப் பொறுத்தவரை அவனது மனைவிதான் அவனது 'வங்கி'; அதாவது அவள் உத்தியோகம் பார்க்கின்ற மனைவியல்லவா? மாதா மாதம் சம்பளம் எடுக்கின்றவள், அவனுக்குத் தந்தால் என்ன? இதுவே அவனது சித்தாந்தம். இத்தனைக்கும் அவனுக்கு என்று எந்தக் குறிப்பிட்ட தொழிலும் இல்லை.

'அரிசி வாங்கவெண்டு அடுத்த வீட்டு அன்னம்மாக்கா விடம் கெஞ்சிக் கூத்தாடி இரண்டு ரூபாதான் வாங்கி வைச்சிருக்கிறன். அதையுந் தந்திட்டு...' 'ஹாஹூ' என்று கூக்குரல் போடுகின்ற பெண்களைச் சேர்ந்தவளல்ல அவள். படித்தவள். அதற்குரிய பண்பு உண்டு. தன் கணவனிடம் தான் படும் கஷ்டங்களைக் கூட வெளிப்படையாகப் பிறரிடம் சொல்லமாட்டாள். அத்தனை அடக்கம்.

அடக்கமான மனைவியாகத்தான் கொடூரமான கணவன்மார் வந்து சோதிக்க வேண்டுமென்ற விதியோ? என்னவோ!

'சரிதான் போடி! கதையை விட்டிட்டு காசைக் கொண்டுவா!' அவன் காசைப் பறித்துக்கொண்டு மீண்டும் கள்ளுக் கொட்டில்களை நாடிச் சென்றுவிட்டான்.

'இன்றையப் பொழுது எப்படிப் போகும்?' அவள் மனச் சுமையோடும், குமுறலோடும் மீண்டும் ஸ்ரூலின் பக்கத்தில் வந்து அமர்கிறாள்.

— — —



பேச்சாளர்: நான் நேற்றுப் பேசிய கூட்டத்தில்தான் ரொம்ப சனக்கூட்டம்.

மற்றவர்: உங்களைப் போல பெரிய பேச்சாளர்களெல்லாம் வந்திருப்பாங்க... உங்களுக்குப் பெரிய புகழ்தான்.


பேச்சாளர்: நீங்க ஒண்ணு... நான் பேச இருந்த பந்தல் தீப்பிடிச்சிட்டுது... அதுதான்.

இன்னும் கொஞ்ச நேரம் போனால் பிள்ளைகள் பள்ளிக்கூடத்தால் பறந்துவந்து 'அம்மா பசிக்குது!' என்று அவளிடந்தான் ஓடிவருவார்கள். 'அப்பா பசிக்குது!' என்று அவனிடமா போய்க் கேட்பார்கள்? அவனாக அதட்டி உருட்டி தன் பக்கம் இழுத்துக்கொண்டால், சிறிது நேரம் அவனோடு இருப்பார்களே தவிர, அப்பா என்று ஆசையோடு அவர்களாகவே ஒட்டிக்கொண்டது இப்போதெல்லாம் கிடையாது.

'என்னடி ராசாத்தி! இப்ப என்ன செய்யிறது?' உத்தரவுக்கு வந்து நின்றவள் அவளுடைய பெரிய தாயார். இல்லை அவளைப் பெறாத அன்னை. அவள் மீது தப்பித் தவறி எறும்பு கூட ஊர்ந்து விடாதபடி அத்தனை கண்காணிப்புடன் கண்ணுக்குக் கண்ணாய் வளர்த்து ஆளாக்கியவள். ஆனால் இன்று அவளது செல்லப் பெண் அனுபவிக்கின்ற துன்பங்கள்? தொழில் செய்து பிழைக்க முடியாத ஊதாரி ஒருவனைக் கணவனாக்கிக்கொண்டாள். தலைவிதியோ? இன்று அனுபவிக்கிறாள். துன்பத்தின் எல்லையில் அவளால் அழவும் முடியவில்லை.

'இந்தாம்மா ஒரு ரூபாய்! ஏதாவது பாணைக் [கீணை வாக்கி வை! வேறென்ன செய்ய? அவள் போய்விட்டாள்.

அருணா பெருமூச்சு விட்டாள். அவனைக் காதல் கணவனாக வரித்துக்கொண்டவள் அவள் தான். அந்தத் தவறின் பலனை அனுபவித்து, அனுபவித்து அவளது உணர்ச்சிகளும் உடலும் மரத்துவிட்டன.



பாட்டி: நல்ல பிள்ளை நீ. யன்னல் ஓரமாக ரயிலில் சீத் பிடித்தால் போய்ச் சேரும் வரை ஒருவரும் விடமாட்டார்கள். நீ உன்னுடைய இடத்தைக் கொடுத்துவிட்டு நிற்கிறாயே!

வாலிபன்: பரவாயில்லை! இப்போ ரயிலுக்கு அடிக்கடி கல் வீச்சு நடந்து பிரயாணிகள் காயமடைகிறார்களாம்.

—ச. ரா. பா. சர்மா.

அவனுடன் நடத்துகின்ற வாழ்க்கையே அலுத்துவிட்டது. அவனது பொறுப்பற்ற செயல்களினால் ஏற்பட்ட உள்ள வலியும் தாறுமாறான. தக்குதல்களினால் உண்டான உடல் வலியும் அவளை விட்டு நீங்காததாகிவிட்டன. இவ்வளவு கசப்பான இல்வாழ்வு தானா அவளுக்குக் கிடைத்திருக்க வேண்டும்? இதென்ன கொடுமையான தலைவிதி.

உத்தியோகம் பார்க்கின்றவள் தனது மனைவி, தனது தேவைக்கெல்லாம் பணம் தர வேண்டுமென அவன் எதிர்பார்க்கின்றான். மணமான புதிதில், அவனைச் சந்தோஷப்படுத்த அவள் தான் கஷ்டப்பட்டு உழைத்த பணத்தினை தாரை வார்ப்பது உண்மைதான். குழந்தைகளும் பிறந்து குடும்பச்சுமை ஏறிய பின்னரும் பணம் கொடுத்து உல்லாசப்படுத்த அவளால் முடியுமா?

ஆனால் மனைவியின் கஷ்டத்தை அவன் உணர்ந்ததாகத் தெரியவில்லை. அடியும் உதையும் தினப் பரிசாகிவிட்டன. ஒரு சுடுசொற் கேட்டறியாமல், துரும்பும் வீச்சாகத் தீண்டாமல் வளர்ந்தவள், மின்னாமல் முழங்காமல் அடிபடவேண்டியவளானாள்.

அவனால் அவள் ஊராரினால் அவமதிக்கப்பட்டாள். காரணம் அவனுக்காக ஊர் எல்லாம் எக்கச்சக்கமாகக் கடன் பட்டது தான். இருந்தும் அவளது நல்லுணர்வினை அவன் உணர்ந்ததாகத் தெரியவில்லை.

அரசாங்க அலுவலகம் ஒன்றில் உத்தியோகம் பார்க்கின்றவள். நல்ல சம்பளம் பெறுகின்றவள். அவனது தொல்லைகள் இல்லாதிருப்பாளேயானால், தனது பிள்ளைகளுடன் ராசாத்தியாக வாழமாட்டாளா? ஊரார் தன்னை மீண்டும் மதிக்கவைக்க மாட்டாளா?



பாலன்: கலியாணத்தை இக்காலப் பெண்கள் விரும்புவதில்லை.

ராஜன்: உமக்கு எப்படித் தெரியும்?

பாலன்: பலரிடம் கேட்டேன்... எல்லோரும் வெறுக்கிறார்கள் என்னைக் கலியாணம் செய்ய.

—செல்வி குமுதினி, நல்லூர்.

அப்படியானால் அவனை—அவளது கணவனை விவாக ரத்துச் செய்துகொண்டுவிட்டால் என்ன? இதுவே அவளது மூளையைக் கடந்த சில மாதங்களாகக் குழப்பிக் கூழாக்கிக்கொண்டிருக்கிற பிரச்சினை.

விவாகரத்தா? அவளது குடும்ப வட்டத்தில் இதுவரை யாரும் அப்படி ஒரு கதிக்கும் ஆளாகவில்லையே! ஒருவரை ஒருவர் பிடிக்காத தம்பதிகள் தத்தம் உறவினருடன் ஒதுங்கியிருந்து ஒருவித தொடர்பும் இல்லாமல் வாழ்ந்திருக்கிறார்கள். ஆனால் விவாகரத்துச் செய்வதென்றால் கோடேறவேண்டுமே! 'எனக்கு இவரை வேண்டாம்!' என்று தெரிவித்து, திருமண பந்தத்தினை ரத்துச் செய்ய, இவ்வளவு நாளும் நடந்த குடும்ப விதத்தால் தாங்கள் எல்லாம் அம்பலப்படுத்தவேண்டுமே, அது எவ்வளவு சங்கடமான விஷயம்?

'ஒரு படித்தவள் செய்கிற காரியமா இது?' என்று இகழ்வார்களே ஊரார்!

இகழட்டுமே! காறித் தூற்றட்டுமே! நான் படும் வேதனையும் துன்பமும் இவர்களுக்கு எங்கே தெரியப்போகிறது? அல்லது எனது துன்பத்தில் ஒரு பகுதியை இவர்கள் பங்குபிரித்து அனுபவிப்பார்களா, நான் இவர்களது அபிப்பிராயங்களுக்கெல்லாம் பயப்படுவதற்கு?

சே! எனது அருமைச் செல்வங்களின் எதிர்காலம் என்ன? தந்தையில்லாப் பிள்ளைகளைப் போல் அவர்கள்...

இல்லை! செய்தேயாகவேண்டும். ஊராரின் கடனையெல்லாம் அடைத்து நான் கௌரவமாக வாழவேண்டும். எனது வாழ்க்கை இப்படியே சீர்கெட்டுச் சென்றால், நான் கடன்களைத் திருப்பிக் கொடுக்க முடியாது. நிம்மதியாகவும் வாழ முடியாது.

விவாகரத்துச் செய்துகொண்டபின்னரும் அவர் எனக்குத் தொந்தரவு தரமாட்டார் என்பது என்ன நிச்சயம்? நான் நிம்மதியாக இருப்பேன் என்பதும் என்ன நிச்சயம்?

ஐயோ கடவுளே! மண்டையைப் பிளக்கிறதே! 'கடுமையாக வேலை செய்யாதே! ஆழ்ந்து யோசிக்காதே! உன் உடல் இருக்கும் நிலையில் ஆகாது!' என்கிறார் டாக்டர். ஆனால் யோசிக்காமல் எப்படி இருப்பேன் கடவுளே! எனக்கு ஒருநாளுமே அமைதி இல்லையா?

நிம்மதி! நிம்மதி! நிம்மதி! அமைதி! அமைதி! அமைதி!

தலை 'கிர் கிர்' என்று சுழல்கின்றது. விவாகரத்துக்கு நான் சம்மதிக்கிறேன். 'நீங்கள் அதற்கான நடவடிக்கைகளைக் கவனியுங்கள்' என அவன் கலந்தாலோசித்த வழக்கறிஞருக்குப் பதில் எழுதக்கொண்டுவந்து வைத்திருந்த வெற்றுத் தாளும், பேனையுங்கூட சுற்றுடலுடன் சேர்ந்து கடகடவெனச் சுழல்கின்றன. கணிக்க முடியாத வேகம்.

அந்த சுழற்சி வேகத்தில் அவளுக்கு நிம்மதி தோன்றுகின்றது போலிருக்கிறது. அவள் 'பொத்'தென்று கீழே விழுகிறாள்.

அமைதி!

ஃ ஃ ஃ

'அவனுக்குச் செய்தி பறக்கிறது. அவனது மனைவி இறந்துவிட்டாள்! உடனே வா!

## □ மந்திரமுமல்ல... மாயமுமல்ல... ஜிலு ஜிலு ஜில் ஜில் ஜில்! □

தைலம் என்றால் இதுதான் தைலம்! புண், சிரங்கு, வெட்டுக் காயம், சொறி எதுவானாலும் சரி- பூசிப்பாருங்கள் ஐயா; இரண்டு நாட்களில் சுகமாகிவிடும். மாற்றிக் காட்டுகிறேன் உங்கள் நோயை- ஒரு சந்தர்ப்பம் தந்துபாருங்கள்! எண்பது மூலிகைகளில் ஐம்பது நாட்களாகத் தயாரித்த அற்புதமான மருந்து.

—தெருவோரத்தில் ஒரு தைல வியாபாரியார்.

சார்... இங்கே வாருங்க, இது வெங்களுத்திப் பாம்பு. இதோ மற்றது மலைச் சாதி நாகமுங்க. இதன் பல் பட்டால் ஐந்து நிமிடத்தில் மரணம். ஆனா என்கிட்டே எல்லாத்துக்குமே மருந்திருக்கு. இந்த ஊருல யாருக்கிட்ட வேணுமானாலும் போங்க- இந்த மருந்து கிடையாது. சத்தியமுங்க.

—சந்தை மைதானத்தில் ஒரு பாம்பு வைத்தியர்,

இதோ பாருங்கள்... டும் டும் டும் டும்... இந்தப் பந்து இன்னும் ஐந்து நிமிடங்களில் புறாவாக மாறிப பறக்கும். கண்களைத் திறந்துகொண்டே இருங்கள்... போகாதீர்கள் நீங்கள் என் கூடவே இருப்பீர்களானால் இன்னும் கொஞ்ச நேரத்தில் என் குழந்தையின் கழுத்தை வெட்டித் திரும்பவும் உயிர் கொடுப்பேன். இருந்து பாருங்கள் டும் டும் டும் டும்.

—முச்சந்தியில் ஒரு வித்தைக்காரன்.

மகா ஜனங்களே... என்னையே நம்புங்கள். நான் ஆற்றைத் திருப்புவேன். ஐம்பது பாதைகள் ஐந்து நாட்களில் போட்டுத் தருவேன்! எந்தப் பிரச்சனைக்கும் சரியான மருந்து என்னிடம் இருக்கிறது. என்னையே இம்முறை பிரதிநிதியாகத் தெரிவு செய்யுங்கள்.

—முற்றவெளியில் ஒரு தேர்தல் வேட்பாளன்.

அவன் பாய்ந்தோடி வருகிறான். உற்றார் உறவினர் எல்லோரும் கூடிநின்று வாழ்ந்தும் வாழாமல், இளவயதினில் காலனின் விளையாட்டில் அகப்பட்டுவிட்ட அந்த நல்ல ஜீவனின் செயலற்ற உடல்மீது விழுந்து விழுந்து புலம்புகின்றனர்.

'டேய்! இதோ பார்டா பாவி! செல்லப் பெண்ணாகச் செருக்கும் மிடுக்குமாய் வாழ்ந்தவள், உன்னாலே வாழ்க்கையிலே எவ்வளவு வேதனைகளைப் பட்டுவிட்டாளடா! நீ ஒரு ஆண்மகன். நல்லதோ அல்லதோ காதலித்துக் கைப்பிடித்துவிட்டோம் நான்கு பேர் தன்னை இகழ்ந்து பேசக்கூடாதே என்று தான் தோன்றித் தனமான உன் செயல்களை எல்லாம் மனத்திரையில் போட்டு மறைத்தாள்.

மனைவி சம்பாதிக்கிறாளோ இல்லையோ உனது குடும்பத்தினைக் காக்கின்ற பொறுப்பு உன்னுடையது. ஆனால் தொழிலுமற்ற ஊதாரி, ஒரு தொழிலையும் பொறுப்போடு செய்யத் தெரியாத சோமாரி. அவள் சம்பாதிப்பதையும் அடித்துப் பிடித்து வாங்கிச் 'சோக்கு'ப் பண்ணிவிட்டு, அவளை எத்தனை நாள் பட்டினி போட்டிருப்பாய்? உடுக்க ஒரு துணி உண்டா? அணிய சாதாரணமான ஒரு நகைதானும் உண்டா? இப்படியெல்லாம் அந்த செல்வக் குமாரி தனது உள்ளத்துக்குள்ளேயே குமைந்து மாளவைத்து விட்டியேடா!

எந்தச் சந்தர்ப்பத்திலும் உன்னை அரவணைத்துச் செல்ல வேண்டுமென சங்கற்பம் எடுத்து வாழ்ந்தவள், தன் உயிருக்குயிரான குழந்தைகளையும் நிர்க்கதியாக விட்டுவிட்டுப் போய்விட்டாளேடா!

கூடி நின்றோர் தன்னை இப்படி ஏசுவது போலிருந்தது அவனுக்கு. அவன் உடலைப் பார்க்கின்றான்.

கருணையைக் காட்டுகின்ற விழிகள் மூடிக்கிடந்தன. கஷ்டத்திலும் அவனுடன் சிரித்துப் பேசுகின்ற இதழ்கள் மரத்துக் கிடந்தன. அவன் கேட்கும்போதெல்லாம் எப்படியும் பணம் கொடுத்துவிடுகின்ற கைகள் சோம்பிக் கிடந்தன. ஏன்? அவன் வாழ்வே திடீரென்று அஸ்தமித்துக் கிடப்பது போல் அவனுக்குத் தோன்றுகிறது.

அவனுக்கு அதிர்ச்சியைத் தாங்க முடியவில்லை. 'அருணா! என் செல்வமே!' என்று கூவியவனுக்கு கண்ணீரைக் கட்டுப்படுத்த முடியவில்லை. ஒரு மூலையில் முடங்கி அழுதுகொண்டே இருக்கின்றான். அவனை யாரும் இலட்சியம் செய்யவில்லை. கரிசனை காட்டுகின்ற ஜீவன்தான் ஓடிச்சென்றுவிட்டதே!

*Best Compliments*
*from*

# RAJAH BEEDI CO

Colombo-14

# எப்படிப்பாடினரோ



வெள்ளை நிற மல்லிகையோ
வேறெந்த மாமலரோ
வள்ளல் அடியிணைக்கு
வாய்த்த மலரெதுவோ
வெள்ளை நிறப் பூவுமல்ல
வேறெந்த மாமலருமல்ல
உள்ளக் கமலமடி உத்தமனுர் வேண்டுவது

—விபுலானந்த அடிகள்

— — —

மக்களாட்சி புலகினிலே
மாண்பு விளங்கச் செய்திடுக
சுக்கு நூறுய்ப் பழமையிலே
சூழ்ந்த சின்னம் உடைத்திடுக
பக்குவஞ் செய் உழவனுமே
பசித்திருக்கத் தானியமாய்
மிக்கிருக்கும் கழனியெலாம்
மிஞ்சலின்றித் தீயிடுக.

—இக்பால்

— — —

சோலையிலும் சாலையிலும்
சுற்றி வரும் பெண்டிருடன்,
வாலை மிடுக்கினிலே
வாயடித்து, மாலையிலே

ஆழி யருகமர்ந்தோர்
அரிவை இடை தழுவி,
நாழிக் கணக்காக
நன்னிலவில் கண் செலுத்தி,

கரை கழுவும் கடலருகின்
கடுகு மணல் மீதினிலே
கைவிரல்கள் கீறியதைக்
காதலென ஏமாந்தேன்!

—தான்தோன்றிக் கவிராயர்

— — —

ஐயா நான் செத்ததற்குப் பின்னல்
நிதிகள் திரட்டாதீர்!
நினைவை விளிம்புகட்டி
கல்லில் வடித்து வையாதீர்!
வானத்து அமரன் வந்தான் காண்
வந்ததுபோல்...
போனன்காண் என்று புலம்பாதீர்!

—புதுமைப்பித்தன்



இன்பம் எங்கே, இன்பம் எங்கே என்று தேடு... அது எங்கிருந்தபோதுமதை நாடி ஓடு...



கல்கி பீடி நிறுவனத்தின் புதிய தயாரிப்பு

## எஸ். எஸ். பீடி

கைதேர்ந்த தொழிலாளர்களின் பெரு முயற்சியால் உருவாக்கப்படுவதுதான்

## எஸ். எஸ். பீடி

யாவரும் விரும்பிப் புகைக்கவல்லது

## எஸ். எஸ். பீடி

தயாரிப்பாளர்களும், விற்பனையாளர்களும்:

# எஸ். சின்னத்துரை & சகோதரர்கள்

**கல்கி மாளிகை, 79, 79/1 மெசஞ்சர் வீதி, கொழும்பு- 12.**

கிளை:

**39, கே.கே. எஸ் வீதி, யாழ்ப்பாணம்.**

# காதல் பழுடி

குமார் தனபால்

என் கையில் இருந்தது ஒரு படம்!

அந்தப் படத்தில் நிலைகுத்திய என் கண்களைப் பிய்த்து எடுக்க முடியாமல் திணறினேன்!

அந்தக் காலத்தில் வாழ்ந்த ரம்பை, ஊர்வசி, மேனகை, திலோத்தமையாக இருந்தாலும் சரி—இந்தக் காலத்தில் வாழும் ராஜஸ்ரீ. வாணிஸ்ரீ. விஜயஸ்ரீ. ஜெயஸ்ரீயாக இருந்தாலும் சரி எல்லோரும், இப்போது என் கையில் இருக்கும் இந்தப் புகைப்பட ராணியிடம் கை நீட்டி 'எங்களுக்கும் கொஞ்ச அழகு தருகிறீர்களா?' என்று பிச்சை எடுக்க வேண்டும்.

அவளின் அழகு...சே! அந்த அழகை அக்குவேறு ஆணி வேறாகப் பிய்த்துப் பிய்த்துக்கூறி சித்திரவதை செய்ய நான் விரும்பவில்லை.

காலையில் வாடகைச் சைக்கிளை எடுத்துக் கொண்டு ஊர் சுற்றப் போயிருந்த நான், மாலையில் வீடு திரும்பி என் அறைக்குள் நுழைந்தபோது... இந்தப் படம் தரையில் கிடந்தது. இது எப்படி என் அறைக்குள் வந்திருக்க முடியும்?

என் சின்னஞ் சிறு மூளையை பென்னம் பெரிதாகச் சுழலவிட்டுப்பார்த்தேன், ம்... புரியவே இல்லை. மணந்தால் இவளைத் தான் மணப்பது அன்றேல் என் மண்டையை உடைத்துச் சாவது என்று என் மனதிற்குள் முடிவெடுத்துக் கொண்டேன்.

இந்தப் படத்தில் இருக்கும் அழகுமோகினி யார்? இப்போது எங்கிருக்கிறாள்? இவளின் பெயர் என்ன? என்பனபோன்ற பல கேள்விக் குறிகள் எழுந்து நின்று 'குவிஸ்ற்' நடனமாடத் தொடங்கியது.

அந்த அழகு மங்கையின் படத்துக்கு மாறி, மாறி முத்தமழை பொழிந்தபடி, கட்டி வைத்த விசர் நாய்போல் என் அறைக்குள் குறுக்கும் நெடுக்கும் அலைந்துக் கொண்டிருந்தேன்.

அப்போது...

வாசல் பக்கமாக யாரோ நடந்து வரும் அரவம் கேட்டது' ஒருவேளை இந்தப் படத்திலுள்ள அழகு மோகினிதான் என்னைத் தேடி வருகிறாளோ?... ஏதோ ஓர் அபிலாசை என் பிடரியைப் பொத்தி அடிக்க அறை வாசலுக்கு வந்து எட்டிப் பார்த்தேன்...

அட, கர்மமே!...

அங்கே நடந்து வந்து கொண்டிருந்தது என் பாட்டி. அதாவது இன்னும் உயிரை விடாமல் வீட்டில் இருந்து உபத்திரவம் கொடுக்கும் என் அம்மாவின் அம்மா. கையில் உள்ள தடி ஒன்றின் உதவியுடன் என் அறையை நோக்கி மூன்று கால் பாச்சலில் வந்து கொண்டிருந்தாள்.

என் அறைக்குள் நுழைந்த அந்தக் கிழட்டு ஜென்மம் அங்குமிங்கும் பார்வையைப் பரப்பி தரையில் எதையோ தேடுவதைக் கண்ட நான்— 'கிழட்டு ஜென்மமே எதைக் கீழே தேடுகிறாய்?' என்றுதான் வழக்கமாகக் கேட்டிருப்பேன் ஆனால், இன்று...

என் கையில் உள்ள அழகு மங்கையைப் பற்றி கடைசி பாட்டியிடமாவது கேட்டுத் தெரிந்து கொள்ளலாம் அல்லவா? அதனால் 'என்ன பாட்டி தேடுகிறாய்? கோழி முட்டையை மிகப்பவ்வியமாக நிலத்தில் வைப்பது போல பாட்டியிடம் இப்படியொரு கேள்வியைக் கேட்டேன்,

'ஒரு படத்தைத் தேடுறனடா...' என்றாள் பாட்டி. என் இதயம் இதைக்கேட்டதும் குளு குளு குளிரில் திளைக்கும் நுவரேலியாப் பக்கம் சென்று திரும்பியது என் பாட்டி மூலமாகத்தான் இந்தப் படம் இங்கு வந்து சேர்ந்திருக்க வேண்டும். அப்படியானால் என் கையில் இருக்கும் இந்தப் புகைப்பட ராணி எப்படி என் அறைக்குள் வந்தாள் என்ற மர்மம் நிச்சயம் பாட்டிக்குத் தெரிந்திருக்க வேண்டுமே!

இதற்குள் என் கையில் இருக்கும் அந்தப் படத்தை பாட்டி கண்டுவிட்டாள்.

'இதைத்தானடா இவ்வளவு நேரமும் தேடிக்கொண்டிருக்கிறேன்' என்று கூறி வெடுக்கென அந்தப் படத்தைப் பிடுங்கிக் கொண்டாள்.

எனக்கு ஆத்திரம் உச்சந் தலையைப் பிய்த்தது. சமாளித்துக் கொண்டேன். காரியம் ஆக வேண்டுமானால் கழுதையின் காலாக இருந்தாலென்ன கிழவியின் காலாக இருந்தாலென்ன?

'இந்தப் படத்தில் இருக்கும் பெண் யார் பாட்டி? இவளை உனக்குத் தெரியுமா?' அந்தப் புகைப்படப் பெண்ணிடமுள்ள அடங்காத ஆசை என் வார்த்தைகளைக் கூசவைக்க பாட்டியிடம் இப்படி நாணிக், கோணிக் கேட்டேன்.

அதற்குப் பாட்டி சொன்ன பதில்!

ஐயகோ! அதைக்கேட்டதும் நான் திக்கு முக்காடினேன்- ஏழெட்டுக் கடலை வடைகளை ஒன்றாக முழுங்கியதுபோல் திணறினேன்!

பாட்டி சொன்னது இதுதான்— 'அது நான் சின்னப் பிள்ளையாக இருக்கையிக்கை எடுத்த படம். படத்திலை நான் நல்ல வடிவா இருக்கிறேனா?'

---

### சித்திரக் காரர்கள் செய்த போர்

கடந்த உலகப் பெரும் போரை நடத்திய அடோர்ப் ஹிட்லர், வின்ஸ்டன் சர்ச்சில் ஐசன் ஹோவர் மூவரும் பிரபலமான சித்திரக் காரர்கள் கூட. சித்திரம் தீட்டிய கரங்களால் தான் சரித்திரமே தீட்டப்பட்டிருப்பது ஆச்சரியமாக இல்லையா?

# ஒய்யப்பங் கங்காணியார்



—குறிஞ்சிதாசன்—

என்னு ஒலகம்டா இது? வயிறு பகிருனு பத்துது அப்பே காலத்துல இருந்து ஆத்தா காலத்துல இருந்து அப்போன்னு இந்த தோட்டத்துலயே கெடந்த வையாபுரி மவன் முருவேசு குடும்பத்தோட இந்தியாவுக்கு போருனே அவே அங்க போயி இன்னேயா செய்யப் போரு? கவுருமன்டுல அவன இந்தியாவுக்கு போவ சொல்லிட்டான்களாம் அவனூட்டு பாட்டனேயோ, பாட்டியையோ இந்தியாவுல இருந்து .எலங்கைக்கு வாடா தேயில மரதூருல மாசி கெடக்கூன்னு' சொல்லி வெள்ளக்கார பாவிக இங்க கூப்புட்டுகிட்டு ஐந்து பரம்பரயா இருக்கச் செஞ்சீட்டு இப்ப இன்னுன்னு போடா ஒன்ட ஊருக்கூனு அனுப்பி வைக்கிருகளே... இதென்னய்யா ஞாயம்? கோருமென்டாம்... கோருமென்டு அதெவுட கோழி கொடாப்பு தேவல்ல போலருக்கு!

பாட்டனும் பூட்டனும் இந்தியாவுல இருந்து வந்தவுகங்குறதுக்காக இப்ப இருக்கவுகள புடிச்சி அனுப்புனு அவுகளுக்கு இன்னுய்யா தெரியும்? இந்தியா எந்த பக்கத்துல இருக்கூன்னே தெரியாதவுக எல்லா இந்தியாவுக்கு போயி இன்னேய்யா செய்வாக? நோயில கெடந்து, நொடியில கெடந்து அட்டைகடி பட்டு மழையில நனேஞ்சி குளுருல நடுங்கி கொழுந்து பிச்சி, கவாத்து வெட்டி சும்மா கெடந்த மலகாடெல்லாம் மாணிக்கமா ஆக்குனவுங்கள 'போங்கடா கள்ளத்தோணி பயலுவலே'ன்னு இன்னு ராங்கியா சொல்லி புட்டாங்க' இன்னுய்யா இக்குனுன்டி யாச்சு எரக்கம் வேணும்?

யெங்கொப்புருனே... நெதமும் கோச்சி ஸ்டேசனுல பாருங்கையா அழுதுக்கினே எத்தினி குடும்பம் இந்தியாவுக்கு போவுது இந்த பாவும் சும்மா உடுமாய்யா?

இந்தியா என்னுய்யா அமேரிக்காவா? அங்கயு பசியும் பட்டினியு தானேய்யா ? அததான் இங்கேயே நல்லா கண்டுகிட்டாகளே அங்க போயி பசி பட்டினில சாவுரத இங்கயே செத்துபூட்டா இன்னுய்யா?

அன்னிக்கு ரேடியோல படிச்சானுகளே

காடு வெலஞ்சென்னு
மச்சான் — நமக்கு
கையுங்காலுந்தானே மிச்சம்...

அது சரியா தாய்யா இருக்கு

இன்னுய்யா கொமிட்வுடுற ஒய்யப்பங்கங்காணி கோவமா பேசுருகளேன்னு பாக்குறீகளா?... கொமிட் இன்னுய்யா கொமிட்! இங்க கெடந்து மாடா ஒலச்சி ஓடாபோன குடும்பங்கள இந்தியாவுக்கு ஓட ஓட வெரட்டுறத பாக்கக்குல வயிறு பத்துதையா... வயிறு பத்துது!!

---

## விஞ்ஞானப் பழத்தைப் பிழிந்து...

மனிதனின் நிலாப்பயணம் முடிந்து--பத்திரிகைகளெல்லாம் பக்கம் பக்கமாக செய்திகள் வந்து — வானொலிகளெல்லாம் நிலாப் பயணத்தைப் புகழ்ந்து உலகத் தலைவர்களெல்லாம் வாழ்த்துச் செய்திகள் அனுப்பி ஒய்ந்தன பிறகு பூமியில் எங்கோ ஒரு மூலையில் வீட்டுத் திண்ணையில் உட்கார்ந்திருந்த செல்லாச்சிப் பாட்டி கூறிய கருத்து இது:-

'இத்தனை கோடி ரூபாவை செலவு செய்து சந்திரனுக்குப் போனது கல்லுப் பொறுக்கி வரத்தானு?'

---

# 'இண்டர்வியூ'

—ஃ—ஃ—

ஒரு பெரிய காரியாலயத்தின் முன்பு ஏகப்பட்டோர் குழுமியிருந்தனர். காரணம்? அங்கு ஒரு 'இண்டர்வியூ' விற்காக (நேர்முகப் பரீட்சைக்காக) அனைவரும் அழைக்கப் பட்டிருந்தனர்.

காரியாலயத்தின் வளவுக்குள் ஒரு பியட் கார் வந்து நின்றது. காரினுள்ளிருந்து கோட்டும் சூட்டும் அணிந்த ஒருவர் மிடுக்காக இறங்கினர். நீ முந்தி, நான் முந்தி என்று இடித்துக் கொண்டிருந்தவர்கள் அனைவரும் அவருக்கு 'சல்யூட்' செய்து வழி விட்டனர். அவர் போய் எல்லோருக்கும் முன்னால் நின்றார்.

அடுத்ததாக ஒரு பஸ் வண்டியிலிருந்து ஒருவர் இறங்கி வந்தார். அவருக்கு முன்னால் போக வழிஇல்லை. பியூன் ஓடிவந்து அவருக்கு வழி ஒதுக்கி கொடுத்தான் உள்ளே செல்வதற்கு காரணம்? அவர்தான் மனேஜர்.

அப்படியானால் முன்னால் வந்தவர்...? என ஒரு சிலர் தமது சந்தேகத்தை பியூனிடம் கேட்டனர்.

அவரும் உங்களைப் போல் இண்டேர் வியூவிற்கு வந்தவர் தான்.

பியூன் சொன்னவுடன் அங்குள்ளோரின் முகங்களை பார்க்க வேண்டுமே!

(கே. பி கார்த்திகேசு-நாகசேனை)

## இது காந்தி நூற்றாண்டு

தீண்டாமை ஒழிப்புக்காக தியாகங்கள் போராட்டங்கள் பல செய்த மகாத்மா காந்தி பிறந்த குஜராத்தியில் இன்னும் ஒரு விசித்திரமான சாதிக் கட்டுப்பாடு வழக்கில் இருக்கிறது. குறைந்த சாதியினர் எனக்கருதப்படுவோர் ஆற்றின் தாழ்ந்த பகுதியில்தான் நீர் எடுக்கலாமாம். உயர்ந்த பகுதியில் நீர் எடுக்க உயர்ந்த சாதியினருக்குத்தான் உரிமை உண்டு.

# குழந்தைக் குறும்பு

குழந்தைகள் இருந்தால் ஒரு அழகு, நடந்தால் ஒரு அழகு அந்தச் சின்ன மலர்களின் சிரிப்பு பேச்சு, செய்கையெல்லாம் ஒவ்வொரு அழகுதான். அவர்களின் சுட்டித்தனம் சிரிக்கச் செய்வது மட்டுமல்ல சிந்திக்கவும் செய்யும் அப்படி உங்கள் குழந்தை செய்த குறும்புகளைச் சுவையாக எழுதியனுப்புங்கள்.

தெகிவளையைச் சேர்ந்த திருமதி ராமேஸ்வரம் எழுதியனுப்பிய கீழ்க்காணும் நிகழ்ச்சிதான் இப்பகுதியைப் புதிதாகத் தொடங்குவதற்குத் தூண்டியது


ஒரு நாள் என் கணவருக்கும் எனக்குமிடையே ஒரு சின்னத் தகராறு போதாதற்கு அவருக்கு முன்கோபம் வேறு. நானும் ஏதோ...கோபத்தில் சொல்லி விட்டேன் பலன்...என் கன்னத்தில் ஒரு அறை. பின் தம் அறைக்குப்போய் புத்தகம் படிப்பது போன்ற பாவனையில் உட்கார்ந்து விட்டார். அப்போது முற்றத்தில் விளையாடிக் கொண்டிருந்த நம்குழந்தை மதி (வயது 7) என்னிடம் வந்து 'ஏன்ம்மா அழறே? 'என்று கேட்டாள் நான் ஒன்றுமே பேச வில்லை. பின் அவரிடம் போய்' அம்மா ஏனப்பா அழறு?' என்றாள். அவரும் ஒன்றும் பேசவில்லை. மறுபடியும் என்னிடமே வந்து 'அப்பா அடிச்சாரா?' என்று கேட்டாள். நான் தலையை ஆட்டினேன் அவளுக்கு வந்துவிட்டது கோபம். உடனே அவரிடம் ஓடிப் போய் 'அம்மாவுக்கு ஏன் அடிச்சே? அம்மா உனக்கு அடிச்சதோ?' என்று பலமாகக் கத்தினாள். அவருடைய கோபமெல்லாம் மறந்து வாய்விட்டுச் சிரித்து விட்டார்; நானுந்தான்.

## அவரிடம் இல்லை

கணவனும் மனைவியும் சரிநிகர் சமானமானவர்கள். இருவரையும் 'திரு' என்றே அழைக்கலாமே. எதற்காக மனைவிக்கு மதி என்பதைச் சேர்த்துத் திருமதி என்று அழைக்கிறார்கள்?

மதி என்றால் அறிவு என்று அர்த்தம். கணவனிடம் இல்லாத அது மனைவியிடம் இருப்பதால்தான் மனைவியை திருமதி என்று சொல்கிறார்கள்.

—சரோஜினி




## மாயமான்

நம் மனதைத் தீவிரமான ஆசை பற்றும்போது, நமது சிந்தனை சக்தி ஆராய்ந்து முடிவெடுக்கும் தன்மையை இழந்துவிடுகிறது. மாய மானாக வந்த மாரீசனை-தங்க நிறமாக ஒளிர்ந்த அந்த மானை எப்படியாவது அடையவேண்டுமென்ற ஆசை சீதையின் மனதைப் பற்றிக் கொண்டது. சீதை இராமனை வற்புறுத்திப் போகச் செய்தாள். அதுமட்டுமல்ல, மாரீசனின் சப்தம் கேட்டு, ராமனுக்கு ஏதோ ஆபத்து வந்துவிட்டது என்று; லக்ஷ்மணனை சுடுசொற்களால் ஏசி, ராமனைத் தேடிப் போகச் செய்தாள். அதன்பின் நடந்தது என்னவென்று நமக்கெல்லாருக்கும் தெரியும். புராணங்களில் வரும் இச்சம்பவங்கள் எத்தனையோ நடக்கின்றன. சீதையின் வரலாற்றை நினைவுபடுத்தி அந்த சந்தர்ப்பங்களில், எம்மை நாம் காத்துக்கொள்ளவேண்டும்.

நம் மனதில் ஏற்படும் நல்ல ஆசைகளைக்கூட நாம் கடிவாளம் போட்டு, மனதை வழிச் செலுத்தி, கட்டுப்பாடாக வைத்துக்கொள்ளவேண்டும்.

—ராஜாஜி

— + —

## பாவம் கதாநாயகன்!

பேராதனைப் பல்கலைக் கழகத்தில் சிங்களமும், தமிழும் பயில வந்திருக்கும் இரண்டு ரஷ்ய மாணவர்கள் தமிழ்ப் படம் பார்ப்பதற்குச் சென்றார்கள்.

படம் பாதி ஓடிக்கொண்டிருக்கும் போதே அந்த இரண்டு மாணவர்களும் எழுந்து வெளியே வந்துவிட்டார்கள்.

அவர்களைக் கூட்டிக்கொண்டுவந்த தமிழ் மாணவர் அவர்களைப் பின்தொடர்ந்து வெளியேறிக் காரணத்தைக் கேட்டார். அதற்கு ரஷ்ய மாணவர்கள் கொடுத்த பதில் என்ன தெரியுமா?

'படத்தில் கதாநாயகன் அழுவதை இங்குதான் நாங்கள் முதன் முதலாகக் காண்கிறோம்; இங்கிருந்தால் நாங்களும் அழுது விடுவோம். அதனால்தான் வெளியே வந்துவிட்டோம்.' என்று கேலியாகச் சொல்லிக் கொண்டு நடந்தார்கள். தமிழ் மாணவர் பின் தொடர்ந்தார்.


— + —

## தலையே நீ வணங்காய்

எங்கள் ஆபீஸ் மனேஜர் எப்பவும் சிந்தித்தபடியே சைக்கிள் ஓடுவது வழக்கம். அவரிடம் பலரும் மதிப்பு வைத்திருப்பதால் எல்லோரும் அவரைக் கண்டால் வணக்கம் சொல்லுவார்கள். இப்படியாக ஒரு தடவை அவர் சிந்தனையோடு வரும்போது சைக்கிளுக்கு லைட் போட மறந்துவிட்டார். இருண்டுவிட்டது. அதைக் கண்ட பொலிஸ்காரன் ஒருவன் கையைத் தூக்கி 'நோ லைட்' என்றான். அவரும் தலையைத் தாழ்த்தி 'குட் நைட்' என்று பதில் வணக்கம் சொல்வதுபோல் சொல்லிச் சென்றார். ஏதும் புரியாத பொலிஸ்காரன் திகைத்துப்போய் நின்றான்.

—நா. கதிர்காமதாஸ்

குழந்தை: (தாயிடம்) அம்மா, கட்டிலில் மூட்டைப் பூச்சி இருப்பதால்தானேயம்மா திருமால் பாம்பில் படுத்திருக்கிறார்?



அந்தக் காலத்தில் தமிழ் நாட்டில் இருந்த ஒரு முல்லைக் கொடி நினைவுக்கு வருகிறது.

மலர்களைத் தந்து உலகத்தை நறுமணத்தினால் மகிழ்விக்கும் அந்த மலர்க் கொடியை நன்றாகப் புரிந்துகொண்டு அப்படிப் பட்ட ஒரு கொடி நீண்ட காலம் வாழவேண்டும் என்று ஆசைப் பட்டான் ஒரு மன்னன்.

பவளமும் முத்தும் வைரமும் தங்கமும் பதித்த தன் தேரை அந்தப் பச்சைப் பசுங்கொடிக்குப் பந்தலாக வைத்துவிட்டுப் போன பாரியின் கதை ஊரறிந்த பழங்கதை.

மரஞ்செடி கொடிகளின் வளர்ச்சியையே முறையாகக் கவனித்த தமிழன் மரபு மனிதனின் வளர்ச்சியில் மட்டும் சும்மா கண் மூடிக்கொண்டிருக்குமா? என்ன?

கலை உணர்வுகளையும் தமிழ் நினைவுகளையும் கருத்தில் சுமந்து அந்த நாட்களில் முளைத்த இந்த மனிதக் கொடி 'சிரித்திரன்' என்ற மலரை விரித்து மணம் பரப்பத் தொடங்கிய வேளையில் பந்தலாகத் தன்னையே தந்து நின்ற ஒரு பைந்தமிழ் நெஞ்சத்தை இந்த நாளில் நினைத்துப் பார்க்கிறேன் நான்...

அவர்தான் திரு. தம்பித்துரை!

'தம்பி' என்று அவர் வாய் நிறைய அழைப்பார்.

'தங்கமான ஒரு கொள்கையையும் தளராத ஓர் உள்ளமும் இருக்கிறவன் என்றும் வீழ்ந்ததில்லை- எங்கும் வீழ்ந்ததில்லை!'

அந்த நல்ல மனிதரின் இந்த மணிவார்த்தைகள் என் நெஞ்சோடு கலந்துவிட்டவை.

ஓட்டப் பந்தயத்தில் கலந்துகொள்கிறவனுக்குக் கூட்டத்தில் நிற்கிறவன் எழுப்பும் உற்சாக ஒலிகள் பலவற்றைச் 'சிரித்திரனின்' ஓட்டத்தில் அவ்வப்போது எழுப்பி உணர்வூட்டியவர் அவர்.

இந்த நாளில் திரு. தம்பித்துரை அவர்களை இதய பக்தியோடு எண்ணி நான் மரியாதை செய்கிறேன்.

தந்தை வழி மகன் என்பார்கள்...

திரு. தம்பித்துரை அவர்களின் செல்வப் புதல்வரான திரு. துரைராஜா அவர்கள் இன்று சிரித்திரனின் ஓர் உயிர் அங்கமாகத் திகழ்கிறார்!

## நூதன விளம்பரம்

வேல் திருவிழா மைதானம் நிறைய எங்கு பார்த்தாலும் ஒரே கூட்டம். ஆங்காங்கே கடை பரப்பியிருந்த விற்பனையாளர்கள் தம்மிடமிருந்த பொருட்களை விற்க நூதனமான முறைகளை கையாள ஆரம்பித்தார்கள்.

மூக்குத் தூள் வியாபாரி ஒருவர் தம் கடை முன்பாக ஓர் உயர்ந்த இடத்தில் கோமாளி வேஷக்காரன் ஒருவனை நிறுத்தியிருந்தார்.

அவன் கூவினான்.

'அன்பார்ந்த மகா ஜனங்களே...!

அருமை மிக்க நண்பர்களே!

பொடி போடாமல் இருப்பதே நல்லது.

போட்டால்... எங்கள் டி.டி. குமார் பொடியை போடுவது நல்லது' என்று கூறி முடித்தான்.

கூட்டத்தினரின் ஆரவாரத்திற்கு கேட்கவேண்டுமா? கூடிய கூட்டத்திற்கு தக்கப்படி 'பிசினஸ்' ஆயிற்று என்று கூறத் தேவையில்லை.

இந்த விளம்பர உத்தியை கவனித்துக் கொண்டிருந்தார் பல்பொடி விற்பனையாளர் சிவசம்பு.

இவரும் அதே வழியில் விளம்பரப்படுத்த எண்ணி தனது குள்ளமான மகனைப் பிடித்து வந்து கடை முகப்பில் நிறுத்தினார்.

அந்தப் புத்திசாலியான மகனோ பின்வருமாறு கூவ ஆரம்பித்தான்.

'பேரன்பு மிக்க பெரியோர்களே!

பல்லாயிரக்கணக்கான பரம ரசிகர்களே!

தொள்ளாயிரத்துக்கு மேற்பட்ட தோழர்களே!

பல் தேய்க்காமல் இருப்பதே நல்லது...!

தேய்த்தால்...

எங்கள் 'டொமினியன்' மார்க்பல் பொடியைத் தேய்த்து பயனடையுங்கள்,'

—சோ. ரா. வரன்
தெகிவளை.

### ரகசிய போலீஸ் 114

போலீஸ் குற்ற இலாகா பயங்கரக் குற்றவாளி ஒருவனைப் பிடிக்கப் பெரு முயற்சி எடுத்துக் கொண்டது. அவர்களுக்கு அவனுடைய புகைப்படங்களில் ஆறு கிடைத்தன. அவை வெவ்வேறு கோணங்களில் எடுக்கப்பட்டிருந்தன. அவற்றுக்குப் பிரதிகள் எடுத்து எல்லாப் போலீஸ் நிலையங்களுக்கும் அனுப்பிவைத்தார்கள்.

சில தினங்களுக்கெல்லாம் ஒரு போலீஸ் நிலையத்திலிருந்து தகவல் வந்தது. 'குறிப்பிட்டிருந்த ஆறு நபர்களில் நால்வர் கிடைத்து விட்டனர். மற்ற இருவரும் விரைவிலே கிடைத்து விடுவார்கள் என நம்புகிறோம்'

—சோ. ரா. வரன்

தெகிவளை.

## பாட்டு இருவிதம்

தமிழன்:-

வெண்ணிலவே
தண்மதியே
என்னுடனே வா! வா!
நிலவே நிலவே வா! வா!

அமெரிக்கன்:-

வானத்தில் ஏறி
சந்திர மண்டல
வாசலைத் தொடலாமா?

ஒரு பத்திரிகையில் வெளியாகியிருந்த அறிவிப்பு பின்வருமாறு:-

எங்கள் பத்திரிகைக்கு விற்பனையாளர்கள் இல்லாத இடத்திற்கு விற்பனையாளர்கள் தேவை.

விற்பனையாளர்கள் உள்ள இடத்திற்கு வாசகர்கள் தேவை;

—சோ. ரா. வரன்

தெகிவளை.

### தூங்குகிறீர்களா?

விழிப்பின் சலனங்கள் தூக்கத்திலுமிருந்தால் தூக்கமும் ஒரு விழிப்பே. தூக்கத்தின் நிர்ச்சலனம் விழிப்பிலுமிருந்தால் விழிப்பும் ஒரு தூக்கமே.

—யாரோ

## ஒரு கரு இரு உரு

வெய்யிற் கேற்ற நிழலுண்டு;
வீசும் தென்றல் காற்றுண்டு;
கையில் கம்பன் கவியுண்டு;
கலசம் நிறைய மதுவுண்டு;
தெய்வ கீதம் பலவுண்டு;
தெரித்து பாட நீயுமுண்டு,
வையந் தருமிவ் வனமின்றி
வாழும் சொர்க்கம் வேறுண்டோ?


—உமர்கயாம்

தமிழாக்கம்:- கவிமணி தேசிய விநாயகம் பிள்ளை

மாதவிப் பூங்கொடி நிழலில்
மணிக் கவிதை நூலொன்றும்,
தீதறு செந்தேன் மதுவும்,
தீங்கனியும்—பக்கத்தில்
காதலி நீ பாட்டிசைத்துக்
கனிவோடு கூடுவையேல்-
ஏதும் இனிக் கவலை யில்லை;
இது வன்றோ பரமபதம்


—உமர்கயாம்


தமிழாக்கம்:- ச. து: சு. யோகி



அவர் பெரிய ஆசார சீலர்...
நாங்கள் தொட்ட வைகளை
அவர் தொடார்



டார்லிங் நீங்க
சாப்பிடாவிட்டால்
இதிலே நிக்கிறதுக்குப்
போட்டிடுவேன்


ஆண்டவனே
இறப்பவனின்
ஆத்மா சாந்தி
அடையட்டும்





செங்கண்ணன்




HOSPITAL






# ஆண்கள் குணமே அப்படித்தான்




# தாய்நாடு தந்த தவப் புதல்வன்






சிமெந்துத் தொழிற்சாலை




மாணவர்: உபாத்தியாரே, என்ன உத்தப் பெரிய குழலுக்காலை புகை போகுது?

உபாத்தியாயர்: அது பட்டாளத்துக்குப் புட்டவிக்கிறாங்கள்:



அண்ணாச்சி உன்னிடம் பணம் இருக்கு... என்னிடம் பண்பு இருக்கு. பண்புதானண்ணாச்சி மேலானது;



பதிப்பும் மதிப்பும்

# ஆச்சி பயணம் போகிறாள்

**ஆசிரியர்:** செங்கை ஆழியான்.

**விலை:** ரூபா இரண்டு.

**விற்பனை உரிமை:** அன்பு புத்தகசாலை, 27-டி, பெரியகடை, யாழ்ப்பாணம்

---

தமிழ் இலக்கியப் பரப்பில் ஏனைய வடிவங்கள் வளர்ந்துள்ளது போன்று, நகைச்சுவை இலக்கியம் வளரவில்லை; தமிழ் நாட்டில் குறிப்பிட்டுக் கூறுவதற்கு இத்துறையில் இரண்டொருவர் இருப்பினும், ஈழத்தில் கொச்சையையும் கொன்னையையுயே அறிமுகப்படுத்தியிருந்தார்கள். இந்த மரபுக்கு முற்றிலும் மாறுபட்ட நிலையில், தரமான நகைச்சுவையை 'ஆச்சி பயணம் போகிறாள்' என்ற நவீனம் மூலம் பல்கலைக் கழகத்தின் புதிய தலைமுறையில் தேறிய 'செங்கை ஆழியான்' எமக்குத் தந்துள்ளார்.

'ஆச்சி பயணம் போகிறாள்' நகைச்சுவையை மட்டும் நமக்குத் தரவில்லை. கூடவே மாறும் ஒரு சமுதாயத்தையும் படம் பிடித்துக் காட்டுகிறது. அத்துடன் இலங்கை நாட்டின் புவியியலையும் எமக்கு அறிமுகப்படுத்துகிறது.

மொத்தம் மூன்று பாத்திரங்கள். செல்லாச்சி, செல்வி, சிவராசா. இடையிடையே வேறு சில பாத்திரங்களும் வந்து போகின்றன. செல்லாச்சி பழமையின் பிரதிநிதி. மாறும் ஒரு சமுதாயத்தின் ஒரு பிரதிநிதி. செல்வியும் சிவ்ராசாவும் நாளை தம்பதிகளாகப்போகும் இன்றைய நவீன காதலர்களில் ஒரு வகை. புதுமையும், பழமையும் சந்திக்கிறது. அங்கே நகைச்சுவை உதயமாகின்றது.

செல்லாச்சி முழுமையான பாத்திரப்படைப்பாக இருந்தபோதிலும் யாழ்ப்பாண புகையிரத நிலையத்துக்கு அண்மையில் வாசம் செய்யும் அவரால் புகையிரதப் போக்குவரத்துப் பற்றி எதுவுமே தெரியவில்லை என்று கூறுவது அப்பாத்திரத்துக்கு நாத்திட்டி' கழித்தது போல் இருக்கிறது.

'சௌ'வின் சித்திரங்கள் ஆழியானின் சொற்களுக்கு நல்ல உரமூட்டியுள்ளன. மொத்தத்தில் 'ஆச்சி பயணம் போகிறாள்' வாழப்போகும் ஒரு நூல்!

—ச. தி


பிரபல உணவுப் பொருள் இறக்குமதியாளர்கள்

நாதன் அன் கோ.

71, 4-ம் குறுக்குத் தெரு, கொழும்பு-11

தொலைபேசி: 29241.

DEALERS IN HARDWARE & MACHINE TOOLS

# DEV AND SREE ENTERPRISE

19, Abdul Jabbar Mawatha,

COLOMBO-12

*Phone:* **27044**

உங்களுக்குத் தேவையான இரும்புச் சாமான்களுக்கும்
கட்டிட உபகரணப் பொருட்களுக்கும்

இன்றே தொடர்புகொள்ளுங்கள்

# ஜலண்ட் டிரேட் செண்டர்,

437, பழைய சோனக தெரு, கொழும்பு- 12

தொலைபேசி: 31223.

தந்தி: ராஜமுர்.

*With Best Compliments of*

# S. Arumugam & Bros.

**DEALERS IN CEYLON PRODUCE**

No: 104, 4th CROSS STREET,

COLOMBO-11

T. GRAMS; "ESSAYBROS"

Phone: 29833.

Importers of Food Stuffs, Ayurvedic Drugs
Chemicals And Hardware.

**Ceylon & Overseas Traders,**

P. O. Box: 1094, 54, 4th Cross St,
COLOMBO-11

Phone:- 25176

T. Grams: Courage.

*Merchants & Agents*

**RAJAH STORES**

43, 4th Cross St, COLOMBO.

Phone:- 26722

T. Grams:- Bargain

INSIST ON

# ST. PETER'S ROOFING TILES

**P. W. D.**

*Approved Quality*

- இரும்பு,
- முள்ளுக் கம்பிகள்,
- அஸ்பஸ்ரஸ் கூரைத் தகடுகள்,
- ஓடுகள் ( ST. Peter's )

சகாய விலையில் கிடைக்குமிடம்

## கதிர் ஹார்ட்வெயர்ஸ்,

11/1, ஸ்ரான்லி றோட்,

யாழ்ப்பாணம்.

## KATHIR HARDWARES

**JAFFNA.**

Registered as a News Paper at G.P.O    Regd No. QB—934




க. தம்பித்துரை & சன்ஸ்
யாழ்ப்பாணம்.

எல்லா தையல் வேலைகளுக்கும், எல்லா நிறங்களிலும்,
எல்லா இடங்களிலும் கிடைக்கும்.

தயாரிப்பாளர்கள்:

சம்பியன் திரெட் மனுபக்சரிங்
கம்பெனி,

கொழும்பு- 12

101/4 சென். பெனடிக்ஸ் வீதி, கொட்டாஞ்சேனையிலுள்ள ஸி.சிவ ஞானசுந்தரம் அவர்களால்,
194 ஏ, பண்டாரநாயகா வீதியிலுள்ள சுதந்திரன் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.